DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர் இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals 416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
25வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
கிழக்கும் தமிழ் உலகில் எதிக்கும் தமிழ் வீரம் ஊக்க செய்தி இதழ்
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX MohanTeam.com
6888-14th Avenue Markham ON. L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1332 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 15, 2021

# கனடாவின் கொன்சர்வேர்ட்டிவ் கட்சித் தலைவருக்கு இடையூறுகள் விளைவித்தமையால் பதவி நீக்கம் செய்யப்பட்ட கட்சி உறுப்பினர் ஒருவர்





கனடாவின் கொன்சர்வேட்டிவ் கட்சியின் தேசிய சபை உறுப்பினர் ஒருவர் கட்சியின் தற்போதைய தலைவர் எரின் ஓ டூலின் தலைமையை முன்கூட்டியே மதிப்பாய்வு செய்வதற்கான முயற்சியை முன்னெடுத்து அவருக்கு இடையூறுகள் விளைவித்தமைக்காக கட்சியின் தேசிய சபையால் பதவி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

*(தொடர்ச்சி உள்ளே 16ம் பக்கத்தில்)*

# "இனப்படுகொலைக்குள்ளான எமது மக்களுக்கு நீதி கிடைக்கும் வகையில் இனி வரும் ஐந்து வருடங்களுக்கு நாம் தீவிரமான செயற்பாடுகளில் இறங்கவேண்டும்"

## பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கான நீதி மறுக்கப்படுவதற்கான காரணம் என்ன? என்ற தலைப்பில் இடம்பெற்ற கருத்தரங்கில் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு



(ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)

எமது ஈழ மண்ணில் 2009ம் ஆண்டில் இடம் பெ ற்ற கொடிதான அரச பயங்கரவாதம் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத இனப்படுகொலைக்குள்ளான எமது மக்களுக்கு நீதி மறுக்கப்படுவது தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. தாயகத்தில் தமிழர் பிரதிநிதிகளாக உள்ள அரசியல் தலைவர்களோ அன்றி புலம் பெயர்ந்த நாடுகளில் இயங்கி வரும் தமிழ் அமைப்புக்களோ சாதித்தது ஒன்றுமே இல்லை.

*(தொடர்ச்சி உள்ளே 16ம் பக்கத்தில்)*

DAWN TRANSPORTS & SERVICES
FREE ESTIMATES
மூவிங் & டெலிவெறிஸ்
26 FEET CARGO VAN
உங்கள் DELIVERY தேவைகளுக்கு
இலவச மதிப்பீடு Tel: 416-452-2251
We do packaging, wrapping, Moving to storage, Junk removal Express Services Available

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கிகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd Fl) Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

வாகன மற்றும் வீடுகளுக்கான காப்புறுதித் தேவைகளுக்கு என்னை அழையுங்கள்
Home Auto Commercial & Liability
We do all types of insurance and work with over 20 different companies.
High risk, Uber, Landlord, etc...
PLEASE CALL:
(647) 338-6916
(416) 520-6916
EMAIL: INSURANCEHELPER@OUTLOOK.COM

வீடு வாங்க விற்க
PIRAPA SIVALINGAM
Sales Representative
416-999-7482
RE/MAX

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).




5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
**416.298.FOOT (3668)**


## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS


### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

### பெண்களுக்கான வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் பெண்களுக்கான வேலை வாய்ப்புக்கள் உள்ளன. அனுபவம் தேவையில்லை.

தொடர்புகளுக்கு
**ஜெயா:**
**(647) 669-2739**

### வேலை வாய்ப்பு

We are looking for:
- Cooks (part time )
- kitchen helper
- dishwasher
- wait staff.

Ladies kitchen helper.

**Call :Amar**
**416-988-9518**

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

### Cleaning வேலைக்கு ஆட்கள் தேவை

Keele & Hwy 7 சந்திப்புக்கு அருகில் உள்ள நிறுவனத்தில் Cleaning வேலைக்கு ஆட்கள் தேவை.
Full-time: இரவு 11.00 PM தொடக்கம் காலை 7.00 AM வரை

தொடர்புகளுக்கு
**சங்கர்:**
**(416) 305-0264**

### HELP WANTED

411 College St, Toronto ON ல் அமைந்துள்ள Toby's Pub and Eatery என்னும் உணவகத்திற்கு Kitchen helper தேவை.

Day time/night time
Full time/part time.
Please call after 12 pm.
**416-879-3768**



உடல்நலத்திற்கு - உடற்பயிற்சி
மனவளத்திற்கு - மந்திரதீட்சை
உளஅமைதிக்கு - உயர்ந்தவாசியோகம்
ஆத்மஞானத்திற்கு - ஆழ்நிலைதியானம்



*Yoga Guruji*
***A N Dhanasekaran ayya***
அவர்களால்

**குருவின் திருவருளால்**
**இலவசமாக நடத்தப்படுகின்றது**

**தேதி: 15-10-2021 to 24-10-2021**

**கனடா நேரப்படி:**
காலை 8:30 மணி தொடக்கம் 10:00 மணி வரை
மாலை 7:30 மணி தொடக்கம் 9:00 மணி வரை
15-09-2021 இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது

**Zoom Id : 669 750 5000 Pwd : 223 138**

For more information call: **(647) 705-5455**

அன்பர்கள் ஏதேனும் ஒரு வேளையில் கலந்து கொள்ளலாம். முடிந்தவர்கள் இருவேளையிலும் கலந்து கொணடு பயன் பெறலாம்.

## உதயன் கதிரோட்டம்

# இலங்கையில் ஆளுனர்கள் என்னும் தனிநபர்களின் கைகளில் காட்சியளிக்கும் மாகாண சபைகள்

இலங்கையில் உள்ள மாகாண சபைகளின் பதவிக் காலம் முடிவுற்று மூன்று வருடங்கள் கடந்து விட்டன. இம்மாகாண சபைகளுக்கு மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இற்றை வரையும் நடத்தப்படாதுள்ளது. அதனால் ஆளுநர்களின் கீழ் மாகாண சபைகள் கொண்டு வரப்பட்டன. மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துமாறு ஆளும் கட்சி, எதிர்க்கட்சி மற்றும் தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளும் ஜனநாயக சிவில் அமைப்புகளும் கோரி வருகிறன.

ஆனால் மாகாண சபைகள் திட்டம் கொண்டு வரப்பட்டு முதற் தடவையாக நடத்தப்பெற்ற தேர்தலில் இந்தியாவின் ஆதரவோடு முதலமைச்சராக பதவி வகித்த வரதராஜப் பெருமாள் ஒன்றுமே செய்யாமல் தனது பதவிக்குரிய சலுகைகள் அனைத்தையும் அனுபவித்தார். பொதுவாகவே வடக்கு கிழக்கு மக்கள் ஏற்றுக்கொள்ளாத ஓர முதலமைச்சராகவே அவர் தனது நாட்களைக் கழித்தார்.

அதற்கு பின்னர் அமைந்து வடக்கு மாகாண சபையும் நீதியரசர் விக்கினேஸ்வரன் அவர்கள் தலைமையில் அமைந்தாலும் அந்த நிர்வாகத்திலும் பிச்சுப் பிடுங்கல்கள் சச்சரவுகள் என பணிக்காலம் தீர்ந்து போனது. இவ்வாறாக இலங்கையில் தமிழ் மக்களுக்கு மாகாண சபைத் திட்டம் என்புத விழலுக்கு இறைத்த நீர் போன்றே ஆனது.

அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தின் ஊடாக 1988 இல் மாகாண சபை முறைமை நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த அரசியலமைப்பு திருத்தத்திற்கு ஏற்ப மாகாண சபைகளுக்கும் அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன. அதனால் மாகாண அதிகாரக் கட்டமைப்புகளும் செயற்பாட்டில் இருப்பது அவசியமானது.

அந்த வகையில் மாகாண சபை முறை அறிமுகப்படுத்தப்பட்டது முதல் காலத்திற்குக் காலம் மாகாண சபைகளின் பதவிக் காலம் முடிவுற்றதும் தேர்தல் நடத்தப்பட்டு மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு மாகாண சபைகள் இயங்கி வந்தன. ஆனால் கடந்த மாகாண சபைகளின் பதவிக் காலம் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான நல்லாட்சி அரசாங்கக் காலத்தில் முடிவுற்ற போதிலும், அவ்வாட்சியினர் மாகாண சபைகளுக்கான தேர்தலை உரிய காலத்தில் நடத்த நடவடிக்கை எடுக்கவில்லை. ஜனநாயகப் பாரம்பரியம் குறித்து அதிகம் பீற்றிக் கொள்பவர்களாக இருந்தும் அவ்வாட்சியினர் மாகாண சபைகளுக்கு உரிய நேர காலத்தில் தேர்தலை நடத்தத் தவறினர்.

தேர்தல் ஜனநாயகப் பாரம்பரியங்கள் தொடர்பில் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கும் இந்நாட்டில் மாகாண சபைகளுக்கும் கடந்த காலங்களில் காலத்திற்குக் காலம் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்பட்டு மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு அவை இயங்கி வந்தன. ஆனால் தற்போது அவை ஆளுனர்கள் என்னும் தனிநபர்களின் கைகளில் காட்சியளிக்கின்றன.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் உதயன் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# இலங்கையில் 30 வயதுக்கு உட்பட்டோர் கொரோனாவால் உயிரிழக்கவில்லை என்கிறார் சுகாதார சேவைகள் பணிப்பாளர்

நாட்டில் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி மேலும் 21 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சற்றுமுன்னர் உறுதிப்படுத்தியுள்ளார்.

குறித்த அனைவரும் ஒக்டோபர் 13 ஆம் திகதி உயிரிழந்தவர்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, நாட்டில் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 13,429 ஆக அதிகரித்துள்ளது.

இதன்படி, ஒக்டோபர் 13 உயிரிழந்தவர்களில் 30 வயதுக்கு உட்பட்ட எவரும் உயிரிழக்கவில்லை.

மேலும், 30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட 4 ஆண்களும் 1 பெண்ணும், 60 வயதுக்கு மேற்பட்ட 11 ஆண்களும் 06 பெண்களும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு அமைய 60 வயதுக்கு மேற்பட்ட 16 பேர் ஒக்டோபர் 13 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# நவம்பர் மாதம் தொடக்கம் அமெரிக்கா தனது மெக்சிக்கோ மற்றும் கனடா ஆகிய எல்லைகளை திறக்கவுள்ளது

முழுமையாக தடுப்பூசி பெற்ற தனது நாட்டு மக்களுக்கு எதிர்வரும் நவம்பரில் அமெரிக்கா தனது மெக்சிக்கோ மற்றும் கனடா ஆகிய நாட்டு எல்லைகளை திறக்கவிருப்பதாக அறிவித்துள்ளது.

அத்தியாவசியமற்ற நோக்கத்திற்காக தரை மற்றும் படகு வழியாக எல்லை கடந்து வருபவர்களுக்கு அனுமதி அளிக்கப்படும் என்று உள்நாட்டு பாதுகாப்பு திணைக்களம் வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

எந்தப் பயணங்களுக்கும் 2022 ஜனவரி தொடக்கம் தடுப்பூசி பெற்ற அத்தாட்சி கட்டாயப்படுத்தப்படவுள்ளது.

கொரோனா பெருந்தொற்ற காரணமாக 2020 மார்ச் தொடக்கம் அமெரிக்கா தனது வடக்கு மற்றும் தெற்கு அண்டை நாடுகளுக்கு பயணக் கட்டுப்பாடு கொண்டுவந்தது.

எனினும் முழுமையாக தடுப்பூசி பெற்ற வெளிநாட்டு விமானப் பயணிகளுக்கு வரும் நவம்பர் தொடக்கம் கட்டுப்பாடுகளை தளர்த்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாக அண்மையில் முடிவெடுத்தது. கொரோனா தொற்று ஆரம்பித்தது தொடக்கம் அமெரிக்காவில் 42 மில்லியன் தொற்றுச் சம்பவங்கள் பதிவாகி உள்ளன. இந்த நோய்த் தொற்றினால் அந்நாட்டில் 670,000க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நவராத்திரி காலத்தில், இலங்கை மக்களுக்கு சீரும் சிறப்பும் கிடைக்க வேண்டும் என்கிறார் மகிந்த ராஜபக்ச

நவராத்திரி புண்ணிய காலத்தில், அன்னையின் அருளால் - இலங்கை மக்களுக்கு சீரும் சிறப்பும் கிடைக்க வேண்டுமென நவராத்திரியை அனுஸ்டிக்கும் இந்துக்களுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்த வாழ்த்து செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை மாதாவின் பிள்ளைகளாகிய நாம் அனைவரும், சமய சக வாழ்வு என்னும் நீரோட்டத்துடன் கலந்து பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

இவ்வேளையில் - உலகமெங்கும் தீராத இடராக நிலவிக் கொண்டிருக்கும் கொவிட் □ 19 தொற்றுப் பரவலும் மக்களிடையே ஓர் அச்ச உணர்வை ஏற்படுத்திக்கொண்டுதான் இருக்கிறது.

இந்த இடர் - ஆன்மிக பலத்தினாலும் சரியான சுகாதார நடைமுறைறகளைப் பின்பற்றுவதாலும் வெல்லப்படக்கூடிய ஒன்று.

வழமையாக நவராத்திரி விரதக் காலம், இந்துக்கள் தாம் வாழ்கின்ற இடமெல்லாம் கோலாகலமாகக் கொண்டாடி மகிழ்கின்ற ஒரு மிக உன்னதமான விரத காலமாகும். அந்த நிலையை மீளவும் நாம் பெற வேண்டும்.அதற்கு இறை சக்தியே துணை என்ற நம்பிக்கையுடன் நம் பிரார்த்தனை அமையவேண்டும்.

அன்னை அம்பிகையின் அருள் வேண்டிய இவ்விரதத்தின் பின் நிறைவு நாளாகிய விஜயதசமியையும் - பக்தியோடும் சுகாதார நடைமுறைகளோடு கூடியதாயும் அனுஷ்டியுங்கள்.

என் அன்பிற்குரிய இலங்கைவாழ் இந்து மக்கள் அனைவருக்கும் உன்னதமான இந்த விஜயதசமி நன்னாளிலே நல்வாழ்த்துகளைத் தெரிவிப்பதிலே நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

மனித குலத்திற்கு அடிப்படையான வீரம், கல்வி, செல்வம் ஆகிய மூன்றையும் அள்ளி வழங்குகின்ற மாபெரும் சக்திகளான -துர்க்கை, சரஸ்வதி, லக்சுமி ஆகிய நம் தாய்த் தெய்வங்களுக்கு, நமது நன்றியையும் வணக்கத்தையும் வேண்டுதலையும் தெரிவிக்கும் விரதமாக நவராத்திரி விரதம் அமைகின்றது இந்த விரத நிறைவிலே - வெற்றித் திருநாளாம் விஜயதசமித் திருநாளன்று ஆரம்பிக்கப்படும் நற்காரியங்கள் அனைத்தும் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையுடன், விஜயதசமி திருநாளை மிகுந்த பக்தியுடன் மக்கள் அனு'டிக்கின்றமை அதன் சிறப்பம்சமாகும்.நம் அனைவரையும் காக்கின்ற இறைசக்தி இந்த துன்பத்தில் இருந்தும் நம்மைக் காத்தருளும் என்று நாம் அனைவரும் நம்புவோம்.

இறை நம்பிக்கையை வளர்த்துக்கொள்வோம். இந்த நவராத்திரி நாளிலே நாடு நலம் பெற அனைவரும் ஒன்று சேர்ந்து பிரார்த்திப்போம். சிறப்பு வாய்ந்த இந்தப் புண்ணிய காலத்தில், அன்னையின் அருளால் - இலங்கை வாழ் மக்கள் அனைவரும் -அனைத்து நலன்களையும் வளங்களையும் பெற்றுச் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்திட இறை ஆசி வேண்டி வாழ்த்துகிறேனென்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச்ச தனது வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "கைதிகளைப்போல வாழுறோம்!" மாற்றத்தை ஏற்படுத்துமா மறுவாழ்வு முகாம்?



**கடல் வழியா வந்தால் மூனு மணி நேரம். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயுள்ள நேரம் அவ்வளவுதான். அப்படி இருந்தும் நாங்க இங்க அகதியளா இருப்பது எங்களுக்கு மன உளைச்சல்தான். மத்திய, மாநில அரசுகள் அதை கவனத்துல எடுத்துக்கிட்டு எங்களுக்கு இந்த நாட்டு உரிமையைத் தரணும். ஏன்னா நல்லாத் தெரியும் இலங்கைல இப்போ ராயபக்ஷேதான் ஆட்சியில இருக்காரு. அதனால் எங்களை அங்கே குடைஞ்செடுக்கறதுக்கு தயாராகத்தானிருப்பார்கள். திரும்பவும் நாங்கள் அங்க போறதாயிருந்தால், முப்பது வருசம் அகதியளா இங்க தப்ப வச்ச உயிரை அங்க கொண்டு போயி குடுக்கற மாதிரிதான் இருக்கும்.**

---

"இலங்கைத் தமிழர் அகதிகள் முகாம் இனி இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் என்று அழைக்கப்படும். இலங்கைத் தமிழர்கள் ஆதரவற்றவர்கள் அல்லர். அவர்களுக்காக நாங்கள் இருக்கிறோம்" என்று சட்டப்பேரவையில் தெரிவித்த முதல்வர் ஸ்டாலின், 110 விதியின் கீழ் அவர்களுக்கு பல்வேறு சலுகைகளையும் அறிவித்திருக்கிறார். முதல்வரின் இந்த அறிவிப்பு இலங்கைத் தமிழர்களிடம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை அறிய அவர்களின் முகாம்களுக்குச் சென்றோம். விழுப்புரம் மாவட்டத்தில் இருக்கும் கீழ்ப்புத்துப்பட்டு முகாமுக்குச் சென்றோம். புதுச்சேரி - சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் கிழக்கு நோக்கி 300 மீட்டர் தூரத்தில் தனித்துத் தெரிகின்றன அந்த குடியிருப்புகள். தென்னங்கீத்துகளாலும், அரசியல் கட்சிகளின் பேனர்களாலும் அமைக்கப்பட்டிருந்த சுற்றுச்சுவர் நம்மை வரவேற்றன. கடந்த 30 வருடமாக முகாமில் வசித்துவரும் லோகநாயகியிடம் பேசினோம். "1990-ல் இந்தியாவுக்கு அகதியளா வந்தோம். அன்று ஆட்சியில இருந்த கலைஞர்தான் 22 போட்டுகளை அனுப்பி ராமேஸ்வரம் வழியா எங்களையெல்லாம் தமிழ்நாட்டுக்கு கூட்டிக்கிட்டு வந்தாரு. அதுலதான் நானும் வந்தேன். விழுப்புரம் எம்.பி ரவிக்குமார் முயற்சியால அகதிங்கறத நீக்கி இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் என்று முதல்வர் அறிவித்திருப்பது எங்களுக்கு ஒரு நல்ல சொல்லாயிருக்குது.



எங்களின் 30 ஆண்டுகால மன உளைச்சலுக்கு முதல்வரய்யா மருந்து தடவியிருக்காரு. வான் வழியாக வந்தால் முக்கால் மணி நேரம். கடல் வழியா வந்தால் மூனு மணி நேரம். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயுள்ள நேரம் அவ்வளவுதான். அப்படி இருந்தும் நாங்க இங்க அகதியளா இருப்பது எங்களுக்கு மன உளைச்சல்தான். மத்திய, மாநில அரசுகள் அதை கவனத்துல எடுத்துக்கிட்டு எங்களுக்கு இந்த நாட்டு உரிமையைத் தரணும். ஏன்னா நல்லாத் தெரியும் இலங்கைல இப்போ ராயபக்ஷேதான் ஆட்சியில இருக்காரு. அதனால் எங்களை அங்கே குடைஞ்செடுக்கறதுக்கு தயாராகத்தானிருப்பார்கள். திரும்பவும் நாங்கள் அங்க போறதாயிருந்தால், முப்பது வருசம் அகதியளா இங்க தப்ப வச்ச உயிரை அங்க கொண்டு போயி குடுக்கற மாதிரிதான் இருக்கும். நாங்கள் சட்டவிரோதமாக நுழைஞ்தோமென்று சட்டசபையில் பேசுகிறார்கள். உயிரைத் தப்ப வைக்க பக்கத்து நாட்டுக்குத்தானே வந்திருக்கறோம்? சட்ட விரோதமாக நாங்கள் வரயில்லையே? கனடாவுக்குப் போன என்னுடைய சிஸ்டர் அஞ்சு வருஷத்துல சிட்டிசன். ஆனா எங்க தாய் நாடான இந்தியாவுல 30 வருஷமா நாங்க அகதியளாத்தான் இருக்கோம். எங்களுக்கு எல்லா சலுகைகளையும் செய்திருக்கும் ஸ்டாலின் ஐயா குடியுரிமையும் பெற்றுத் தரணும். அதேபோல ஒவ்வொரு மாசமும் எங்களை சிறைக் கைதிங்க மாதிரி வெய்யில்ல மணிக்கணக்கா நிக்கவச்சி சோதனை பண்றாங்க. வேலைக்குப் போயிருந்தாலும் அவங்க கூப்பிடற நேரத்துல அங்க நிக்கலைன்னா எங்க குடும்ப அட்டையை நீக்கிடுவாங்க. அதுக்கப்புறம் அரசோட உதவிகளும் எங்களுக்குக் கிடைக்காது. மறுபடியும் குடும்ப அட்டையை சேர்க்கணும்னா மெட்ராஸ்க்கு போயிட்டு வரணும். இதுனால எங்க புள்ளைங்க வெளில செஞ்சிக்கிட்டிருந்த வேலையும் போயிடும். அகதிங்கற பேரை எடுத்த மாதிரி, எங்களை அகதியளா நடத்தக் கூடாதுனும் உத்தரவு போடனும்னு முதல்வரய்யாவ கேட்டுக்கறோம்" என்றார்.

திருச்சி மாவட்டத்தில் துவாக்குடி அருகே உள்ள வாழவந்தான் கோட்டை பகுதியிலும், திருச்சி மாநகரில் உள்ள கொட்டப்பட்டு பகுதியிலும் இலங்கை தமிழர் முகாம்கள் அமைந்திருக்கின்றன. கொட்டப்பட்டு மறுவாழ்வு முகாமில் வசித்து வருபவரான தியாக விஜயன், "ஒரு அடிமை போலத்தான் இங்க வாழ்ந்துக்கிட்டு இருக்கோம். வர்றோம். ரேஷன் பொருளுங்க கூட குடும்பத் தலைவருக்கு 1,000/- ரூபாயும், மனைவிக்கு 750/- ரூபாயும், 12 வயசுக்குள்ள இருக்கற பசங்களுக்கு 400/- ரூபாயும் அரசு குடுக்குது. அதை மட்டும் நம்பித்தான் நாங்க வாழ்க்கையை ஓட்டிக்கிட்டு இருக்கோம். வெளியில எங்களால் எந்த வேலைக்கும் போக முடியாது. அப்படியே போனாலும் எங்களை கொலைக் குற்றவாளிகள் போல இவர்கள் கண்காணிக்கும் விதமும், நடந்துகொள்ளும் விதமும் ரொம்ப வேதனையானது" என்றார். ஈரோடு மாவட்டத்தில் ஈஞ்சம்பள்ளி, அறச்சலூர், பவானிசாகர் உள்ளிட்ட இடங்களில் முகாம்கள் அமைந்திருக்கின்றன. ஈஞ்சம்பள்ளி முகாமில் 162 குடும்பங்களைச் சேர்ந்த 500 பேர் வசித்து வருகின்றனர். 1993-ல் அரசு சார்பில் கட்டிக்கொடுக்கப்பட்ட 6 கழிப்பறைகள் பாழடைந்து போக, ஈரோட்டைச் சேர்ந்த சீமா என்ற தனியார் தொண்டு நிறுவனம் 20 கழிப்பறைகளை கட்டிக் கொடுத்திருக்கிறது. 500 பேருக்கு 20 கழிப்பறைகள் போதவில்லை என்பதால் முகாம்வாசிகளே தங்களது சொந்தப் பணத்தில் 40 கழிப்பறைகளை கட்டியிருக்கின்றனர். "இந்த கொரோனா காலக்கட்டத்துல ஒரு டாய்லெட்டை இத்தனை பேரு பயன்படுத்தறது ரொம்ப சிரமமா இருக்குங்க. சுகாதாரத்துல பப்ளிக் டாய்லெட்டை விட மோசமா இருக்கு. அரசாங்கம் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 100 சதுர அடியில் தான் வீட்டை கட்டிக் கொடுத்துருக்கு. அதுக்குள்ள தான் சமையலறை, படுக்கையறை, பாத்ரூம் எல்லாம் இருக்கு. வயசுப் புள்ளைங்க இருக்க வீட்டுல உடுப்பு மாத்துறது, தூங்குறதுன்னு எல்லாமே சிரமமா இருக்குது. சொந்தக்காரங்க யாராவது வந்தா அவங்களை பக்கத்து வீட்டுல தான் படுக்க வைக்கணும்" என்றனர்.

"பவானிசாகர் முகாமில் உள்ள 1,055 குடும்பங்களுக்கும் சேர்த்து வெறும் 30 குடிநீர் பைப்புகள் தான் இருக்கு. ஒரு குடிநீர் பைப்பை 30 குடும்பங்கள் பயன்படுத்த வேண்டியிருக்கு. ஒரு மணி நேரத்துக்குள்ள இந்த 30 குடும்பமும் எப்படி ஒரு குடும்பத்துக்குத் தேவையான தண்ணீரை புடிச்சிக்க முடியும்? 3,000 மக்கள் இருக்கற இந்த முகாம்ல வெறும் 220 டாய்லெட்தான் இருக்கு. அதுலயும் தண்ணி வசதி இல்லை. பக்கெட்டைத் தூக்கிட்டுதான் அலையணும். ஆத்தர அவசரத்துக்கு பொம்பளைங்க ஒதுங்க ரொம்ப சிரமப்படுறாங்க. நிம்மதியா டாய்லெட்கூட போக முடியலை. குடியுரிமை இல்லாததால சொந்தமா ஒரு பைக் கூட எங்க பேர்ல வாங்க முடியலை. எங்கயாவது அடிபட்டு விழுந்தாலும் எந்த இன்ஷூரன்சும் எங்களுக்குக் கெடைக்காது. ஒவ்வொரு தேர்தல் அப்பவும் எங்களுக்கு ஏதாவது விடிவு கிடைக்காதானு ஏங்கி ஏங்கியே 30 வருடம் போயிடுச்சி. எங்களுக்குக் குடியுரிமையை மட்டும் குடுத்தா போதும். வாழ்நாள் பூரா சாமி படம் இருக்க இடத்துல அவங்க படத்தை வெச்சிக் கும்பிடுவோம்" என்கிறார் பவானிசாகர் முகாமைச் சேர்ந்த ஸ்ரீகாந்தன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் தோப்புக்கொல்லை, லேணாவிளக்கு, அழியாநிலை என மூன்று இடங்களில் முகாம்கள் இருக்கின்றன. அழியா நிலை முகாமைச் சேர்ந்த ஜேசுராஜ், "எங்கள்ல இறந்தவங்களுக்கு ஈமச்சடங்கு செய்ய அரசாங்கம் 5,000 ரூபாய் தருது. ஆனா மூனு மாசத்துக்கு அப்புறம்தான் அது கையில கெடைக்குது. 1995 காலகட்டத்துல மார்க் அடிப்படையில எங்க புள்ளைங்களுக்கு டாக்டர் சீட் கெடச்சிது. அதுக்கப்புறம் அத நிறுத்திட்டாங்க. இப்போ எங்க புள்ளைங்க அதிக மார்க் எடுத்தாலும் மருத்துவப் படிப்புக்கான நீட் தேர்வு கிடைக்கறதில்ல. எங்க புள்ளைங்க பலபேருக்கு வெளி நாட்டுல போய் படிக்கறதுக்கு வாய்ப்பு கெடைக்குது. ஆனா பாஸ்போர்ட் கிடைக்காததால அந்த வாய்ப்புகளும் போயிடுது" என்கிறார்.

# நல்லைக் கந்தன் ஆலயத்தின் நிர்வாகி குகஸ்ரீ இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் மறைவுக்கு இலங்கைப் பிரதமர் அனுதாபம் தெரிவிப்பு

**இங்கு இன மத பாகுபாடு பாராட்டப்பட்டு யாரும் கண்டதில்லை. இறைவன் சந்நிதியில் அனைவரும் ஒன்றே என்ற உண்மையை நாம் இங்கு காண முடியும்.**

நம் தாய்த் திருநாட்டின் உலகறிந்த அடையாளம் இந்தப் பெருமை மிகு ஆலயம். அருள் ஒளி வீசும் அற்புத ஆலயம்.

நம் தேசத்திற்குப் பெருமை தரும் வகையில், உலகப்புகழ் பெற்ற நல்லைக் கந்தன் ஆலயத்தின் நிர்வாகத்தினைச் சிறப்புற முன்னெடுத்தவர் குகஸ்ரீ இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்கள்.

அவருக்குக் கந்தப்பெருமானின் அருட்கடாட்சம் எப்போதும் துணை நின்றது.

அதுவே குகஸ்ரீ இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்களைச் செயலாற்றல் மிக்க அடியவனாக்கியது. அப்படிப்பட்ட மகோன்னத புருஷரின் இழப்பு, நம் அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு.

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியுற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இவ்வாறு இலங்கைப் பிரதமர் மகிந்தா தெரிவித்துள்ளார்.



# இலங்கையில் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு வேண்டும் எனசிறுவர்கள் வைத்தியர்கள் சங்கம் வேண்டுகோள்



மக்கள் சரியான முறையில் சுகாதார விதிமுறைகளை பின்பற்றவில்லை எனின் மீண்டும் கொவிட் கொத்தணி உருவாகும் அபாயம் இருப்பதாக சிறுவர்கள் விஷேட வைத்தியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு வேண்டும் என விஷேட வைத்தியர் சன்ன த சில்வா தெரிவித்துள்ளார்.

பயணக் கட்டுப்பாடு மற்றும் தடுப்பூசி வேலைத்திட்டம் காரணமாக கொவிட் பரவலில் கட்டுப்பாட்டை காணக்கூடியதாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் டெல்டா வைரஸ் தொற்று பரவலி வருவதினால் எதிர்காலத்தில் மிகவும் அபாயகரமான நிலை ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவது பெற்றோரின் கடமை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உலக செய்திகள்
World News

# ஐக்கிய நாடுகள் சபை வடக்கு கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்கிறார் எம்.கே.சிவாஜிலிங்கம்



ஐக்கிய நாடுகள் சபை வடக்கு கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டுமென அமெரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா, ஜப்பான் நாடுகளை உள்ளக்கிய குவாட் அமைப்பிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தமிழ் தேசிய கட்சியின் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது தொடர்பான கடிதம் ஏற்கனவே இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், ஏனைய மூன்று நாட்டு தூதரகங்களிற்கும் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். அத்துடன், தமிழ் தேசிய கட்சிகளிற்கும், அதன் பாராளுமன்ற உறுப்பினர்களிற்கும் அந்த கடிதம் பார்வைக்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அனுப்பப்பட்ட அந்த கடிதத்திலே 1987 ஆம் ஆண்டின் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாகிய, நடைமுறையிலுள்ள மாகாண சபைகள் முறைமையானது இலங்கையால் கடந்த 3 வருடங்களாகக் கைவிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கமானது தேர்தலை நடாத்துவதற்கு எவ்வித முயற்சியையும் எடுக்காமல், பதிலாக சபைகளுக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை அகற்றுவதிலேயே ஈடுபட்டுள்ளது.

இந்திய-இலங்கை ஒப்பந்தமானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்குரிய பிராந்தியத்தை தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகமாகத் தெளிவாக அங்கீகரித்துள்ளது.

குறித்த உடன்படிக்கையின் மூலமாகக் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பிற்கான 13வது திருத்தத்தை இலங்கையானது எப்பொழுதுமே முழுமையாக அமுல்படுத்தவில்லை என்பதுடன் தற்பொழுது அதனை மேலும் பலமிழக்கச் செய்வதிலேயே ஈடுபட்டுள்ளது.

இந்திய - பசுபிக் பிராந்தியத்தில் நிரந்தர அமைதியை அடைவதற்கும் அதே சமயம் எமது பிராந்தியத்தில் சுதந்திரத்தையும் ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் உதவுவதன் பொருட்டு தமிழ் மக்கள் உலகிலுள்ள அதிகாரம்மிகுந்த நாடுகளில் ஒன்றாகிய இந்தியாவிடம் அழைப்பு விடுக்கின்றனர்.

தமிழ் மக்களுக்கு எதிரான கடந்த கால வன்முறை வடிவங்கள் மீள - இடம்பெறாமலிருப்பதற்கு உத்தரவாதம் அளிக்கவல்ல நிரந்தர அரசியல் தீர்வினை சனநாயக ரீதியில் நிலைநாட்டுவதற்காகவும், அவர்களுக்கான ஈடுசெய் நீதியை வழங்குவதன் பொருட்டும் அவர்களை அடக்குமுறையிலிருந்தும் ஆக்கிரமிப்பிலிருந்தும் விடுவிப்பதன் பொருட்டும் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிராந்தியத்திலுள்ள மக்களுக்காக ஐ.நாவினால் கண்காணிக்கப்படுகின்ற குவாட் நாடுகளான அவுஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா போன்றனவற்றால் நடாத்தப்படுகின்றதுமான பொதுசன வாக்கெடுப்பினை ஒருங்கிணைப்பதற்காக உடனடியானதும் அவசரமானதுமான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு இந்தியாவிடம் கோருகின்றேன் என்கிறார்.

# நோர்வே பாராளுமன்ற உறுப்பினர் கம்சி குணரட்ணத்தின் மனமாற்றம் குறித்து ஆய்வை மேற் கொண்டு வருகிறேன் என்கிறார் அனந்தி சசிதரன்

“அண்மையில் நோர்வே நாட்டின் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்தெடுக்கப்பட்ட கம்சி குணரட்ணம் என்னும் ஈழத்தை பிறப்பிடமாகக் கொண்ட இளம் பெண். தமிழ்த் தேசியப் போராட்ட அரசியலையும் விடுதலைப்புலிகளையும் விமர்சித்த வகையில் தற்போது உலகத் தமிழ் மக்களின் எதிர்ப்பைச் சந்தித்துள்ளார். இந்த பெண் அரசியல்வாதியின் தற்போதைய ஈழத்தமிழர் நிலைப்பாடு குறித்தும் மிகுந்த ஆர்வமெடுத்து கம்சியின் மனமாற்றம் கண்ட அரசியற் பின்னணி குறித்து நான் ஓர் ஆய்வை மேற் கொண்டுவருகிறேன். அதிலே கிடைக்கும் தரவுகளை அனைவருக்கும் பொது விளக்கத்திற்காக முன்வைக் கவும் தயாராக இருக்கிறேன்”.

இவ்வாறு யாழ்ப்பாணத்திலிருந்து அறிக்கை யொன்றை வெளியிட்டுள்ளார் முன்னாள் வடக்கு மாகாண சபை அமைச்சரும் உறுப்பினருமான அனந்தி சசிதரன் அவர்கள்.

ஈழத்தமிழர் போராட்ட அரசியலையும் விடுதலைப்புலிகளையும் விமர்சித்த கம்சி குணரட்ணத்திற்கு அனந்தி சசிதரன் சாட்டையடி பதிலை வழங்கியுள்ள அனந்தி சசிதரன் அவர்கள். குறித்த விவகாரம் தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

கம்சி குணரட்ணம் நோர்வேயில் 2009 க்கு முற்பட்ட காலத்தில் ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்துடன் சம்பந்தப்பட்ட அமைப்புகளின் உந்துதலோடு நோர்வேயின் அரசியலுக்குள் சேர்க்கப்பட்டவர். எமது அரசியற் தலைவரான மறைந்த பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களின் தலைமையில் பேச்சுவார்த்தைக்குழு ஐரோப்பா சென்றுவந்த 2002ம் ஆண்டுக்குப் பின்னான காலங்களில், அங்கு அரசியலில் இளம் புலம்பெயர் ஈழத்தமிழர்கள் பங்கேற்பதை ஊக்குவித்துவந்தார்.

அக் காலத்தில் தமிழ்த்தேசிய அரசியலுக்கான பரப்பை விரிவாக்கும் நோக்கத்தில் அரசியலுக்கு வந்த புலம்பெயர் இளைய தமிழ்ச் செயற்பாட்டாளரே கம்சி. இன அழிப்புப் போர் நடந்தபோது பொதுவெளியில் போராட்டங்களில் இவர் பங்குபற்றியதும், பகிரங்கமாகக் குரல்கொடுத்ததும், செய்திகளைத் துல்லியமாகப் பின்பற்றியவர்களுக்குத் தெரியும். இவரது அரசியல் வாழ்க்கை பின்னர் ஒரு திசைதிருப்பத்தைக் கண்டிருக்கிறது.

பலரும் இந்தத் திருப்பத்தை காணத் தவறிவிட்டனர். இந்தத் திருப்பத்தின் பின்னர் தற்போது இவர் ஈழத்தமிழர் சார்ந்த அரசியலை முன்னெடுக்கவில்லை. மாறாக, ஈழத்தமிழர் போராட்டத்தில் இருந்து, தான் வேறுபட்டவர் என்ற தோற்றப்பாட்டை உருவாக்கிவருகிறார்.

கம்சி சிலவருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வந்து முன்னாள் ஜனாதிபதி சிறிசேன போன்றவர்களைச் சந்தித்துவிட்டு விடுதலைப் புலிகளை விமர்சித்தது மட்டுமல்லாது, தற்போது இலங்கை அரசின் தற்போதைய ஜனாதிபதியையும் அவரது அரசையும் சர்வதேசம் புறக்கணிக்கும் அரசியலில் தனக்கு உடன்பாடில்லை என்ற போதனையை தமிழர் தாயகத்தில் வாழும் மக்களுக்குள் கொண்டுவருவதற்கான முகவராகவும் மாறியிருக்கிறாரோ என்ற ஐயம் எனக்கு எழுகிறது.

ஏற்கனவே விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தை அணியில் பெண்களுக்குச் சமபங்கு கொடுக்கவில்லை என்று தவறான காரணத்தைத் கம்சி குணரட்ணம் தேடிப்பிடித்துக் கூறியிருந்தார். இதனால், உலகளாவிய தமிழர் சமூகத்திடம் இருந்து கடும் விமர்சனங்களுக்கு உள்ளானார். ஏனெனில், பேச்சுவார்த்தைக் காலத்தில் விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் பல வேலைத் திட்டங்களில் அதிகளவு பெண்கள் பங்குபற்றியதைச் சர்வதேசமே அறியும்.

அதுமட்டுமல்ல விடுதலைப்புலிகள் அரசியற்குழுவின் வெளிநாட்டுப் பயணங்களிலும் சந்திப்புகளிலும் பெண்கள் நேரடியாகப் பங்கேற்றிருந்தார்கள் என்பது முழு உலகுமே அறிந்த உண்மை. 2011ம் ஆண்டுக்குப் பிறகு, நோர்வேயில் தமிழர் ஆதரவுக்கு அப்பால் அரசியலுக்கு வரக்கூடிய ஓர் அரசியல்வாதியாக இவர் உருவெடுத்திருக்கிறார். ஒஸ்லோ நகரின் துணைமேயராக இருந்த இவர் தற்போது நோர்வே நாடாளுமன்ற உறுப்பினராகியிருக்கிறார். இவர் அங்கத்துவம் வகிக்கும் கட்சியே நோர்வேயின் ஆளும் தரப்பாக தற்போது அரசாங்கத்தை அமைக்கவுள்ளது.

எரிக் சொல்கைம் முன்னர் சொல்லிவந்ததற்கும் கம்சி தற்போது சொல்லத் தலைப்பட்டிருப்பதற்கும் அதிக வேறுபாடு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இது தொடர்பாக, கடுமையான அதிருப்தியை அவருக்கும், அவர் சார்ந்த தமிழர் குழாத்தினர் எவரும் இருந்தால் அவர்களுக்கும், பதிவுசெய்யவேண்டிய கடமை ஈழத்தமிழர் அரசியலில் ஈடுபடும் பெண்ணாக எனக்கு இருக்கிறது.

இந்நிலையில் தமிழ் மக்களும் அவர்களது ஊடகங்களும் மேற்படி கம்சி மேற்கொள்ளும் முகவர் அரசியல் குறித்து ஆய்வுநிலை நின்று ஆழமாக அவதானித்து தம் கருத்துகளை வெளியிடவேண்டும் என வேண்டிக்கொள்கிறேன். ஜி. எஸ். பி. பிளஸ் போன்ற சலுகைகளை ஐரோப்பா இலங்கை அரசுக்கு வழங்குவது சரியல்ல, இலங் கை அரசு மீது புறக்கணிப்புகளை மேற்கொள்ளவேண்டும் என்று தமிழர்கள் வலியுறுத்திவரும் இந்தக் காலத்தில், கம்சி இலங்கை அரசுமீது புறக்கணிப்புகளை நோர்வே மேற்கொள்ளக்கூடாது என்பதைத் தனது கருத்தாகவும் தனது அரசியற் கட்சியின் கருத்தாகவும் முன்வைத்து வருகிறார்.

இதையே நோர்வேயின் வெளிநாட்டுக் கொள்கையாகவும் இவர் எதிர்பார்க்கிறார். அதேவேளை இலங்கைத் தீவில் போரின் இறுதிநாட்களில் நடைபெற்ற குற்றங்களைச் சர்வதேச விசாரணைக்கு உட்படுத்துவது எதிர்கால நல்லிணக்கத்துக்கு நல்லது என்ற மட்டுப்படுத்தப்பட்ட கருத்தையும் முன்வைத்திருக்கிறார். ஓர் ஈழத்தமிழ்ப் பெண்ணாக, இன அழிப்புக்கு உட்பட்ட ஈழத்தமிழரின் புலம் பெயர் முனைப்பின் காரணமாக அரசியலுக்குள் நுழைந்த



இவர், இன அழிப்புக்கான சர்வதேச விசாரணை யைக் கோருவதற்குப் பதிலாக, இங்கே நடைபெற்ற போரை விசாரிக்கவேண்டும், போரின் இறுதிநாட்களில் நடைபெற்ற குற்றங்களை விசாரிக்கவேண்டும் என்று ஐ. நா. மட்டுப்படுத்தி முன்வைக்கும் கருத்து நிலையை மட்டுமே தானும் முன்வைக்கிறார்.

இந்த அடிப்படையில் மட்டுமே இவர் சர்வதேச விசாரணை நல்லதென்ற கருத்தையும் வெளிப்படுத்துகிறாரே அன்றி, இங்கு இடம்பெற்ற இன அழிப்பு, அதற்கும் மேலாக, இன அழிப்புப் போராக அது முன்னெடுக்கப்பட்டது என்ற கருத்தை ஈழத்தமிழர் புலம்பெயர் சமூகத்தின் சார்பாக 2009 இல் தான் எடுத்திருந்த கருத்துநிலையில் மடைமாற்றம் கண்டு தற்போது பின்னடித்திருக்கிறார்.

அதாவது ஈழத்தமிழரின் கோரிக்கைக்குப் பதிலாக, சர்வதேசம் மட்டுப்படுத்தி முன்வைக்கும் இணக்க அரசியலுக்கே இவர் குரல்கொடுக்கிறார். ஈழத்தமிழர் போராட்டத்தைப் பின்புலமாகக் கொண்டு அரசியலுக்குக் கொண்டுவரப்பட்ட இவர், ஈழத்தமிழர்களுக்கான நீதியான நிலைப்பாட்டை முன்னெடுக்காதுவிட்டாலும், எதிர்மறையான கருத்தியலை ஈழத்தமிழர்களுக்கும் சர்வதேசத்துக்கும் முன் வைக்காது விட்டாலே போதுமானது. குறிப்பாக, சிறீலங்கர்களாக ஒருங்கிணையுங்கள் என்று அவர் எம்மைப்பார்த்துச் சொல்லத் தலைப் பட்டிருக்கிறார்.

இலங்கை அரசோடு பேசவும் தயார் என்று இவர் சொன்னதாக சில செய்திகள் ஊடகங் களிலும் வெளியாகியுள்ளன. இந்த வார்த்தையை வேறு சில புலம்பெயர் அமைப்புகளும் சொல்வதாக சர்வதேச சக்திகள் ஊக்குவித்துவருவதும் தெரிகிறது. ஈழத்தமிழர்கள் ஒரு மக்களாகத் திரட்சியடைந்தவர்கள். ஒரு தேசிய இனமாக எழுந்து நிற்பவர்கள். முதுகெலும்பு முறிக்கப்பட்டாலும் எமது தேசியத் தன்மையை உடைய விடமாட்டோம் என்ற அரசியலை ஜனநாயக வழியில், சர்வதேச நீதிகோரி முன்னெடுத்துவருபவர்கள்.

அவர்களின் வாரிசாக கம்சி மாறவேண்டும். அதற்கு அவருக்கு அறிவு தேவையென்றால் அதை வழங்க ஈழத்தமிழர் அரசியலில் ஈடுபடும் பெண்ணாக நான் தயாராக உள்ளேன். இந்த நேரத்தில் தான், நோர்வேயின் தற்போதைய பெண் பிரதமரான ஆர்ணா சூல்பேர்க்கிற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வலது சாரிக் கட்சியின் தலைவராக இருந்தபோதும் ஈழத்தமிழர்களின் உணர்வுகளைக் கொச்சைப்படுத்தாமல் அவர் தனது நிலைப்பாட்டை இதுவரை முன்னெடுத்துவந்திருக்கிறார்.

ஆனால், ஆட்சிக்கு வரவுள்ள தொழிலாளர் கட்சி, தான் எடுத்திருக்கவேண்டிய நிலைப்பாட்டுக்கு மாறாக ஓர் இணக்க அரசியலை முன்னெடுப்பதற்குப் பின்னால் ஏதோ ஒரு குந்தகமான காரணி இருப் பதாக எனக்குப் படுகிறது. அப்படி ஏதாயினும் இருக்கிறதா என்பதை நோர்வேயில் இருக்கும் ஈழத்தமிழர் அரசியல் அமைப்புகள், அவர்களது ஊடகங்கள், ஆராய்ந்து விரைவாகத் தெளிவுபடுத்தவேண்டும் என்ற வேண்டுகோளையும் இங்கு முன்வைக்கிறேன்.

இவ்வாறு முன்னாள் வடக்கு மாகாண சபை அமைச்சரும் உறுப்பினருமான அனந்தி சசிதரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் மற்றும் மடு கல்வி வலயங்களில் உள்ள 90 பாடசாலைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பிக்க நடவடிக்கை

## மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல்.



மன்னார் மற்றும் மடு கல்வி வலயங்களில் உள்ள 90 பாடசாலைகள் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பாடசாலைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல் தலைமையில் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் மடு கல்வி வலயத்தில் 44 பாடசாலைகள் 2588 மாணவர்களைக் கொண்டதாகவும், மன்னார் வலயத்தில் 46 பாடசாலைகள் 3784 மாணவர்களைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. இந்த நிலையில் குறித்த பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமாக உள்ளது.

குறித்த பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்ற போது பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் குறித்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெளிவு படுத்தினார்.

மேலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பஸ் போக்குவரத்து தொடர்பாக அரச மற்றும் தனியார் போக்குவரத்து துறையினருடன் கலந்துரையாடி இருந்தோம்.

அதன் அடிப்படையில் யாழ்ப்பாணம், மற்றும் வவுனியாவில் இருந்து மன்னாரிற்கு வருகின்ற ஆசிரியர்களுக்காக விசேட பஸ் சேவை ஒன்றையும் ஆரம்பிக்க உள்ளமை குறித்தும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பயணம் செய்வதற்கு முறை-யான போக்குவரத்து சேவையை ஆரம்பிக்குமாறு அரச தனியார் போக்குவரத்து துறையினருக்கு ஆலோசனை வழங்கி உள்ளோம்.

எதிர் வரும் 21 ஆம் திகதி முன் பள்ளி பாடசாலைகளையும் ஆரம்பிக்க தீர்மானித்துள்ளோம்.என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் மன்னார்,மடு வலயக்கல்வி பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பொலிஸ் அதிகாரி, ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(மன்னார் நிருபர்)

# இலங்கையில் ஓய்வுக்கான வயதெல்லையை அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம்

இலங்கையில் தனியார் துறை ஊழியர்களின் ஓய்வு பெறுவதற்கான குறைந்த பட்ச வயதெல்லையை 60 வயதாக அதிகரிப்பதற்கான திருத்த நட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதுதொடர்பாக திங்கட்கிழமை (11) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் பின்வருமாறு: 03. தனியார் துறை ஊழியர்கள் ஓய்வு பெறும் குறைந்தபட்ச வயதுச் சட்டம்

இலங்கையில் தனியார் துறை ஊழியர்கள் ஓய்வு பெறுவதற்கு தற்போது காணப்படும் குறைந்தபட்ச வயதெல்லையைத் திருத்தும் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கு 2021 மார்ச் மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, தயாரிக்கப்பட்ட அடிப்படைச் சட்டமூலம், பிரதமர் தலை-மையில் நியமிக்கப்பட்டுள்ள ஆடைக் கைத்தொழிற்துறை மற்றும் வர்த்தகத் துறைகளில் தாக்கம் செலுத்தும் கொள்கை ரீதியானதும் சட்டரீதியானதுமான விடயங்கள் பற்றி ஆராயும் குழுவில் தொடர்புடைய அனைத்துத் தரப்பினர்களின் பங்கேற்புடன் தொடர்ந்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறித்த குழுவில் எட்டப்பட்ட உடன்பாடுகளுக்கமைய முன்மொழியப்படும் சட்டம் நடைமுறைக்கு வரும் நாளில்

இலங்கையில் 52 வயதை எட்டாத ஊழியர்களின் ஓய்வு வயதை 60 வரைக்கும் நீடிப்பதற்கும், சட்டம் நடைமுறைக்கு வரும் தி-கதியில் 52 வயது அல்லது அதற்கு அதிகமான ஊழியர்களின் வயதுக்கேற்ப மூன்று பிரிவுகளின் கீழ் உயர்ந்தபட்சம் 59 வயது வரை பணியாற்றுவதற்கு இயலுமான வகையில் ஏற்பாடுகளை உள்வாங்கி சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள தனி-யார் துறை ஊழியர்கள் ஓய்வு பெறும் குறைந்தபட்ச வயதுச் சட்டத்தைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக தொழில் உறவுகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



# இலங்கையில் ஆசிரியர் போராட்டத்திற்கு தீர்வு – சம்பளத்தை அதிகரிக்க இணக்கம்

ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மேற்கொண்டு வரும் போராட்டத்திற்கு தீர்வாக இரண்டு கட்டங்களில் கீழ் சம்பளத்தை அதிகரிக்க பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளார்.

சம்பள முரண்பாட்டை நீக்குமாறு கோரி ஆசிரியர் மற்றும் அதிபர்களின் தொழிற்சங்கங்கள் 93 நாட்களாக தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூலம் முதலாம் கட்ட சம்பளத்தை அதிகரிக்க முடியும். அடுத்த இரண்டு பகுதிகளை 2023 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் வழங்க பிரதமர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் மற்றும் அதிபர்கள் சங்கங்களுக்கும் பிரதமருக்கும் இடையிலான ஒரு சந்திப்பு செவ்வாய்கிழமை (12) அலரி மாளிகையில் இடம் பெற்றது..

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள பிரச்சினை தொடர்பில் அரசாங்கம் உணர்வுபூர்வமாக செயல்படுவதாக பிரதமர் அங்கு குறிப்பிட்டார்.

பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை தடையின்றி முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தேவையின் அடிப்படையில் அரசாங்கம் இந்த தீர்வை வழங்கி இருப்பதாக அமைச்சர் தினேஷ் குணவர்தன அங்கு குறிப்பிட்டார்.

இதேவேளை முன்னெடுக்கப்பட்டுள்ள பணிப்பகிஷ்கரிப்பு மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் புதன்கிழமை (13) இறுதி தீர்மானம் மேற்கொள்ளப்படும் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

# யாழ்ப்பாணத்தில் காலணியுடன் கோவிலுக்குள் சென்ற பொலிஸ் அதிகாரி தொடர்பாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் விளக்கம்

யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் காலணியுடன் பொ-லிஸ் அதிகாரி ஒருவர் சென்ற விவகாரம் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், அது குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் விளக்கம் அளித்துள்ளார்.

இந்நிலையில், குறித்த பொலிஸ் உயர் அதிகாரி பாதணியுடன் ஆலயத்திற்குள் பிரவேசிக்கவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஆலயத்திற்குள் காலணியுடன் சென்றதாக சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் தகவல் உண்மைக்கு புறம்பானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், "குறித்த பொலிஸ் அதிகாரி ஆலய நுழைவாயிலிலேயே தமது கடமைகளில் ஈடுபட்டிருந்தார். தமது அதிகாரிகள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அனைத்து மதங்களையும் கௌரவத்துடன் மதிப்பார்கள். பொலிஸ் அதிகாரிகள் கடமையில் இருக்கும் போது மேல் சட்டையை கழற்ற கூடாது."

எனினும், நல்லூர் ஆலயத்திற்குள் பொலிஸ் அதிகாரிகள் செல்லும் போது, மேல் சட்டையை கழற்றிவிட்டே செல்கின்றனர். இது இந்து மதத்திற்கு பொலிஸார் வழங்கும் கௌரவம் என என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக வழங்கப்படுகின்ற சான்றிதழ்களினால் எந்த ஒரு பயன்பாடும் இல்லை — காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் விசனம்



காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறவுகள் கடந்த 12 வருடங்களாக தொடர்ச்சியாக சர்வதேசத்திலும் உள்நாட்டிலும் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இந்த நிலையில் குறித்த மக்களுக்கு நீதியை இது வரையில் இலங்கை அரசாங்கம் தரவில்லை. என மன்னார் மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களின் இணையத்தில் புதன்கிழமை (13) காலை ஊடக சந்திப்பு இடம் பெற்றது. இதன் போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், சர்வதேசத்தின் அழுத்தத்தின் மத்தியில் நிலைமாறு கால நீதி என்ற வகையில் உருவாக்கப்பட்ட காணாமல் போன ஆட்களுக்கான அலுவலகமானது 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தற்காலிக ஏற்பாட்டின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது.

குறித்த சான்றிதழ் தொடர்பாக பல்வேறு கருத்து வேறுபாடுகள் நிலவிய போதும் குறித்த உறவுகள் தங்களது காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் பெயர்கள் அரச கட்டமைப்புக்களில் காணாமல் ஆக்கப் பட்டுள்ளார்கள் என்ற அடிப்படையில் இடம் பெற வேண்டும் என கருதி சில பாதிக்கப்பட்ட மக்கள் பதிவுகளை மேற்கொண்டுள்ள நிலையில் காணாமல் போன ஆட்களுக்கான அலுவலகத்தின் ஆதரவு மற்றும் ஒத்துழைப்புடன் காணாமல் ஆக்கப்பட்டமைகான சான்றிதழினைப் பெற்றுக் கொள்ள உடன்பட்டு இருந்தார்கள்.

குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிப்பதற்கு முக்கிய ஆவணங்களான தேசிய அடையாள அட்டை பிரதி, பிறப்புச் சான்றிதழ், திருமண பதிவு பத்திர பிரதி, ஆணைக்குழுக்களின் எழுத்து மூலமான கடிதம், பொலிஸில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு அல்லது இடைக்கால அறிக்கை, சத்தியக்கடதாசி மற்றும் ஊடக செய்திகள் ஆகிய ஆவணங்கள் தேவைப்பாடுகளாக கோரப்பட்டுள்ளது.

இவை அனைத்தையும் தேடிப் பெற்றுக் கொள்வதற்கு குறித்த எமது உறவுகளுக்கு இரண்டு தொடக்கம் மூன்று மாதங்கள் ஆகிவிடுகின்றன.

இவ்வாறு பதிவு செய்த சான்றிதழ்களை பெற்றுக் கொண்டாலும் அச் சான்றிதழினைப் பயன்படுத்தி காணாமல் ஆக்கப்பட்ட நபருக்கு உரித்தான சொத்துக்களை விற்பனை செய்வதற்கு அல்லது காப்புறுதிப் பணத்தை பெற்றுக் கொள்வதற்கோ குறித்த அரச திணைக்களங்கள் குறித்த சான்றிதழை ஏற்றுக் கொள்ளவில்லை.

குறிப்பாக, காணாமல் ஆக்கப்பட்டமைக்கான சான்றிதழில் "ஏதேனும் சமூக சேமநல திட்டத்தின் கீழ் நன்மைகளுக்காக விண்ணப்பிக்கும் போது காணாமற்போன ஆளினதும் அத்தகைய மரணச்சொத்தினதும் சார்பில் நிறைவேற்று நிர்வாக மற்றும் நீதித்துறை அதிகாரிகளின் முன்னால் முறையீடுகளை செய்யும் போதும் காணாமற்போன ஆளின் நிலைமைக்கான எண்பிப்பாக காணப்பட்டமைக்கான சான்றிதழை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளும்படி எல்லா நிறுவனங்களையும் அதிகாரங்கொண்ட ஆட்களையும் 2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இறப்புக்களினதும் காணாமற்போன ஆட்களினதும் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 8ஓ(2) ஆம் பிரிவு தேவைப்படுகிறது" என குறிப்பிடப்பட்டிருந்தும் இறப்புச் சான்றிதழ்களையே கோருகின்றனர்.

அவ்வாறாயின் இவ் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக வழங்கப்படுகின்ற சான்றிதழ்களின் பயன்பாடு என்ன? அதனால் எந்தவொரு பயன்பாடும் இல்லை என்ற உண்மை நிலையை குறித்த உறவுகள் உணர்ந்துள்ளனர்.

மேலும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தங்களது பிள்ளைகள் தொடர்பாக மாவட்ட மட்டத்தில் அமைந்துள்ள காணாமல் போன ஆட்களுக்கான அலுவலகத்தில் சகல ஆவணங்களும் வழங்கப்பட்டு பதிவு செய்த போதும் மீண்டும் கொழும்பு தலைமை அலுவலகத்தின் தரவு முகாமைத்துவ தலைவர் கையொப்பமிட்டு மேலதிக விபரங்கள் தேவை என கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மாவட்ட காரியாலயங்களில் அனைத்து ஆவணங்களும் வழங்கப்பட்ட போதும் மீண்டும் அந்த ஆவணங்களை கோருவதானது இன்னும் பல காலங்களை கடத்தும் செயற்பாடுகளாகவே அமைகிறது. ஏற்கனவே முதற்கட்ட பதிவிற்காக காணாமல் போன ஆட்களுக்கான அலுவலகத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் முழுமையான ஆவணங்களை வழங்கியுள்ளனர்.

அது போல காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சான்றிதழை பெறுவதற்காக பிரதேச செயலகத்தில் பிறப்பு, இறப்பு பதிவாளர் பிரிவிற்கும் குறித்த ஆவணங்கள் வழங்கப்பட்டள்ளது குறிப்பிடத்தக்கது. பிரதேச செயலகத்தில் காணாமல் ஆக்கப்பட்டமைக்கான சான்றிதழை பெற்றுக் கொள்வதற்காக வழங்கப்பட்ட ஆவணங்களின் பிரதிகள் காணாமல் போன ஆட்களுக்கான அலுவலகத்திற்கும் வழங்கப்படுமாயின் குறித்த செயற்பாடு வினைத்திறனாக அமையும்.

முதல் முறையாக காணாமல் போன ஆட்களுக்கான அலுவலகத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுடைய பதிவுகளை மேற்கொள்ள வருகின்றபோதே தங்களிற்கு தேவையான சகல ஆவணங்களையும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகமானது பாதிக்கப்பட்ட மக்களிடம் கோருமாகயிருந்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் மீண்டும் அரச திணைக்களங்களிற்கு அலைந்து திரிய வேண்டிய அவசியமில்லை.

காணாமல் ஆக்கப்பட்டமைக்கான சான்றிதழை மீளப்புதுப்பித்தல் செயற்பாட்டிற்காக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மீளப்புதுப்பித்தல் விண்ணப்பப்படிவத்தை பாதிக்கப்பட்ட மக்கள் விண்ணப்பிப்பதற்காக வழங்கப்படாமை என்பது மிகப் பெரிய குறைபாடாக காணாமல் போன ஆட்களுக்கான அலுவலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் காணப்படுகின்றது.

குறிப்பாக பிறப்பு, இறப்பு பதிவேடுகளைத் தேடுவதற்கான விண்ணப்பப்படிவம், விவாக பதிவேடுகளைத் தேடுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் போன்றன அரசாங்கத்தினால் பிரதேச செயலகத்தில் அங்கிகரிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சான்றிதழ்களை மீளப்புதுப்பித்துப் பெற்றுக் கொள்வதற்கு அதற்கு உரித்தான காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சான்றிதழ்களை மீளப்புதுப்பிப்பதற்கான விண்ணப்பப்படிவம் பிரதேச செயலகத்தில் இற்றை வரை அமுலில் இல்லை.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சான்றிதழ்களை மீளப்புதுப்பிப்பதற்கு மக்கள் வரும் போது மீளப்புதுப்பித்தல் வேண்டுகோள் கடிதத்தினை குறித்த உறவுகள் பிரதேச செயலகத்தில் கையளிக்க வேண்டும் என்பது நடைமுறையில் உள்ளது. ஆனால் இக் குறித்த நடை முறைச் செயற்பாடு பற்றி மக்கள் மத்தியில் பகிரங்கமாக அறிவிக்கப்படவில்லை.

இவ்வாறு தொடர்ந்தும் ஆவணங்களை சேகரிப்பது சரிபார்க்கும் செயற்பாடுகள் என்பவற்றை மேற்கொள்ள வேண்டுமானால் இன்னும் 10 வருடங்களுக்கு மேலாக தகவல் திரட்டல் மற்றும் ஆவணப்படுத்தல் செயற்பாடு மட்டுமே பூர்த்தியாக்கப்படும். பிரதேச செயலகத்திற்கும் ஜனாதிபதி ஆனைக்குழுவுக்கும் வழங்கப்பட்ட தரவுகளை மக்களின் நலன் கருதி பகிரப்படுமானால் இவ் அலுவலகம் வினைத்திறனாக இயங்குவதற்கு வாய்ப்பாக அமையும்.

அவ்வாறு இல்லாமல் தொடர்ந்தும் இவ்வாறான காலம் தாழ்த்தல்கள் மூலம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறவுகள் தங்கள் பிள்ளைகளுக்கான நீதி கிடைக்காமலே தமது உயிர்களை இழந்து வருகின்ற நிலையில் தாமதமாகிய நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமனாகும் என்ற தோற்றப்பாட்டையே உருவாக்கும்.

தற்போதைய அரசாங்கமானது மிகவும் மந்த கதியில் நடைபெறும் காணாமல் போன ஆட்களுக்கான அலுவலகத்தின் செயற்பாட்டினை மிகவும் காத்திரமான செயற்பாடாக உருமாற்றி சர்வதேசத்திடம் அறிக்கைகளை முன்வைத்து பூசி மெழுகும் செயற்பாட்டை செய்து வரும் நிலையில் இயங்கி வருகின்றமை வருத்தத்திற்குரிய செயற்பாடாக அமைகின்றது.




எனவே, பாதிக்கப்பட்ட மக்களால் இனங்காணப்பட்ட குறைபாடுகளை அரசின் மேன்மை தாங்கிய கவனத்திற்கு கொண்டுவருவதோடு, மேலும் மேலும் காலதாமதம் ஏற்படுத்தாது சட்ட ஏற்பாடுகளை முற்று முழுதாக உள்ளடக்கிய வினைத்திறனான ஓ.எம்.பி அலுவலகத்தினையும் அதன் சேவையினையும் வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம். என அவர்கள் தெரிவித்தனர்.

குறித்த ஊடக சந்திப்பில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களின் இணையத்தின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.திலீபன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவித்தனர்.

**- மன்னார் நிருபர்**

# வவுனியாவில் காலாவதியான மருந்துகளை விற்பனை செய்த தனியார் வைத்தியசாலை




வவுனியா குடியிருப்பு குள வீதியில் அமைந்துள்ள பிரபல தனியார் வைத்தியசாலையில் காலாவதியான மருந்துகளை நோயாளி ஒருவருக்கு வழங்கியமையால் குழப்பமான நிலை ஏற்பட்டிருந்தது.

வவுனியாவை சேர்ந்த முச்சக்கரவண்டி சாரதி ஒருவருக்கு சுகவீனம் ஏற்பட்ட நிலையில் குறித்த வைத்தியசாலைக்கு சென்று செவ்வாய்கிழமை (12) சிகிச்சையினை முன்னெடுத்திருந்த துடன், மருந்தையும் பெற்று சென்றிருந்தார்.

இந்நிலையில் அந்த மருந்தினை நேற்றையதினம் இரவு அவர் பயன்படுத்திய நிலையில் சுகயீனம் ஏற்பட்டதுடன் உடலில் சில மாற்றங்களையும் அவதானித்துள்ளார்.



இந்நிலையில் குறித்த மருந்துகளை சோதித்து பார்த்தபோது ஒரு மாதத்திற்கு முன்பாகவே அவை காலாவதியாகி உள்ளமையை அறிந்து அதிர்ச்சியடைந்துள்ளார்.

பின்னர் புதன்கிழமை (13) காலை குறித்த வைத்தியசாலைக்கு சென்ற அவர் அங்கு கடமையில் இருந்தவர்களிடம் விடயத்தினை தெரியப்படுத்தியது டன், தர்க்கத்திலும் ஈடுபட்டிருந்தார்.

இதனையடுத்து அங்கிருந்த பணியாளர் காலாவதியான மருந்தை மூன்று மாதத்திற்கு பயன்படுத்தலாம் என நோயாளிக்கு தெரிவித்ததாக பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பாக மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு முறைப்பாடு வழங்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு சென்ற பாவனையாளர் அதிகார சபையின் அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், காலாவதியாகிய சில மருந்துகளையும் மீட்டிருந்ததுடன் வைத்திய சாலைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய உள்ளதாக தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் பொதுமக்களிடத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது டன், இவ்வாறான அலட்சியமான சம்பவங்களால் ஏற்படும் பாதிப்புகள் மேலும் தொடராமல் இருப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தனர்.

இந் நிலையில் குறித்த தனியார் வைத்தியசாலையின் உரிமையாளரான வைத்தியரிடம் இது தொடர்பில் கேட்டபோது, தமது வைத்தியசாலை இந்த தவறை ஏற்றுக் கொள்வதாக தெரிவித்தார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "விடுதலைப் புலிகள் இருந்திருந்தால் யாழ்ப்பாணத்தில் ரௌடிகள் தோன்றியிருக்கவே மாட்டார்கள்" என்கிறார் ஒரு குடும்பத் தலைவி



யாழ்ப்பாணம் பருத்தித்துறை - புனிதநகர் பகுதியில் சுமார் 50 வரையான வாள்வெட்டு குழு ரௌடிகள் வாள்கள், கம்பிகள் சகிகதம் பொதுமக்களின் வீடுகளுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளனர் என்ற செய்தி யாழ் குடாநாட்டு மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

"விடுதலைப் புலிகள் அமைப்பு இயங்குமானால் இந்த ரௌடிகள் தோன்றியிருக்கவே மாட்டார்கள்" என்று இந்த சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த பருத்தித்துறையைச் சேர்ந்த ஒரு குடும்பத் தலைவி தெரிவித்துள்ளதாகவும் எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக எமது செய்தியாளர் அனுப்பி வைத்த குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்படுகின்றது.

சில நாட்களுக்கு முன்னர் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் 5 ற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும், நிலைமை கட்டுக்கடங்காமல் போனதால் பருத்தித்துறை மற்றும் நெல்லியடி பொலிஸாருடன் படையினரும் உடனடியாக அழைக்கப்பட்டதாக செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது.

தாக்குதல் இடம்பெற்ற பகுதியை சேர்ந்த ஒருவரே வன்முறைக்கு காரணம் எனவும், அவரே யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் இருந்தும் சுமார் 50ற்கும் மேற்பட்ட ரௌடிகளை வாள்களுடன் இறக்கி பொதுமக்களின் மீது தாக்குதல் நடத்தியதாக சந்தேகிக்கப்படுகிறது. இதனடிப்படையில் குறித்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளதாக கூறப்படுகின்றது. குறித்த பகுதியில் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடுவோரை பொதுமக்கள் கண்டித்ததே தாக்குதல் சம்பவத்திற்கு காரணம் என கூறப்படுகின்றது. இவ்வாறான சம்பவங்கள் இனியும் தொடராமல்இருக்க பொலிசார் நடவடிக்கை எடுப்பார்களா என்றும் விசனம் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக செய்திகள்
World News

# நோர்வே நாட்டு தூதுவர் நெதர்லாந்து நாட்டு தூதுவர் டஞ்ஜா கொங்கிரிஜ்ப் ஆகியோர் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம்

கொவிட் சூழ்நிலையின் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நோர்வே மற்றும் நெதர்லாந்து நாட்டு தூதுவர்கள் விஜயமொன்றினை மேற்கொண்டு பல்வேறுபட்ட தரப்பினர்களையும் சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தனர். நோர்வே நாட்டு தூதுவர் டிரின் ஜொரான்லி எஸ்கெடல் (Trine Joranli Eskedal), நெதர்லாந்து நாட்டு தூதுவர் டஞ்ஜா கொங்கிரிஜ்ப் (Tanja Gonfgrijp) ஆகிய இருவருமே குறித்த கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு சென்ற இரு நாட்டு தூதுவர்களுடன் மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனுடன் விசேட கலந்துரையாடலொன்றில் ஈடுபட்டனர். இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வளங்கள் தொடர்பாக அரசாங்க அதிபரினால் விளக்கமளிக்கப்பட்டதுடன், அரசாங்கத்தினால் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் மாவட்ட மக்களுக்கு தேவைப்பாடாக உள்ள விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. அத்தோடு மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புதல், நிலையான வாழ்வாதார வழிவகைகள் மற்றும் கிராமிய மட்ட உட்கட்டமைப்பு விடயங்கள் உள்ளிட்ட மேலும் பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடியுள்ளதுடன், இரு நாட்டுத் தூதுவர்களையும் கௌரவிக்கும் முகமாக மாவட்ட அரசாங்க அதிபரினால் நினைவுப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் இருவரதும் மட்டக்களப்பு விஜயம் அங்கு பல அபிவிருத்தி திட்டங்களை கொண்டுவரும் என்ற நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.





கனடிய செய்திகள் Canadian News

# ரொறன்ரோவில் எருமை மாட்டின் தலைகள்

குரு அரவிந்தன்



ரொறன்ரோ துறைமுகப் பகுதியில் (Harbourfront), மக்கள் அதிகம் நடமாடும் இடத்தில் எருமை மாடுகளின் மண்டை ஓடுகள் பிரமீட் கோபுரம் போல குவிக்கப் பட்டுக் காட்சிக்கு வைக்கப்படிருந்ததைப் பார்த்ததும் ஒரு கணம் திகைத்துப் போனேன். இந்த மண்டை ஓடுகள் எங்கிருந்து கொண்டு வரப்பட்டன என்பதை அறிந்து கொள்வதற்காக, அருகே சென்று பார்த்த போதுதான் தெரிந்தது, அவை எல்லாம் செயற்கையாகச் செய்யப்பட்ட மண்டை ஓடுகள் என்பது. கடந்த காலத்தில் மிகப் பெரிய அளவில் நடந்த "உயிர்வதைகள்" (Built on Genocide) பற்றி எடுத்துச் சொல்லி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக இந்த மண்டையோட்டுக் கோபுரம் செய்யப்பட்டதாகத் தெரிகின்றது.

19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் நடந்த மனித, மிருகவேட்டை பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்லவே இந்தக் கோபுரம் அமைக்கப்பட்டது. இந்த கட்டுக்கடங்காத வேட்டைகள் காரணமாக 30-60 மில்லியன் எருமை மாடுகள் மனிதரால் வேட்டையாடிக் கொல்லப்பட்டன. இதன் காரணமாக 1880 களில் மிகச் சொற்பமான எருமை மாடுகளே எஞ்சியிருந்தன.

1250 எருமை மாடுகளின் செயற்கை மண்டை ஓடுகள் இதற்காகத் தனித்தனியாகச் செய்யப்பட்டன. Created by Indigenous artist Jay Soule | CHIPPEWAR from the Chippewas of the Thames First Nation. இதற்குச் சுமார் ஏழு மாதங்கள் எடுத்திருந்தன. இந்தக் கால்நடைகளின் மேச்சல் தரைகளில் ஐரோப்பியரின் குடியேற்றங்களுக்காகவும், தொடர்வண்டிப்பாதைகள் அமைப்பதற்காகவும் இந்த மிருகங்கள் எண்ணுக் கணக்கற்ற வகையில் அழிக்கப்பட்டதாகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. முதற்குடி மக்களின் உணவு, நிலம், மொழி மற்றும் கலாச்சாரம் போன்றவை இதன் மூலம் அழிக்கப்பட்டன.

கொலைக்காரர் சொன்னதை மட்டும்தான் நீங்கள் வரலாற்றில் படித்தீர்கள். அதன் மறுபக்கத்தையும் இப்போது அறிந்து கொள்ளுங்கள் என்று அங்கே இருந்த பதாதைகள் தெரிவித்தன. "சிங்கம் வந்து காட்டிலே என்ன நடந்தது என்று சொல்லும்வரை, வேட்டைக்காரன் சொன்னதையே நம்பவேண்டியதுதான்" என்ற ஆங்கிலப் பழமொழி அப்போது ஞாபகம் வந்தது. நாங்களும்தான், எமக்கு நடந்த அநியாயத்தை எடுத்துச் சொல்ல, மனித மண்டையோடுகளைக் காட்சிப்படுத்திப் பார்த்தோம், யாரும் ஏன் என்று கூடக் கேட்கவில்லையே!

இந்தக் காட்சிப் பொருட்கள் அக்ரோபர் 24 ஆம் திகதி வரை காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும். சுமார் 20 பதாதைகள் சுற்றிவர வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த மண்ணின் முதற்குடிமக்கள் ஐரோப்பிய குடியேற்றவாசிகளாலும், அரசாங்கத்தாலும் எப்படி எல்லாம் அழிக்கப்பட்டார்கள் என்பதன் அடையாளச் சின்னமாக இந்த மண்டையோட்டுக் கோபுரம் இருக்கின்றது என்பதைப் பதாதைகளைப் பார்த்ததும் புரிந்து கொள்ள முடியும். சொந்த மண்ணில் எங்களுக்கு என்ன நடந்ததோ, அதேதான் முதற்குடி மக்களுக்கும் இங்கு நடந்தது!







# Ontario's Premier Doug Ford, and few Ministers, Visited Runnymede Health Centre in Toronto



Ontario's Premier Doug Ford, Minister of Health Christine Elliott, Solicitor General Sylvia Jones, and Associate Minister of Mental Health and Addictions Michael Tibollo visited Runnymede Health Centre in Toronto.

The Premier and Ministers discussed the action our government is taking to help first responders suffering from PTSD. The Ontario government is investing $1 million in the planning of Runnymede Healthcare Centre's wellness and rehabilitation services project in Caledon. This will be the first facility of its kind, dedicated solely to the mental health and well-being of our incredible first responders.

Today's roundtable included President and CEO of Runnymede Health Connie Dejak, Peel Regional Council Chair Nando Iannica, Toronto Police Chief James Ramer, Toronto Fire Chief Matthew Pegg, President of the Ontario Medical Association Dr. Adam Kassam, CEO of the Registered Nurses' Association of Ontario (RNAO) Dr. Doris Grinspun, and others invested in the wellbeing of Ontario's heroes.





# ஒரு புதிய யாப்பு வருமா வராதா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

இந்த ஆண்டின் இறுதிக்குள் ஒரு புதிய அரசியலமைப்பை கொண்டு வரப் போவதாக ஜனாதிபதி கோட்டபாய அண்மையில் தெரிவித்திருக்கிறார். இலங்கை ராணுவத்தின் 72வது ஆண்டு நிறைவையொட்டி அனுராதபுரத்தில் உள்ள ஒரு படை முகாமில் நடந்த ஒரு வைபவத்தில் அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். இது அரசாங்கம் அதன் யாப்புருவாக்க முயற்சியில் மெய்யாகவே ஈடுபடுகிறதா என்ற கேள்வியை மேலும் வலிமைப்பப்படுத்தியிருக்கிறது.

யாப்பு உருவாக்கத்திற்கான நிபுணர் குழுவை சேர்ந்த ஒருவர் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் தெரிவித்த தகவல்களின் அடிப்படையில் ஒரு புதிய யாப்புக்கான சட்ட வரைபை அரசாங்கம் தயாரித்து வருவதாக கூறப்படுகிறது. அதை நம்பித்தான் சம்பந்தர் அண்மைக்காலங்களில் ஒரு புதிய யாப்பு உருவாக்கப்படும் என்று என்ற தொனிப்பட கருத்துத் தெரிவித்து வருகிறாரோ தெரியவில்லை. அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஐரோப்பிய யூனியனின் பிரதிநிதிகளோடு பேசியபொழுது சம்பந்தர் ஒரு புதிய யாப்பு உருவாக இருப்பது குறித்து கருத்து தெரிவித்திருந்தார்.

அதன்பின் இந்திய வெளியுறவுச் செயலர் இலங்கைக்கு வர இருந்த பின்னணியில் சம்பந்தர் பங்காளிக் கட்சிகளை நோக்கி ஓர் அறிக்கை விட்டிருந்தார். அந்த அறிக்கையில் கூட்டமைப்பின் ஐக்கியத்தை பாதுகாக்க வேண்டும் என்று அழைப்பு விட்டிருந்ததோடு ஒரு புதிய யாப்பு உருவாகவிருக்கும் சூழலில் கூட்டமைப்பின் ஐக்கியத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற தொனிப்படவும் கருத்து தெரிவித்திருந்தார்.

இவ்வாறு ஒரு புதிய யாப்பு குறித்த கருத்துக்களை அவர் இந்திய வெளியுறவுச் செயலரைச் சந்திக்கும் பொழுது கூறுவதை தவிர்ப்பது நல்லது என்று பங்காளிக் கட்சிகள் கருதியதாக தெரிகிறது. மாறாக சந்திப்பின்போது 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்று வெளியுறவுச் செயலரிடம் கேட்கவேண்டும் என்று ஒரு பங்காளி கட்சி சம்பந்தருக்கு வலியுறுத்தியதாக தெரிகிறது. சந்திப்பின்போது மேற்படி பங்காளிக் கட்சியின் தலைவர் அதனை தொடக்கத்திலேயே வெளியுறவுச் செயலரை நோக்கி ஒரு வேண்டுகோளாக முன் வைத்ததாகவும் அறிய முடிகிறது. இந்திய வெளியுறவுச் செயலரின் நிலைப்பாடும் அதுவாக இருந்த காரணத்தால் உரையாடலில் அந்த விடயம் பேசப்பட்டிருக்கிறது. எனினும் உரையாடலின் போக்கில் சம்பந்தர் ஒரு புதிய யாப்பை குறித்தும் கருத்து கூறியதாக அறியமுடிகிறது.

பல மாதங்களுக்கு முன்பு கூட்டமைப்பினர் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்தபோதும் இது குறித்து அவர் வலியுறுத்தியதாக தெரிகிறது. ஒரு புதிய யாப்பை உருவாக்கும் பொழுது 13வது திருத்தம் என்ற பேச்சு எழப் போவதில்லை. அப்புதிய யாப்பிற்குள் 13ஆவது திருத்தத்தின் முழு அளவு உள்ளடக்கமும் இணைக்கப்படுமாயிருந்தால் பிரச்சினை இல்லை. மாறாக 13ஆவது திருத்தத்தை விடக் குறைவான அதிகாரங்களே அதில் இருந்தால் அதைக் குறித்து இந்தியா அழுத்தம் எதையும் பிரயோகிப்பது கடினமாக இருக்கும். ஏனென்றால் ஒரு புதிய யாப்பை உருவாக்குவது என்பது இலங்கைதீவில் உள்நாட்டு விவகாரம். அதேசமயம் 13வது திருத்தம் என்பது இந்திய இலங்கை உடன்படிக்கையின் விளைவு. அதனால் இந்திய இலங்கை உடன்படிக்கையின் பிரகாரம் இந்தியா அதில் தலையிட முடியும் என்ற தொனிப்பட ஜெய்சங்கர் கூட்டமைப்பிடம் கருத்து தெரிவித்ததாக தெரிகிறது.

எனினும் அதற்குப் பின்னரும் சம்பந்தர் ஒரு புதிய யாப்பைக் குறித்து பேசும்போது 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துவது பற்றி அழுத்தமாகப் பேசுவதில்லை. இந்தியாவின் அழுத்தத்தோடு ஒரு தீர்வைப் பெற முயற்சித்தால் அது சிங்கள மக்களை பகை நிலைக்குத் தள்ளும் என்று அவர் கருதுவதாகத் தெரிகிறது. சிங்கள மக்களை பயமுறுத்தாமல் ஒரு தீர்வை பெறுவதாக இருந்தால் இந்தியஅழுத்தம் என்ற விவகாரம் ஒரு புதிய யாப்பு உருவாக்க முயற்சியில் இருக்கக்கூடாது என்று சம்பந்தர் கருதுகிறாரோ தெரியவில்லை.

கடந்த வாரம் ஜனாதிபதி அனுராதபுரத்தில் வைத்து ஆற்றிய உரை சம்பந்தரின் நம்பிக்கையை பதப்படுத்தக்கூடும். கடந்த ஜெனிவா கூட்டத்தொடரின்போது அரசாங்கம் கொழும்பிலுள்ள தூதரகங்களுக்கும் ஐநாவுக்கும் அனுப்பிய அறிக்கையில் நிலைமாறுகால நீதி செய்முறைகளை ரணில் விக்கிரமசிங்க விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து தான் முன்னெடுப்பதாக ஒரு தோற்றத்தை காட்டியிருந்தது. அத்தோற்றத்தை மேலும் பலப்படுத்த வேண்டுமாக இருந்தால் ஒரு புதியயாப்பைக் குறித்தும் பேச வேண்டியுள்ளது. ஆனால் இங்கு உள்ள பிரச்சினை என்னவென்றால் ஒரு புதிய யாப்பை அடிப்படையில் உருவாக்குவது? என்பதுதான்.

அண்மையில் இந்து பத்திரிகைக்கு பேட்டியளித்த மிலிந்த மொரகொட கூறுவதுபோல அது இந்தியாவின் உதவியோடு கூடிய ஒரு உள்நாட்டுத் தயாரிப்பாக இருக்க முடியுமா? இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சிகள் பிராந்திய மயப்பட்டுவிட்டன் அனைத்துலக மயப்பட்டுவிட்டன. திம்புவில் தொடங்கி ஒஸ்லோ வரையிலும் அதன்பின் ஜெனிவா வரையிலும் அது போய்விட்டது. எனவே அதற்கு உள்நாட்டு தீர்வு கிடையாது. இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றைக் காண்பது என்றால் ஒரு மூன்றாவது தரப்பின் மத்தியஸ்தம் அல்லது அனுசரணையோடு கூடிய ஒரு சமாதான உடன்படிக்கை அல்லது அரசியல் உடன்படிக்கை சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு இடையே எழுதப்பட வேண்டும்.

ரணில் விக்ரமசிங்கவின் யாப்புருவாக்கக் குழுவிற்கு தமிழ் மக்கள் பேரவை முன்வைத்த முன்மொழிவில் இது கூறப்பட்டுள்ளது. அவ்வாறு மூன்றாவது தரப்பின் மத்தியஸ்தத்தோடு ஒரு சமாதான உடன்படிக்கை எழுதப்பட்ட பின்னரே அந்த உடன்படிக்கையில் உடன்பாடு காணப்பட்ட விடயங்களை ஒரு சட்டக்கட்டமைப்புக்குள் கொண்டுவரும் நோக்கத்தோடு ஒரு யாப்பை வரைய வேண்டும். மாறாக இனப்பிரச்சினைக்கான தீர்வை முழுக்க முழுக்கஒரு யாப்புருவாக்க முயற்சியாகக் குறுக்கக்கூடாது.

ரணில் விக்ரமசிங்கவின் யாப்புருவாக்க முயற்சிகளில் இந்த இரண்டு அம்சங்களில் ஒன்றாகிய மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் என்ற அம்சம் ஏதோ ஒரு வடிவத்தில் இருந்தது. ஐக்கிய நாடுகள் சபையின் 30/1 தீர்மானமானது நிலைமாறுகால நீதிக்குரியது நிலைமாறுகால நீதிச் செய்முறைகளின் கீழ் ஒரு தீர்வைக் காணும் நோக்கத்தோடு நாடாளுமன்றம் சாசன பேரவையை மாற்றப்பட்டது. யாப்புருவாக்கத்திற்காக வழிநடத்த குழுவும் உபகுழுக்கள் உருவாக்கப்பட்டு ஒரு யாப்புக்கான இடைக்கால வரைபு வரை அது முன்னேறியது.

ரணில் விக்கிரமசிங்கவின் தீர்வுக்கான முயற்சிகளை இக்கட்டுரை ஏற்றுக் கொள்ளவில்லை. எனினும் அவர் ஒரு விடயத்தை ஒப்பீட்டளவில் பூர்த்தி செய்தார்.அது என்னவெனில் யாப்புருவாக்க முயற்சி என்பது பொறுப்பு கூறலின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும், நல்லிணக்கப் பொறிமுறையின் பிரிக்கப்படவியலாத ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்பதே அது. அதேசமயம் ரணில் விக்கிரமசிங்க கூட்டமைப்போடு சேர்ந்து வேறு ஒரு தந்திரத்தையும் செய்தார். என்னவெனில் நீதி விசாரணைகளில் இருந்து தீர்வுக்கான முயற்சிகளை பிரித்தார். இனப்பிரச்சினைக்கான தீர்வையும் நீதி விசாரணையையும் வேறு வேறு ஆக்கினார்.

இப்பொழுது கோட்டாபய அதன் அடுத்த கட்டத்துக்கு போக முயற்சிக்கிறாரா? அவர் யாப்புருவாக்க முயற்சிகளை பொறுப்புக்கூறலில் இருந்து பிரிக்க முயற்சிக்கிறார்.

ஒரு புதிய யாப்பு ஏன் தேவைப்படுகிறது? பழைய யாப்பு பிரச்சினைகளை தீர்க்க தவறிவிட்டது என்பதனால்தானே? பழைய யாப்பு ஏன் பிரச்சினைகளை தீர்க்க தவறியது? எனேன்றால் பழைய யாப்பு நாட்டின் பல்லினத் தன்மையை பாதுகாக்கத் தவறி விட்டது என்பதால்தான். அப்படி என்றால் ஒரு புதிய யாப்பு இலங்கை தீவின் பல்லினத் தன்மையை பாதுகாக்கும் நோக்கிலானதாக உருவாக்கப்பட வேண்டும். ஆனால் தன்னை தனிச்சிங்கள மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலம் வெற்றி பெற்றதாக காட்டிக் கொள்ளும் ஓர் அரசாங்கம் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முடியுமா? தனிச்சிங்கள மூன்றிலிரண்டு பெரும்பான்மை என்ற வெற்றிக் கோஷம் பல்லினத்தன்மைக்கு எதிரானது. நல்லிணக்கத்துக்கு எதிரானது. நிலைமாறுகால நீதிக்கு எதிரானது. ஒரு புதிய யாப்பை உருவாக்குவது என்பது நல்லிணக்க பொறிமுறையின் பிரிக்கப்பட முடியாத ஒரு பகுதியாக அமைய வேண்டும். ஆனால் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முடியாத ஒரு அரசாங்கம் எப்படி அப்படிப்பட்ட ஒரு யாப்பை உருவாக்க முடியும்? இதுதான் பிரதான கேள்வி.

மிகக்குறிப்பாக ஐநாவில் வெளியக பொறிமுறையை இந்த அரசாங்கம் நிராகரிக்கிறது. உள்ளகப் பொறிமுறையைத்தான் வலியுறுத்துகிறது. இந்தியாவுக்கான புதிய தூதுவர் மிலிந்த மொரகொட இனப்பிரச்சினைக்கு தீர்வாக உள்ளூர் தயாரிப்பான ஒரு தீர்வைதான் மனதில் வைத்திருப்பதாக தெரிகிறது. அப்படி என்றால் ராஜபக்சக்கள் உள்ளகப் பொறிமுறை, உள்நாட்டு விசாரணை, உள்நாட்டுத் தயாரிப்பான ஒரு தீர்வு என்ற வாதத்தை முன்வைக்கிறார்கள் என்பது தெரிகிறது. எனவே தொகுத்துப் பார்த்தால் நமக்கு கிடைக்கும் சித்திரம் தெளிவானது. இந்த அரசாங்கம் பொறுப்புக்கூறல், இனப்பிரச்சினைக்கான தீர்வு போன்ற எல்லாவற்றையும் அனைத்துலக மய நீக்கம் செய்வதற்கு அல்லது பிராந்தியமய நீக்கம் செய்வதற்கு முயற்சிக்கின்றதா? அவ்வாறு நல்லிணக்கத்தை, பொறுப்புக்கூறலை, இனப்பிரச்சினைக்கான தீர்வை வெளியாரின் தலையீடுகள் அற்ற உள்நாட்டு வடிவிலானதாக மாற்றுவது என்பது இறுதியிலும் இறுதியாக தமிழ் மக்களை தனிமைப்படுத்தும் ஒரு உத்திதான். அவ்வாறு பொறுப்புக்கூறலை உள்நாட்டுக்குள் குறுக்கும் ஒரு உத்திக்கு கூட்டமைப்பும் உடந்தையாக இருக்கக் கூடாது என்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் கருதுவதாக தெரிகிறது.

மேலும்,அண்மையில் ஐநாவுக்கு ஒன்றாகக் கடிதம் எழுதிய ஐந்து கட்சிகளும் அவ்வாறே சிந்திப்பதாக தெரிகிறது. 13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்பதனை சமாதானப் பேச்சுக்களுக்கான ஒரு முன்நிபந்தனையாக முன்வைக்க வேண்டும் என்று அவை கேட்கின்றன. பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு இடையே நம்பிக்கைகளை கட்டியெழுப்புவதற்கான ஒரு நிபந்தனையாக 13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்று மேற்படி கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. அப்படி ஒரு முன்நிபந்தனையை முன்வைத்தால் அது இந்தியாவையும் இது விடயத்தில் பொறுப்புக்கூற வைக்கும் என்று பங்காளிக் கட்சிகள் கருதுகின்றன. 13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்று தமிழ்த்தரப்பு கோரிக்கை வைக்க வேண்டும் என்று இந்தியா எதிர்பார்ப்பதாக தெரிகிறது. இதுவிடயத்தில் தமிழ்த் தரப்பு அதற்காக உழைத்தால்தான் இந்தியாவும் சேர்ந்து செயல்படலாம் என்ற தொனிப்பட இந்திய வெளியுறவுச் செயலர் கூட்டமைப்புடனான சந்திப்பின் போது தெரிவித்ததாகவும் ஒரு தகவல் உண்டு. சம்பந்தர் அதற்கு உடன்பாடு தெரிவித்ததாகவும் தெரிகிறது. ஆனால் அதே சமயம் ஒரு புதிய யாப்பைக் குறித்த கற்பனைகளும் அவரிடம் இருப்பதாகத் தெரிகிறது.



சரணம் சரணம்
சாய் சரணம்

எங்களது S7 PRODUCTIONS நிறுவனம்
சாய் பாபாவின் அற்புதங்கள்,
திரைப்படத்தை 5 மொழிகளில் பிரம்மாண்ட
முறையில் தயாரிக்க உள்ளோம்.

சாய் பாபா பக்தர்கள்
1 ரூபாய் முதல்
நன்கொடை வழங்கலாம்.

சாய்பாபா பக்தர்கள்
தங்கள் வாழ்வில் சாய்பாபா நிகழ்த்திய
அற்புதங்களை எங்களுக்கு எழுதி அனுப்பவும்.
நாங்கள் அதனை பரிசீலித்து
திரைப்படத்தில் காட்சிகளாக வைக்கப்படும்.

Accounts Details
The South Indian Bank Limited
ST. THOMAS MOUNT Branch, Chennai - 16.
A/C No. : 0500730000000351
IFSC. : SIBL0000540 (or)
Cheque / DD: S7 PRODUCTIONS
G-Pay & Phone Pay :9445859988

தொடர்புக்கு முகவரி:
S7 PRODUCTIONS
No.24/25, AVM Studio,
Cine Lab Campus, NSK Salai,
Vadapalani,Chennai - 26.
Tamilnadu, India.
Contact & Whatsapp:
044-48685857 / 9445859988

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அரசியல் கைதி வழக்கு – லொஹான் ரத்வத்தேக்கு எதிராக மன்னார் மேல் நீதிமன்றத்தில் தாக்கல்

## சிரேஸ்ட சட்டத்தரணி கே.எஸ்.இரத்தினவேல் முன்னிலை



லொகான் ரத்வத்தே நீதிமன்றத்தை அவமதிக்கும் விதமாக செயற்பட்டுள்ளதாகவும் இலங்கையின் குற்றவியல் சட்டத்தின் படி பாரிய குற்றச்செயலில் ஈடுபட்டுள்ளதாகவும் புதன்கிழமை (13) மன்னார் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட அரசியல் கைதி தொடர்பான வழக்கில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ். இரத்தினவேல் சமர்பணம் மேற்கொண்டிருந்தார்.

புதன்கிழமை (13) மன்னார் மேல் நீதிமன்றத்தில் சிவசுப்பரமணியம் தில்லை ராஜா என்ற அரசியல் கைதியின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. குறித்த வழக்கில் பிரதான வழக்கை விட மேலதிக சமர்பணம் மேற்கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நிலையில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ். இரத்தினவேல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றைய தினம் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது அந்த பிரதான வழக்கை விட ஒரு விடயத்தை விண்ணப்பம் செய்வதற்கு நான் அனுமதி கோரினேன்.

அதன் பிரகாரம் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சிவசுப்ரமணியம் தில்லை ராஜ் என்பவர் அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு விளக்கமறியலில் இருக்கின்றார். அத்துடன் அவரையும் சேர்த்து 14 எண்ணிக்கை அளவில் ஆண் சிறைக்கைதிகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் வடக்கு கிழக்கு மலையகத்தை சேர்ந்த தமிழர்கள்.

இதை தவிர நான்கு அல்லது ஐந்து பெண் கைதிகளும் உள்ளனர். செப்டம்பர் 12ஆம் திகதி ஒரு சம்பவம் சிறைச்சாலையில் நடந்துள்ளது. சிறைச்சாலை சீர்திருத்தத்திற்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே என்பவர் அந்த சிறைச்சாலைக்குள் அத்துமீறி புகுந்து 6 மணி அளவில் அந்த சிறைச்சாலை அதிகாரிகளை தனது அதிகாரத்திற்கு உட்படுத்தி அவர்களை பல வந்தப்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் சிறைக்கைதிகளை வெளியில் கொண்டு வரும்படி ஆணையிட்டுள்ளார்.

அவரது உத்தரவுக்கு அடி பணிந்த சிறைச்சாலை அதிகாரிகள் பத்து கைதிகளை வெளியில் கொண்டு வந்து அந்த முற்றத்தில் நிறுத்தி இருக்கிறார்கள். இந்த தருணத்தில் அந்த இராஜாங்க அமைச்சர் குடிபோதையில் இருந்ததாக அதனை அவதானித்த சிறைக்கைதிகள் தெரிவித்துள்ளனர். அத்துடன் அவர்களை இராஜாங்க அமைச்சர் ஆபாச வார்த்தைகளால் பேசி அதன் பின்னர் அவர்களை முழந்தால் இட கட்டாயப்படுத்தி உள்ளார்.

பயத்தின் நிமித்தம் தமிழ் அரசியல் கைதிகள் முழந்தாலிட்டிருக்கின்றார்கள். அத்துடன் ஒவ்வொருவராக அமைச்சர் அழைத்து நீ இராணுவத்தினரை கொலை செய்தாயா? என்று அச்சுறுத்தும் விதமாக கேட்டிருக்கின்றார். அதே நேரம் இன்றைய இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சிவசுப்பரமணியம் தில்லை ராஜா என்பவரையும் கூப்பிட்டு நீ யாரை கொலை செய்தாய் என கேட்டிருக்கிறார்.

அவர் முதலில் எனக்கு சிங்களம் தெரியாது என்று கூறிய நிலையில் பிறகு ஒரு மொழிபெயர்ப்பாளரை கூப்பிட்டு மொழிபெயர்த்து சொல்லப்பட்டது. அப்போது குறித்த அரசியல் கைதி நான் கொலை ஒன்றும் செய்யவில்லை என்றும் எனக்கு ஒரு வழக்கு மன்னார் நீதிமன்றில் நடைபெறுகிறது என தெரிவித்துள்ளார். அதன் பின்னர் அவரை தூசண வார்த்தைகளால் பேசி விட்டு இன்னும் பல கைதிகளை அச்சுறுத்தியுள்ளனர்.

அத்துடன் இன்னொரு அரசியல் கைதியை அழைத்து அவருடைய தலையில் துப்பாக்கியை வைத்து உயிர் அச்சுறுத்தல் விடுத்திருக்கிறார். மேலும் எல்லா தமிழ் அரசியல் சிறை கைதிகளிடமும் நீங்கள் ஐக்கிய நாடுகள் சபைக்கும் ஜெனிவாவுக்கும் முறைப்பாடுகளை அனுப்பியிருக்கிறீர்கள். ஆனால் ஒன்றும் நடக்காது நடக்க விட மாட்டோம் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதி தனக்கு அமைச்சர் பதவி கொடுக்கும் போது நீ தமிழ் அரசியல் கைதிகளை என்ன வேண்டும் என்றாலும் செய்யலாம். விடுதலை செய்யவும் முடியும், அல்லது அவர்களை ஒழித்துக் கட்டவும் முடியும். அதற்கான அதிகாரத்தை தருகிறேன் என்று சொல்லித்தான் எனக்கு அமைச்சர் பதவி வழங்கியிருக்கிறார் எனவும் எனவே உங்களை நான் எதுவும் செய்யலாம் நீங்கள் ஐக்கிய நாடுகள் சபைக்கு முறைப்பாடு செய்ய கூடாது என்றெல்லாம் சொல்லி கடைசியில் அந்த துவக்கை தலையில் வைத்த பொழுது சிறைச்சாலை அதிகாரிகள் தலையிட்டு அவரை சமாதானப்படுத்தி வெளியே கொண்டு போயிருக்கிறார்கள்.

அதன் அடிப்படையில் புதன்கிழமை (13) இத்தகைய சம்பவத்தை மன்னார் மேல் நீதிமன்றத்தில் கூறி சமர்ப்பணம் மேற்கொண்டதாகவும் சிரேஷ்ட சட்டத்தரணி இரத்தினவேல் தெரிவித்துள்ளார். மேலும் இவ்வாறான செயற்பாட்டின் மூலம் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்குள்ளாகின்றார் எனவும் சமர்பணத்தில் தெரிவித்ததாக தெரிவித்துள்ளார். ஏனென்றால் இந்த சிறை கைதிகள் யாவரும் நீதிமன்றத்தின் உத்தரவின் பெயரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தண்டனை பெற்றவர்கள் கூட நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமையவே தண்டனை பெற்று இருக்கிறார்கள். சிறைச்சாலையில் உள்ள அனைவரும் நீதிமன்றத்தின் கட்டளைக்கு உட்பட்டு தான் இருக்கிறார்கள். எனவே நீதி மன்றம் தான் அந்த சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கும் அவர்களுடைய பாதுகாப்புக்கும் பொறுப்பானவர்கள். சிறைச்சாலை ஒரு அரசாங்க ஸ்தாபனமாக இருந்தாலும் அரசாங்கத்தைப் போன்று சிறைக்கைதிகளை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிமன்றம் அதற்கு பொறுப்பாக இருக்கிறது.

எனவே இத்தகைய சிறைக்கைதிகளை யாராவது துன்புறுத்தினாலோ, அச்சுறுத்தினாலோ வேறு எந்த வகையில் சித்திரவதைக்கு உட்படுத்தினாலும் அவர்கள் நீதிமன்றத்தின் அதிகாரத்தை சவாலுக்கு உள்ளாக்குகிறார்கள்.

நீதிமன்றத்தை அவமதிக்கிறார்கள் என்ற அடிப்படையில் இந்த விடயத்தை நீதிமன்றம் கையாள வேண்டும் எனவும் சமர்பணத்தை மேற்கொண்டுள்ளார். இந்த விடயம் பற்றி ஒரு விரிவான விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை ஒன்றையும் சமர்பணத்தின் ஊடாக கோரியதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இராஜங்க அமைச்சர் அது மட்டுமல்ல இலங்கையின் குற்றவியல் சட்டங்களின் படி ஒரு பாரிய குற்றத்தை இழைத்திருக்கின்றார். ஒரு துப்பாக்கியை தலையில் வைப்பதன் மூலம் ஒருவரை கொலை செய்ய எத்தனித்தமை என்ற குற்றமும் அவர் மீது சாட்டப்படலாம். ஒரு சாதாரண குடிமகன் இந்த விடயத்தை செய்திருந்தால் அவர் உடனடியாக கொலை செய்ய முயற்சித்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு இருப்பார்.

ஆனால் அவர் ஒரு அதிகாரம் படைத்த ஒரு அரசியல்வாதி. அமைச்சர் என்ற படியால் சிறைச்சாலை அதிகாரிகள் கூட அவருக்கு எதிராக அவர் செய்த செயற்பாட்டிற்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாமல் போனதாகவும் அந்த சம்பவத்தை தடுக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

ஆனால் நீதி மன்றத்திற்கு அத்தகைய அதிகாரம் இருக்கிறது. இந்த விடயத்தில் சாதாரண சட்டங்களை மீறினால் உண்மையில் பொலிஸ் திணைக்களமும், சட்ட மா அதிபர் திணைக்களம் தான் உடனடியாக அவரை கைது செய்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டும்.

ஆனால் தற்போது இந்த மேல் நீதிமன்றம் உடனடியாக செய்ய வேண்டிய விடயம் என்னவென்றால் இத்தகைய ஒரு நபர் நீதிமன்றத்தின் அதிகாரத்தை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் இத்தகைய செயல்களைச் செய்த படியால் அந்த விடயத்தில் உண்மை தன்மையை அறிவதற்காக தகுந்த விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அதே நேரம் சிறைச்சாலை அதிகாரிகள் இந்த நீதிமன்றத்திற்கு சட்டரீதியாக அழைக்கப்பட வேண்டும் என்பதுடன் இந்த நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப்படும் குற்றம் சாட்டப்பட்டவர் அவருடைய சாட்சியமும் பதிவாக்கப்பட வேண்டும் எனவும் சமர்பணத்தில் குறிப்பிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் மேல் நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்ததை அடுத்து மேல் நீதிமன்ற நீதவான் சிறைச்சாலை அத்தியட்சகர் நாயகம் அவருக்கு ஒரு அறிவித்தல் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் 12ஆம் தேதி செப்டம்பர் மாதம் அனுராதபுரத்தில் நடைபெற்ற விடயம் சம்பந்தமாக விசாரித்து நீதிமன்றத்திற்கு அறிக்கை அனுப்ப வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததை அடுத்து ஒரு கட்டளை நீதவான் நீதிமன்ற நீதிபதி வழங்கி இருக்கிறார் எனவும் தெரிவித்தார்.



அதே நேரம் நவம்பர் 30 ஆம் தேதி இந்த வழக்கு மீண்டும் எடுக்கப்படும் பொழுது அந்த சிறைச்சாலை அத்தியட்சகர் நாயகத்தின் அந்த அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட வேண்டும் எனவும் அத்துடன் மேலதிகமாக கூறியதாவது எந்த ஒரு அதாவது அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சிறைச்சாலைக்கு செல்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டு இருக்கிறது சிறைச்சாலைகள் சட்டத்தின் மூலம்.

ஆனால் அதிகாலை ஐந்தரை மணியில் இருந்து மாலை ஐந்தரை மணி வரைக்கும் மட்டுப்படுத்தப்பட்டது. ஆனால் குறித்த அமைச்சர் சென்றது 6 மணிக்குப் பிறகு. அந்த சிறைச்சாலை இடாப்பு எடுக்கப்பட்டு அவர்கள் உள்ள சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் அமைச்சர் சென்று அவர்களை வெளியில் எடுத்து அவர்களை அச்சுறுத்தியது ஒரு மாபெரும் குற்றம்.

பாரதூரமான குற்றமாக கருதப்பட வேண்டும். தற்போது உள்ள நிலையில் அவர் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு வந்துள்ளார். பொரலைக்கு வந்திருக்கின்றார். வேறு எந்த சிறைசாலையிலும் அவர் மட்டுமல்ல எந்த அதிகாரம் படைத்த நபரும் செல்லக்கூடிய நிலமை காணப்படுவதால் நீதிமன்றம் நிச்சயமாக இந்த விடயத்தை பாரதூரமான விடயமாக கையாண்டு தகுந்த விசாரணை நடத்த வேண்டும்.

பிரத்யேகமாக இந்த சிறை கைதிகளுக்கான பாதுகாப்பை அதிகரிக்குமாறு நீதிமன்றம் அனுராதபுர சிறைச்சாலை அத்தியட்சகருக்கு கட்டளையிட்டு இருக்கிறது.

மேலும் நீதி சட்டத்துறை அமைச்சர் அலிசப்ரி அவர்கள் சமீபத்தில் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு விஜயம் செய்து அங்கிருந்து வெளியேறும் போது ஊடகத்துறையினருக்கு கருத்து தெரிவித்த போது அவர் கூறியிருக்கிறார் தான் தமிழ் அரசியல் கைதிகளை நேரடியாக சந்தித்து பேசியதாகவும் அவர்கள் எந்த வித அச்சுறுத்தலும் தங்களுக்கு இருக்கவில்லை என்று சொன்னதாகவும் கூறியிருந்தார்.

இது ஒரு அப்பட்டமான பொய் என்றே நான் கூற வேண்டும். ஏன் என்றால் முழு பூசணிக்காயை சோற்றில் மறைத்த மாதிரி இருக்கிறது. அவர்கள் அந்த குறிப்பிட்ட அச்சுறுத்தலுக்கு உள்ளானவர்கள். அவர்கள் தங்களுடைய பாதிப்பு பற்றி உயர் நீதிமன்றத்திற்கு தகுந்த ஆவணங்களை அளித்து இருக்கிறார்கள். சத்தியக் கடுதாசி அளித்திருக்கிறார்கள்.

ஒரு மனித உரிமை அடிப்படை வழக்குகள் போட வேண்டும் என்பதற்காக இத்தகைய சம்பவத்தை வர்ணித்து இப்படி நடந்தது துப்பாக்கி முனையில் தாங்கள் அச்சுறுத்த பட்டார்கள் என்பதை எல்லாம் ஒரு சத்தியக்கடதாசி அனுப்பியிருக்கிறார்கள். எனவே அது ஒரு நீதிமன்றத்தில் அளித்த ஒரு சாட்சியம் போன்று.

அவர்களுடைய அந்த சாட்சியத்தை மீறி நீதி அமைச்சர் இவ்வாறு கூறுவது மிகவும் ஒரு போலியான ஒரு விடயத்தை வெளியில் கூறியிருக்கிறார். அதுவும் ஒரு நீதிமன்றம் சம்பந்தப்பட்ட விடயம். அதை இவ்வாறு அப்பட்டமான பொய்களால் மொழுகுவது என்னுடைய கருத்தின்படி லொஹான் ரத்வத்தே என்ற அமைச்சர் செய்த அதே தவறை அலிசப்ரி செய்கிறார் என்பதையும் நான் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது.

அத்துடன் இன்று நீதிமன்றத்திற்கு வந்திருந்த அரசியல் கைதியின் கருத்தின் படியும் சம்பவம் நிச்சயமாக நிகழ்ந்திருக்கிறது. அவர் இன்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க தயாராக இருந்திருக்கிறார். ஆனால் நீதிமன்றம் முதலில் அந்த சிறைச்சாலை நாயகத்திடம் இருந்து அறிக்கை பெற்ற பின்னர் அவருடைய சாட்சியத்தை வெளிப்படுத்துவதற்கான ஒரு திட்டத்தைக் கொண்டு இருக்கிறது.

எனவே அரசியல்வாதிகள் இந்த விடயத்திலும் தலையிடாமல் ஒரு சரியான விடயத்தை அதுவும் நிதியமைச்சர் என்ற பதவியில் இருப்பவர் தான் தோன்றித்தனமாக அரசாங்கத்தை சார்ந்தவர்களை காப்பாற்றுவதற்காக செயல்பட கூடாது. யார் குற்றம் இழைத்திருந்தாலும் அது அரசியல் வாதியாக இருந்தாலும் சரி அதிகாரிகளாக இருந்தாலும் சரி அவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும். சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்ட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர்**

இந்தியா செய்திகள்
India News

# கனடாவிலிருந்து கருணையுள்ளம் படைத்த ஒருவரால் வழங்கப்பெற்ற நிதி அன்பளிப்பில் தமிழ்நாடு திருச்சியில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன





தமிழ்நாடு திருச்சியில் இயங்கிவரும் நந்தவனம் பவுண்டேசன் ஏற்பாட்டில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் "இருப்பதில் பகிர்வோம்" திட்டத்தின் மூலம் 11 ஆவது மாதமாக 09/10/2021 அன்று திருச்சியில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

கனடாவைச் சேர்ந்த சமுக சேவகரும் விலா கருணா முதியோர் இல்லத்தின் நிறுவனருமான இந்திராணி





நாகேந்திரம் அவர்களின் தந்தை சிதம்பரநாதன் தயார் கருணா கடச்சி நினைவாக வழங்கிய நிதியுதவியைக் கொண்டு. திருச்சியைச் சேர்ந்த பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள ரூபாவுக்கு தையல் இயந்திரமும் அலிமா, ரேவதி, நாகரெத்தினம், பானுமதி, ஈஸ்வரி, ராதா, நாக வேணி, பாத்திமுத்து, மற்றும் லெட்சுமி ஆகியோருக்கு உணவுக்குத் தேவையான அரிசியும் வழங்கப்பட்டது.

நந்தவனம் பவுண்சேன் நிறுவனர் நந்தவனம் சந்திரசேகரன் நேரில் சென்று பயனாளிகளுக்கு உதவிகளை வழங்கினார்.

இருப்பதில் பகிர்வோம் திட்டத்திற்கு தொடர்ச்சியாக நியுதவி வழங்க விரும்புபவர்கள் தொடர்புகொள்ளலாம் +91 9443284823.

# தமிழக கிராம பஞ்சாயத்து உறுப்பினர்களாக 59 நடிகர் விஜய் ரசிகர்கள் வெற்றி



9 மாவட்டங்களுக்கான ஊரக உள்ளாட்சித் தேர்தலில் விஜய் புகைப்படத்தை முன்னிறுத்தி சுயேச்சையாக போட்டியிட்ட வேட்பாளர்களில் 59 பேர் கிராம பஞ்சாயத்து உறுப்பினர்களாக வெற்றி பெற்றிருக்கின்றனர். இதனி-டையே ஆர்வமிகுதியில் கிராம வார்டு கவுன்சிலர் பதவிக்கும், மாவட்ட கவுன்சிலர் பதவிக்கும் வித்தியாசம் தெரியாத பலர் விஜய் ரசிகர்கள் மாவட்ட வார்டுகளில் வெற்றி என இடை இடையே கொளுத்திப்போட்ட நிகழ்வும் நடந்துள்ளது. 9 மாவட்டங்களுக்கான ஊரக உள்ளாட்சித் தேர்தலில் விஜய் மக்கள் இயக்கத்தை சேர்ந்த பலர் சுயேச்சை வேட்பாளர்களாக தேர்தல் ஆனையத்தால் வழங்கப்பட்ட சின்னத்தில் பல்வேறு பதவியிடங்களுக்கு போட்டியிட்டனர். தனது மன்றம் சார்பில் போட்டியிடாமல் எல்லோரும் சுயேச்சையாக களமிறங்கியதால் விஜயும் இந்த விவகாரத்தை பெரிதுபடுத்தாமல் நடப்பதை அமைதியாக கவனித்து வந்தார்.

இந்நிலையில் நாட்டின் முதுகெலும்பான கிராமங்களில் கிராம பஞ்சாயத்து உறுப்பினர்களாக விஜய் ரசிகர்கள் 59 பேர் வெற்றி பெற்றுள்ளனர். இந்த 59 பேரில் 13 பேர் போட்டியின்றி தேர்வானது குறிப்பிடத்தக்கது. அவ்வாறு அவர்கள் போட்டியின்றி வெற்றி பெற்றதற்கு அவர்களுக்கு ஊருக்குள் இருந்த தனிப்பட்ட செல்வாக்கே காரணமாக கருதப்படுகிறது. கிராம பஞ்சாயத்துக்களில் என்ட்ரி கொடுத்த விஜய் ரசிகர்களால் ஒன்றிய வார்டுகளிலும், மாவட்ட வார்டுகளிலும் வெற்றிபெற முடியவில்லை.

இதனிடையே ஒரு ரசிகர் ஊராட்சி மன்றத் தலைவராக வெற்றி பெற்றிருக்கிறார் எனவும் கூறப்படுகிறது. ஆனால் அது குறித்த முழுமையான தகவல் வெளியாகவில்லை. தனது ரசிகர்கள் தேர்தலில் போட்டியிட்டதையும், வெளியாகும் முடிவுகளையும் நடிகர் விஜய் எப்படி பார்க்கிறார் என விஜய் ரசிகர் மன்ற பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்திடம் நாம் பேசி-ய போது, "இது குறித்து தள-பதி விஜயிடம் அனுமதி பெற்ற பிறகு உங்களை நேரில் சந்தித்து பேசுகிறேன்" என்றார்.

நட்பின் அடிப்படையில் எந்தெந்த ஊர்களில் வெற்றி என்பதை உரியவர்கள் தம்மை அழைத்துச் சொல்வதாகவும் அதை தாம் குறித்து வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். இது தொடர்பான தகவலை உங்களை போன்றோர் கேட்பதால் நட்பின் அடிப்படையில் பகிர்ந்தேனே தவிர மற்றபடி நான் அறிக்கை எதுவும் வெளியிடவில்லை என முடித்துக்கொண்டார்.

# ஆந்திர மாநிலம் நெல்லூரில் ரூ.5 கோடி நோட்டுகளால் அம்மனுக்கு அலங்காரம்



ஆந்திர மாநிலம் நெல்லூரில் உள்ள கன்னிகா பரமேஸ்வரி கோயிலில் ரூ.5 கோடி பணத்தை பயன்படுத்தி அம்மனையும் கோயிலையும் அலங்கரித்து பிரம்மிக்க வைத்தனர். தசரா பண்டிகை ஆந்திராவில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது. மாநிலத்தில் உள்ள அனைத்து அம்மன் கோயில்களிலும் கடந்த 7-ம் தேதி முதல் சிறப்பு வழிபாடு நடைபெற்று வருகிறது. குறிப்பாக, விஜயவாடா கனகதுர்க்கையம்மன் கோயில், திருச்சானூர் பத்மாவதி தாயார் கோயில், ஸ்ரீ-சைலம் மல்லிகார்ஜுனா கோயில் உள்ளிட்ட முக்கிய ஆலயங்களில் மாலையில் அம்மனுக்கு விதவிதமான அலங்காரங்கள் செய்யப் படுகின்றன.

இந்நிலையில், ஆந்திர மாநிலம் நெல்லூரில் உள்ள ஸ்ரீவாசவி கன்னிகா பரமேஸ்வரி கோயிலில் நேற்று ரூ.5 கோடிக்கு புத்தம் புதிய நோட்டுகளைப் பயன்படுத்தி அம்மனையும், சந்நிதி உள்ளிட்ட பிற இடங்களையும் அலங்கரித்தனர். வாயிற்படி முதல் கர்ப்பக்கிரகம் வரை 500, 200, 100, 50, 20 ரூபாய்நோட்டுகளால் தோரணங்கள், அலங்கார வளைவுகள், மாலைகளும் செய்திருந்தனர். மேலும் தங்க பிஸ்கெட்களும் வைத்திருந்தனர். இதனால் மிகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை கோயில் நிர்வாகிகள் செய்திருந்தனர். பக்தர்களை குறைந்த எண்ணிக்கையிலேயே தரிசனத்துக்கு அனுமதித்தனர்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# 13 வது திருத்தச்சட்டத்தில் கூறப்படுகின்ற அனைத்தையும் நடை முறை ப்படுத்துகின்ற முறைமையை இந்தியா செயல்படுத்த வேண்டும்

மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என்பதில் எங்களுடைய கோரிக்கை பிரதானமானதாக உள்ளது.எனினும் 13வது திருத்தச்சட்டத்தில் கூறப்படுகின்ற அனைத்து விடயங்களையும் நடை முறைப் படுத்துகின்ற ஒரு வழி-யை கையாளுகின்ற முறைமையை இந்தியா செய்ய வைக்க வேண்டும் என்பது தமிழ் தேசியக்கூட்டமைப்பின் கோரிக்கை என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் வியாழக்கிழமை (14) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்தின் திட்டமிடப்படாத செயற்பாட்டினால் இன்று போராட்டங்கள் இடம் பெற்று வருகிறது.குறிப்பாக வி-வசாயிகளின் நிலைமை மோசமான சூழலில் காணப்படுகின்றது. நாட்டிற்கே உணவை வழங்குகின்ற விவசாயிகளின் நிலைமை மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

சாமானிய விவசாயிகள் தமது நிலங்களில் விவசாயம் செய்வது ஒரு பக்கம்.குத்தகை என்ற அடிப்படையில் நிலத்தை பெற்று விவசாயம் செய்கின்ற நிலையும் காணப்படுகிறது. மேலும் தமது தங்க நகைகளை அடகு வைத்தும், வங்கிக் கடன்களை பெற்று விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர்.

தற்போது விவசாயிகளுக்கு உரம் வழங்கப்படாமையால் மிக மோசமான ஒரு நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் விவசாயிகள் தமது உணவுக்கான பிரச்சினையையும் எதிர் நோக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. திட்டமிடப்படாத செயற்பாடு என கூறியமைக்கு காரணம் விவசாயிகளை இயற்கையான பசளைக்கு மாற்ற வேண்டும் என்றால் அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.உடனடியாக செயற்கை உரத்தை நிறுத்தி இயற்கை உரங்களுக்கு மாறுங்கள் என்று கூறினால் விவசாயிகளால் என்ன செய்ய முடியும்? வேடிக்கையாக உள்ளது. எனவே விவசாயிகளுக்கு செயற்கை உரங்களை வழங்கிக்கொண்டு இயற்கையான உரத்திற்கு மாறுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். ஆனால் அரசாங்கம் படு மோசமான நிலமையை ஏற்படுத்தி, இன்று வெளியில் இருந்து பசளையை கொண்டு வர உள்ளதாக கூறுகின்றனர்.

விவசாயிகள் தற்போது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் காலமாக உள்ளது.ஆனால் உரம் இல்லை, மருந்து இல்லை. இவ்வாறான சூழ்நிலையில் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாய நடவடிக்கைகளுக்காக அடகு வைக்கிற தங்க நகைகளை மீட்கவும், பெற்றுக் கொண்ட கடனை மீளச் செலுத்தவும் விவசாயிகள் திண்டாடுகின்றனர். இதனால் இலங்கை பாரிய பஞ்சத்தை எதிர்நோக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.எனவே அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எங்களுடைய விவசாயிகளுக்கு உரத்த வழங்கி விவசாயத்தை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். விவசாயிகளுடனும், விவசாய அமைப்புக்களுடனும் கலந்துரையாடி வருகிறோம். என தெரிவித்தார்.

மேலும் மாகாண சபை தேர்தல் தொடர்பாக கருத்து தெரிவிக்கையில், இந்தியாவின் அழுத்தம் காரணமாக மாகாண சபை தேர்தலை நடத்த உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.மாறி மாறி ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தை தெரிவிக்கிறார்கள். அரசியல் சாசனம் திருத்தம் செய்யப்பட்டதன் பின்னர் தான் தேர்தல் இடம்பெறும் என கூறுகிறார்கள்.

அடுத்த வருடம் தேர்தலை நடத்த உள்ளதாகவும் தெரிவிக்கின்றார்கள்.



புதிய தேர்தல் முறையில் தான் தேர்தல் நடத்த வேண்டும் என்று தெரிவிக்கின்றார்கள்.

13 ஆவது திருத்தச் சட்டம் என்று டெல்லியில் சென்று பிரதமர் அவர்கள் ஜனாதிபதியாக இருந்த போது தன் அதிகாரங்களை பிளஸ் என்று சொல்லி வெ-ளியில் வந்த பின் 13ஐ கொடுக்க முடியாது என்று சொல்லி பேசுகின்ற சந்தர்ப்பங்கள் போல் உள்ளது.

எனவே மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என்பதில் எங்களுடைய கோரிக்கை பிரதானமானதாக உள்ளது. அதே நேரத்தில் 13 வது திருத்தச்சட்டத்தில் கூறப்படுகின்ற அனைத்து விடயங்களையும் நடை முறைப் படுத்துகின்ற ஒரு வழியை கையாளுகின்ற முறைமையை இந்தியா செய்ய வைக்க வேண்டும் என்பது எமது கோரிக்கை.

அதிகாரம் இல்லாத மாகாண சபையை நாங்கள் ஏற்றுக் கொண்டு அதனூடாக எங்களது நிலங்களை பாதுகாப்பது மற்றும் எமது பிரச்சனைகளை கையாள்வது என்பது மிக ஒரு கேளித்தனமான விடையமாக நாங்கள் பார்க்கின்றோம்.

எனவே 13 வது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடை முறைப்படுத்தியதன் பின்னர் மாகாண சபை தேர்தலை நடத்துவது என்பது தான் சிறந்ததாக அமையும். இந்தியா இவ்விடயத்தில் முனைப்புடன் செயல்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்கிறேன். என தெரிவித்தார்.

மேலும் இந்திய மீனவர்களின் அத்து மீறிய பிரவேசம் கட்டுப்படுத்தப்பட்ட வேண்டும். மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எமது மீனவர்களை காப்பாற்ற வேண்டிய நடவடிக்கையில் இறங்க வேண்டும். அதற்கான நடவடிக்கைளை அவர் எடுக்கும் போது அவருடன் சேர்ந்து செயல்பட தயாராக இருக்கிறோம். பாதிக்கப்பட்ட எமது மீனவர்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும். எனவே எதிர்வரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாமல் இருக்க திட்டத்தை வகுத்து செயல்படுவதே சாலச் சிறந்தது. என அவர் தெரிவித்தார்.

இதேவேளை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமையை தான் ஏற்க தயார் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்து தொடர்பாக ஊடகவியலாளர்கள் வினவினர். இதன் போது அவர் கருத்து தெரிவிக்கையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய தலைவராக உள்ள பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் அவர்களுக்கு பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை என்பது கூட்டுத்தலைமையாக இருக்கும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை யை தான் ஏற்க தயார் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்து அவரின் தனிப்பட்ட கருத்தை தெரிவித்துள்ளார். அதை ஏற்பதா? இல்லையா? என்பதை தமிழ் தேசியக்கூட்டமைப்பு முடிவெடுக்கும். சம்பந்தன் அவர்களின் காலத்தின் பின் கூட்டுத்தலைமையாக தமிழ் தேசியக்கூட்டமைப்பு செயல்படும். அவரின் தனிப்பட்ட கருத்தை பெரிய விடயமாக பார்க்கத் தேவையில்லை.என அவர் மேலும் தெரிவித்தார்.

DEBT FREE CREDIT SOLUTION

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்
  We shield you from your creditors and offer you a guranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு
  We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பிற்கு உரிய வழிமுறை செய்தல்
  We arrange a sensible Repayment Plan minimizing potential lossesand avoiding bankruptcy

DF CREDIT SOLUTION
SETTLEMENT | CONSUMER PROPOSAL | BANKRUPTCY

Head Office
10 Milner, Business court, Suite 334
Toronto, ON M1B 3C6

416. 834. 7227
www.dfcstoday.ca
info@dfcs.today

Branches
Mississauga | Vaughan



ELANKEERAN THAN
Certified Insolvency Counsellor

# இலங்கையில் அரச உத்தியோகத்தர் அல்லது சாதாரண பிரஜை தனது சம்பளத்தில் வாழ முடியாத சூழ் நிலையே தற்போது உள்ளது

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்.



மீனவர்கள் மற்றும் விவசாயிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கமும், உரிய அமைச்சுக்களும் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளாத நிலையில் விவசாயிகளும், மீனவர்களும் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்ற நிலையில் தற்போது அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் மக்களுக்கான பாரிய பிரச்சினையாக காணப்படுவதாக தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார். அவர் வழங்கிய விசேட செவ்வி முழுமையாக.

**கே:** *தற்போது நாட்டில் இரசாயன பசளை நிறுத்தப்பட்டு சேதன பசளை மூலம் இலங்கையில் உற்பத்தியை மேற்கொள்ள அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. எனினும் விவசாயிகள் பசளை இன்றி விவசாய நடவடிக்கையை முன்னெடுக்க முடியாத நிலையில் உள்ளனர். குறித்த விடயம் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன?*

**பதில்:** கடந்த ஜனாதிபதி தேர்தலின் பிற்பாடு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஸ இரசாயன பசளையை நிறுத்தி சேதன பசளை மூலம் இலங்கையில் உற்பத்தியை மேற்கொள்ள உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

ஆனால் குறித்த முயற்சி முழுமையாக தோல்வியடைந்து விவசாயிகள் தற்போது வீதியில் நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது சேதன பசளை-யும் இல்லை. விவசாயிகள் நெல் விதைக்கும் ஆரம்ப கால பகுதியில் பசளை இல்லாமல் எவ்வாறு விதைப்பது என்று உள்ளனர்.

விவசாயிகளும் விவசாய அமைப்புக்களும் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்து வருகின்றனர். நாட்டில் உள்ள விவசாய அமைச்சு விவசாயிகளுக்கு பசளை வழங்காத நிலையில் கண்டனத்தை தெரிவித்துக் கொள்வதோடு, விவசாயிகளுக்கு பசளையை கொடுத்து உள்ளூர் உற்பத்தி யை ஊக்குவித்து நாட்டு மக்களுக்கு அரிசியை வழங்க முயற்சி எடுப்பதா? அல்லது பசளையை நிறுத்தி வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்து மக்களுக்கு வழங்கி விவசாயிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதா? என்ற சிந்தனையில் விவசாயிகள் இருக்கிறார்கள்.

தற்போது அரசாங்கம் அரிசியின் விலையை குறைப்பதற்கு அல்லது அவர்கள் தங்களுடைய சொந்த இலாபத்திற்காக அரிசியை இறக்குமதி செய்ய தீர்மானித்துள்ளார்கள். விவசாயிகளுக்கு பசளையை வழங்கி இருந்தால் அரி-சி இறக்குமதி செய்ய வேண்டிய தேவை இல்லை.எனவே அரசாங்கம் உடன-டியாக விவசாயிகளின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும்.

**கே:** *இலங்கை இந்திய மீனவர்களுக்கு இடையில் தொடர்ச்சியாக பிரச்சினைகள் இடம்பெற்று வருகின்றது. வடக்கை சேர்ந்த தமிழர் ஒருவர் மீன்பிடி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரின் செயல்பாடுகள் மற்றும் மீனவர்களின் பிரச்சினை குறித்து உங்கள் கருத்து என்ன?*

**பதில்:** இலங்கை இந்திய மீனவர்களுக்கிடையில் தொடர்ச்சியாக பிரச்சினைகள் இடம் பெற்று வருகின்றது. யுத்தத்திற்கு பிற்பாடு இந்திய இழுவைப்படகுகள் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. குறிப்பாக இலங்கையின் வட கடல் பகுதிக்குள் அவர்களின் மீன்பிடி ஆதிக்கம் காணப்படுகின்றது. இந்தியாவின் இழுவைப்படகுகளினால் இலங்கையில் உள்ள தமிழ் பகுதிகளில் உள்ள மீனவர்கள் பாதிக்கப்படுகின்ற காரணத்தினால் இலங்கை அரசாங்கம் காத்திரமான ஒரு செயல்பாட்டை முன்னெடுப்பது இல்லை.

கடந்த அரசாங்கத்தில் இருந்த போது எங்களுடைய தொடர்ச்சியான அழுத்தங்களால் பல இந்திய படகுகள் பிடிக்கப்பட்டுள்ளதோடு கட்டுப்பாட்டு நிலைக்கு கொண்டு வரப்பட்டது.

ஆனால் தற்போது மன்னார், முல்லைத்தீவு மீனவர்கள் பாதிக்கின்ற அளவிற்கு இந்திய இழுவைப்படகுகள் வந்து செல்கிறது.

கடற்றொழில் அமைச்சரும், அரசாங்கமும் இவ்விடயத்தில் மௌனம் காத்து வருகின்றனர். இதற்கு பிரதானமான காரணம் இந்தியாவிற்கு பயந்து அவர்கள் முடிவுகளை எடுக்க தயங்குகிறார்கள். இவ்விடயம் தொடர்பில் கடற்றொழில் அமைச்சரிடமும் நான் நேரடியாக தெரிவித்துள்ளேன். அரசாங்கத்திடமும் பல முறை பாராளுமன்றத்தில் கதைத்துள்ளேன். ஆனால் இவ் விடயத்தில் கடற்றொழில் அமைச்சும் அரசாங்கமும் எவ்வித ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

அண்மைக்காலமாக மிக மோசமாக இந்திய இழுவைப்படகுகள் வந்து வட கடலில் இருக்கின்ற எமது மீனவர்களின் வலைகளையும், படகுகளையும், மீன்பிடி உபகரணங்களையும் சேதப்படுத்தி சென்றுள்ளனர்.

இதனால் எமது மீனவர்களுக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இவ்விடயத்தில் கடல் தொழில் அமைச்சு மௌனமாக இருப்பதை விட கடல் தொழில் அமைச்சர் தனது பதவியை ராஜினாமா செய்து ஒரு சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒருவர் கடல் தொழில் அமைச்சராக நியமிக்கப்பட வேண்டும்.

வட மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் கடல் தொழில் அமைச்சராக இருந்தும் கூட வடமாகாண மீனவர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கும் நிலையில் அவர் மௌனமாக இருப்பதை விட சிங்களவர் ஒருவர் கடற்றொழில் அமைச்சராக இருந்தால் எமது அழுத்தத்தின் காரணமாக ஓர் அளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும்.

கடற்றொழில் அமைச்சின் தற்துணிவு இல்லாத நிலையே வட பகுதி மீனவர்கள் இந்திய இழுவைப் படகு மூலம் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.

**கே:** *மாகாண சபை தேர்தலை வெகு விரைவில் நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளது.மாகாண சபை தேர்தலை நடத்துவதில் இந்தியாவின் பங்களிப்பு உள்ளமை குறித்து உங்கள் கருத்து என்ன?*

**பதில்:** மாகாண சபை தேர்தல் மிக விரைவில் நடாத்தப்பட வேண்டும். இந்திய அரசாங்கத்தின் அலுத்தத்தின் காரணமாக மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் முனைகின்றதா? இல்லையா? என்பதை இலங்கை அரசாங்கம் தான் பதில் கூற வேண்டும்.

ஆனால் மாகாண சபை தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும். அதில் இருக்கின்ற 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான முழுமையான அதிகாரத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பு முழுமை-யாக இந்தியாவுக்கு இருக்கிறது.

இலங்கையில் யுத்தம் இடம் பெற்றுக் கொண்டிருந்த போது,13 ஆவது திருத்தச் சட்டத்தை மாகாண சபை முறைமையை இலங்கைக்கு கொண்டு வந்து தமிழர்களுக்கு தீர்வாக இந்தியா ஒரு முனைப்பு செய்திருந்தது. ஆனால் இன்றைக்கு சுமார் 33 வருடங்கள் கடந்தும் அதை முழுமை-யாக நடைமுறைப்படுத்த முடியாத ஒரு அரசாங்கமாக இந்திய அரசாங்கம் இருக்கிறது. அவர்கள் தொடர்ச்சியாக வருகின்றார்கள்.

அவர்கள் வருகின்ற போது இலங்கை அரசாங்கத்திற்கு என்ன விடையத்தை கூறுகிறார்கள் என்று தெரியவில்லை. ஆனால் செய்தி வருகி-றது. அவர்கள் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக பயண்படுத்த வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்திற்கு கூறியதாக செய்திகள் வருகின்றது.

இந்தியாவை பொறுத்த வகையில் குறித்த விடயத்தை செய்ய நினைத்தால் தற்போது உள்ள பாரத பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இலங்கையில் 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று உண்மையாக நினைத்தால் குறித்த விடயம் இந்தியாவிற்கு பெரிய விடயம் இல்லை.

அவர்கள் முழுமையாக தமது பலத்தை பயன்படுத்துகிறார்களா? அல்லது தமது நாட்டின் நலன்களுக்காக இந்த விடயங்களை இராஜதந்திர ரீதியில் கையாளுகின்றார்களா? என்பது தொடர்பில் தமிழ் மக்களுக்கு சந்தேகம் உள்ளது.

**கே:** *சீனாவின் ஆதிக்கம் அண்மைக் காலமாக இலங்கையை மையப்படுத்தி காணப்படுகின்றது. வடக்கு கிழக்கில் உள்ள 3 தீவுகளை இலங்கை அரசாங்கம் சீனாவிற்கு மின் உற்பத்திக்காக ஒப்படைத்துள்ளது. இவ்விடயம் தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?*

**பதில்:** தமிழர்கள் எந்த அளவுக்கு இறைமையாக இருக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக நாங்கள் இருக்கின்றோமோ அந்த அளவிற்கு இலங்கையர்களும் இறைமையாக இருக்க வேண்டும். தொடர்ச்சியாக இலங்கையில் மாறி மாறி வந்த ஆட்சியாளர்கள் தவறான பொருளாதார கொள்கைகள், தவ-றான நிதியாடல்கள் மற்றும் தாங்கள் தாங்கள் அரசியலில் இருக்கும் போது தங்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உழைக்க வேண்டும். அல்லது தங்களுடைய அமைச்சர்கள் உழைக்க வேண்டும் என எடுக்கும் தவறான முடிவுகளால் இலங்கையின் பொருளாதாரம் மிகப்பெரிய பின்னடைவை சந்தித்துள்ளது.

இறுக்கமான சூழ்நிலையில் இருந்து ஆட்சியாளர்கள் மீண்டு வருவதற்கு இலங்கையில் இருக்கின்ற பல பிரதேசங்களை ஒவ்வொரு நாட்டிற்கும், வர்த்தகத்திற்கு பயன்படுத்தக்கூடிய நாட்டின் மைய பகுதிகளை உலக நாடுகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முயற்சி செய்கிறது. எங்களைப் பொறுத்த வகையில் இந்தியா என்பது எமது தாய் நாடு. இந்தியாவிற்கு எமது பிரதேசங்களில் இருக்கும் இடங்களை அல்லது சில விடையங்களை மேற்கொள்வதில் எங்களுக்கு உடன்பாடு இருக்கிறது.

இந்திய அரசாங்கத்திடம் நாங்கள் இவ்விடயம் தொடர்பாக நேர-டியாக நாங்கள் கூறியுள்ளோம். தமிழர்களின் கலாச்சாரமும், இந்தியர்களின் கலாச்சாரத்திலும் ஒருமித்த நிலைப்பாட்டில் உள்ளவர்கள். ஆனால் சீன அரசாங்கத்தை பொறுத்த வகையில் சீன அரசாங்கத்தின் ஆதிக்கம் என்பது அண்மைக்காலமாக இலங்கையை மையப்படுத்தி அதாவது யுத்தத்திற்கு பிற்பாடு காணப்படுகின்றது.

யுத்தம் முடிவுறாமல் இருந்திருந்தால் இன்று சீனாவின் ஆதிக்கம் கணிசமான அளவு குறைவடைந்து காணப்பட்டிருக்கும். இந்த சூழ்நிலையில் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இருக்கும் தீவுகளை குறிப்பாக 3 தீவு-களை இலங்கை அரசாங்கம் சீனாவிற்கு மின் உற்பத்திக்காக ஒப்படைத்ததில் தமிழர்களுக்கு உடன்பாடு இல்லை. அப்படி ஒப்படைப்பதாக இருந்தால் இந்தியாவிற்கு கொடுப்பதற்கு தமிழ் மக்கள் விரும்புவார்கள். ஆனால் சீனாவிற்கு கொடுத்ததில் தமிழ் மக்களுக்கு உடன்பாடு இல்லை என்று துறை சார் அமைச்சரிடம் நாங்கள் கூறி இருந்தோம். இந்த விடையம் தொடர்பாக அரசாங்கம் உண்மையாக செயல்பட வேண்டும்.

இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும் என்பதையே ஆட்சியாளர்கள் யோசிக்க வேண்டும். ஆனால் ஆட்சியாளர்கள் சிந்திப்பது என்ன என்றால் அடுத்த தேர்தலில் நாங்கள் எவ்வாறு வெற்றி பெறுவது என்பதையே சிந்திக்கிறார்கள். இலங்கையில் உள்ள பொருளாதார வர்த்தக மையங்களை வெளிநாடுகளுக்கு கொடுப்பதில் உடன்பாடு இல்லை.

**கே:** *இலங்கையில் திடீரென அத்தியாவசிய பொருட்கள் விலை ஏற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?*

**பதில்:** இலங்கையில் அத்தியாவசிய பொருட்களின் விலை ஒரே இரவில் பல மடங்குகளாக அதிகரித்துள்ளது. சமையல் எரிவாயு இலங்கை வரலாற்றில் இம்முறை ஒரே தடவையாக சுமார் 1200 ரூபாவினால் அதிகரித்துள்ளது. மேலும் அரிசி, சீனி, சீமெந்து உள்ளிட்ட கட்டிட பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. இதனால் கட்டிட ஒப்பந்ததாரர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளார்.

விலை கோரல் மனுவை பெற்றுக் கொள்ள முடியாத நிலையும் காணப்படுகிறது. நாளுக்கு நாள் பொருட்களின் விலை அதிகரிப்பால் விலை கோரல் மனுவை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் சகல தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசாங்கத்தின் தவறான முடிவால் இன்று மக்கள் இவ்வாறான கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள்.

அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றமாக இருக்கலாம், பசளையின் தட்டுப்பாடாக இருக்கலாம் இன்று நாட்டில் உள்ள சகல பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதியும் அமைச்சர்களும் எடுத்துள்ள தவறான முடிவுகளும், தவறான கொள்கைகளுமே மிகவும் காரணமாக இருக்கிறது.

அரச உத்தியோகத்தர் அல்லது இலங்கையின் சாதாரண பிரஜை தனது சம்பளத்தில் வாழ முடியாத சூழ் நிலையே தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ளது. மக்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். எனவே இலங்கை அரசாங்கம் இலங்கையின் பொருளாதாரத்தை முன்னேற்ற துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.என அவர் மேலும் தெரிவித்தார்.

# உள்ளாட்சித் தேர்தலில் வரலாறு காணாத வெற்றி; ஓபிஎஸ் ஈபிஎஸ்ஸுக்கு எரிச்சல்: அமைச்சர் பெரியகருப்பன் விமர்சனம்



உள்ளாட்சித் தேர்தலில் வரலாறு காணாத வெற்றியை மக்கள் அளித்து விட்டார்கள். இதனால் ஓபிஎஸ் ஈபிஎஸ் இருவருக்குமே எரிச்சல் ஏற்பட்டுள்ளது என, அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக, ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் கே. ஆர்.பெரியகருப்பன் இன்று (அக். 14) வெளியிட்ட அறிக்கை:

"தமிழகத்தில் கடந்த 06.10.2021 மற்றும் 09.10.2021 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக நடைபெற்ற 9 மாவட்டங்களுக்கான ஊரக உள்ளாட்சித் தேர்தல் மற்றும் 28 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சிகளில் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கான இடைத்தேர்தல்கள் தமிழக தேர்தல் ஆணையத்தால் சிறப்பான முறையில் திட்டமிடப்பட்டு, நடுநிலையோடு, தேவையான பாதுகாப்பு வசதிகளோடு எந்தவித சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் ஏற்படாதவண்ணம் தேர்தல் நடத்தப்பட்டு, 12.10.2021 அன்று வாக்கு எண்ணிக்கையும் நேர்மையாக நடத்தி முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

இந்நிலையில், தேர்தல் முடிவுகள் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான 5 மாத கால ஆட்சிக்கு தமிழக மக்கள் அங்கீகாரம் தந்து ஊக்குவிக்கின்ற வகையில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு மகத்தான வெற்றியைத் தந்துள்ளார்கள்.தமிழக மக்கள் தந்த அந்த மகத்தான வெற்றியைத் தாங்கிக்கொள்ள முடியாமல், அதிமுகவின் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி இணைந்து தந்த அறிக்கையில் தங்களது இயக்கம் மக்களால் புறக்கணிக்கப்பட்ட உண்மையை மறந்து தமிழக மக்கள் அவர்களுக்குத் தந்த படுதோல்வியை மறைத்து, முதல்வர் ஸ்டாலினுக்குத் தமிழக மக்கள் தந்த பேராதரவால் பெற்ற மகத்தான வெற்றியையும், மேற்படி தேர்தலை, ஜனநாயக முறையில் நேர்மையாக, நடுநிலையோடு, நடத்திய தமிழகத் தேர்தல் ஆணையத்தையும், கொச்சைப்படுத்துகின்ற வகையில் வெளியிட்டுள்ள அவர்களின் கற்பனை அறிக்கைக்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், கடந்த 2016ல் நடக்க வேண்டிய உள்ளாட்சித் தேர்தலை மூன்று வருடம் தள்ளிப் போட்டது அதிமுக அரசு. மாநிலத் தேர்தல் ஆணையம் 26.9.2016ல் அறிவிப்பு வெளியிட்ட அன்றே வேட்பாளர் பட்டியலை வெளியிட்டு, அந்த ஆணையத்தைத் தனது கைப்பாவையாக்கியது அதிமுக.'தேர்தல் அறிவிப்பு ஆளுங்கட்சிக்கு மட்டுமே தெரிந்திருக்கிறது' என்று உயர் நீதிமன்றம் கண்டனம் செய்து தேர்தல் அறிவிப்பையே ரத்து செய்யும் நிலைக்குத் தள்ளியது அதிமுக அரசு. பிறகு உரிய காலத்தில் தேர்தலை நடத்தாமல், மாநிலத் தேர்தல் ஆணையரையே நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் உயர் நீதிமன்றத்தில் மன்னிப்பு கேட்க வைத்தது அதிமுக அரசு.தேர்தல் நடத்துகிறோம் என, உச்ச நீதிமன்றத்தில் வாக்குறுதி கொடுத்துவிட்டு, ஒரு ஞாயிற்றுக்கிழமை அன்று 'வார்டு மறுவரையறை ஆணையத்தை' உருவாக்கி, அவசரச் சட்டம் பிறப்பித்து உள்ளாட்சித் தேர்தலை வேண்டுமென்றே தாமதம் செய்தது அதிமுக அரசு. பிறகு மாவட்டங்களைப் பிரித்து உள்ளாட்சித் தேர்தல் நடத்த விடாமல் செய்தது அதிமுக அரசு.பிறகு ஊரக உள்ளாட்சித் தேர்தல், நகர்ப்புறத் தேர்தல் எனப் பிரித்து, முதலில் ஊரக உள்ளாட்சித் தேர்தலை அதுவும் உச்ச நீதிமன்றத்தின் கண்டனத்தில் இருந்து தப்பிக்க அறிவித்தது அதிமுக அரசு. அதிமுக நடத்தத் தவறிய ஊரக உள்ளாட்சித் தேர்தலை இப்போது திமுக அரசு நடத்தியிருக்கிறது.

ஒருவர் இரு வேட்பாளருக்கு முன்மொழிந்த காரணத்தால், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் வேட்பு மனுவைத் தேர்தல் ஆணையம் விதிப்படி நிராகரித்துள்ளது.ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியரும், மாவட்டத் தேர்தல் அதிகாரியுமான பாஸ்கரபாண்டியன் 'வாக்கு எண்ணிக்கை நாளன்று நான் சொல்லக்கூடிய வேட்பாளர்களைத்தான் வெற்றி பெற்றதாக அறிவிக்க வேண்டும்' எனக் கூறியதாக ஒரு கற்பனைக் குதிரையைத் தட்டி விட்டு ஓபிஎஸ் ஈபிஎஸ் ஒரு காரணம் சொல்லியிருக்கிறார்கள். ராணிப்பேட்டை மாவட்டத்தில் இப்போது தேர்தல் முடிவுகள் வெளிவந்துள்ளன. அங்கு அதிமுகவும் வெற்றி பெற்றுள்ளது. எத்தகைய அபாண்டப் பழியை, பொய்யை ஒரு மாவட்டத் தேர்தல் அதிகாரி மீது சுமத்துகிறார் எடப்பாடி பழனிசாமி என்பது அதிமுகவும் அங்கு வெற்றி பெற்றுள்ளதிலேயே தெரியவருகிறது. திருப்பத்தூர் திமுக சட்டப்பேரவை உறுப்பினர் அத்துமீறி வாக்குப் பெட்டிகள் வைக்கப்பட்டிருந்த அறைக்குள் சென்றதாகக் கூறியிருக்கிறார். அந்த புகாரைத் தொடர்ந்து, அதிமுக சட்டப்பேரவை உறுப்பினரே அந்த வாக்குச்சாவடி மையத்துக்குச் சென்று, 'வாக்குப் பெட்டிகள் பத்திரமாக இருக்கின்றன, எதுவும் பிரிக்கப்படவில்லை' என்று கூறியிருக்கிறார். தன் கட்சி சட்டப்பேரவை உறுப்பினர் சொன்னதைக் கூட ஓ.பன்னீர்செல்வம் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் தெரிந்துகொள்ள முன்வரவில்லை.

இருவரும் கொடுத்துள்ள 5 பக்க அறிக்கையில் திமுகவினர் வன்முறையில் ஈடுபட்டதாக, ஒரு நிகழ்ச்சியைக் கூட சுட்டிக்காட்ட முடியவில்லை. இதிலிருந்தே மாநிலத் தேர்தல் ஆணையம் அமைதியாகவும், நடுநிலையுடனும் தேர்தலை நடத்தியுள்ளது எனத் தெளிவாகிறது.கடந்த பத்தாண்டு கால அதிமுக ஆட்சியில் மாநிலத் தேர்தல் ஆணையத்தைத் தங்களின் கைப்பாவையாக ஆட்டிப் படைத்த, பழைய ஞாபகத்தில் இந்தக் கற்பனைக் குற்றச்சாட்டை வைத்திருக்கிறார்கள். குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல் இருக்கிறது அவர்களது அறிக்கை.தோல்வியை ஒப்புக் கொள்ளவும், மக்கள் நிராகரித்து விட்டார்கள் என்பதை ஏற்றுக் கொள்ளவும் இருவருக்கும் மனமில்லை.

திமுக ஆட்சி சிறப்பாகச் செயல்படுகிறது. முதல்வர் ஸ்டாலினுக்கு 9 மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தலில் வரலாறு காணாத வெற்றியை மக்கள் அளித்து விட்டார்கள் என இருவருக்குமே எரிச்சல்.ஆனால், அந்த வெற்றி, திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் இரவு பகலாக கடந்த 5 மாதங்களாக மக்களுக்கு ஆற்றி வரும் பணிக்குக் கிடைத்த நற்சான்றிதழ் என்பதை இருவரும் புரிந்துகொள்ள வேண்டும். பத்தாண்டு காலத்தில் இப்போதுதான் மாநிலத் தேர்தல் ஆணையம் நியாயமாகவும் நேர்மையாகவும் செயல்பட்டுள்ளது. காவல்துறையும் நடுநிலையோடு நடந்து கொண்டுள்ளது என்பதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் இப்படி புலம்புவது ஏனோ".இவ்வாறு அமைச்சர் பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

## 23 மீனவர்கள் சிங்களப் படையால் கைது; மீனவர் சிக்கலுக்கு நிரந்தர தீர்வு தேவை: ராமதாஸ்

23 மீனவர்கள் சிங்களப் படையால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், மீனவர் சிக்கலுக்கு நிரந்தர தீர்வு தேவை என, பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.இது தொடர்பாக, ராமதாஸ் அக். 14 வெளியிட்ட அறிக்கை: "வங்கக்கடலில் கோடியக்கரை அருகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 23 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர். அவர்களுக்கு சொந்தமான மூன்று படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர். சிங்களக் கடற்படையினரின் இத்தகைய அத்துமீறல் கண்டிக்கத்தக்கதாகும்.நாகை மாவட்டத்தைச் சேர்ந்த 700க்கும் மேற்பட்ட மீனவர்கள் 75 க்கும் மேற்பட்ட படகுகளில் வங்கக்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றிருந்தனர். கோடியக்கரை பகுதியில் அவர்கள் மீன்பிடித்துக் கொண்டு இருந்த போது அங்கு வந்த சிங்களக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் 23 பேரை கைது செய்தனர்.அவர்கள் மீன்பிடிக்கப் பயன்படுத்திய மூன்று படகுகளையும் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும் நீதிமன்றத்தில் நேர் நிறுத்தப்பட்டு இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

தமிழக மீனவர்கள் 23 பேரும் கோடியக்கரை பகுதியில் இந்திய கடல் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் தான் மீன்பிடித்துக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், இந்திய கடல் எல்லையில் அத்துமீறி நுழைந்த சிங்களப்படையினர், தமிழக மீனவர்களை கைது செய்து அவர்கள் இலங்கை எல்லையில் உள்ள நெடுந்தீவு கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்தபோது கைது செய்யப்பட்டதாக அறிவித்துள்ளனர். சிங்களக் கடற்படையினரின் இத்தகைய அத்துமீறல்களை இந்தியா ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.நாகை மாவட்டத்தையொட்டிய பகுதியில் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான கடற்பரப்பே வெகு சில கிலோ மீட்டர்கள் தான். சர்வதேச கடல் எல்லையைக் கூட வரையறுக்க முடியாத அளவுக்கு அப்பகுதியில் கடற்பரப்பு குறுகியதாக உள்ளது.

அதனால், இலங்கை மீனவர்கள் இந்திய எல்லைக்குள் நுழைவதும், தமிழக மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் தவறுதலாக நுழைவதும் இயல்பானது தான். அத்தகைய சூழல்களையே கைது இல்லாமல் மென்மையாக கையாள வேண்டும் என்று பன்னாட்டு அமைப்புகள் அறிவுறுத்தி வரும் நிலையில், இந்திய கடல் எல்லைக்குள் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்திருப்பதை மத்திய அரசு கண்டிக்க வேண்டும்.கரோனா பரவல் காலத்தில் தமிழக மீனவர்கள் மீதான அத்துமீறல்களை சிங்களக் கடற்படை சற்று கைவிட்டிருந்தது. இப்போது மீண்டும் அத்துமீறல்கள் அதிகரித்து விட்டன.

23 மீனவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதால், அவர்களின் குடும்பங்கள் அடுத்த சில வாரங்களுக்கு வாழ்வாதாரத்தை இழந்து விடும். மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட பல கோடி ரூபாய் மதிப்புள்ள படகுகளை மீட்பது சாத்தியமல்ல என்பதால், அந்தப் படகுகளை நம்பியிருக்கும் மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கும். இத்தகைய பாதிப்புகள் இனியும் ஏற்படாமல் தடுக்கும் கடமை மத்திய அரசுக்கு உண்டு. எனவே, வங்கக்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் பாதுகாப்பாக கரை திரும்புவதை உறுதி செய்யும் வகையில், இந்த சிக்கலுக்கு நிரந்தத் தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அதற்காக வங்கக்கடலில் இரு நாட்டு மீனவர்களும் பரஸ்பரம் எல்லைகளைக் கடந்து சென்று மீன்பிடிக்க அனுமதிப்பது தொடர்பான பேச்சுகளை மீண்டும் தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு முன்பாக கைது செய்யப்பட்ட 23 மீனவர்களை உடனடியாக விடுதலை செய்வதற்கும், அவர்களின் மூன்று படகுகளை மீட்டு வருவதற்கும் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்''. இவ்வாறு ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

## கிராம ஊராட்சித் தலைவர் தேர்தலில் 22 வயது பொறியியல் பட்டதாரி வெற்றி



தென்காசி மாவட்டம், கடையம் ஒன்றியம், வெங்காடம்பட்டி ஊராட்சித் தலைவர் பதவிக்கான தேர்தலில் லெட்சுமியூரைச் சேர்ந்த 22 வயது பொறியியல் பட்டதாரி ஸாருகலா வெற்றி பெற்றுள்ளார். இவர், கோயம்புத்தூர் இந்துஸ்தான் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி கல்லூரியில், முதுநிலை பொறியியல் படிப்பில் முதலாவது ஆண்டில் சேர்ந்துள்ளார்.

இதுகுறித்து, ஸாருகலா கூறும்போது, "எனது தந்தை ரவி சுப்பிரமணியன் விவசாயம் செய்து வருகிறார். தாய் சாந்தி பூலாங்குளம் அரசுமேல்நிலைப் பள்ளியில் ஆசிரியராக வேலை பார்க்கிறார். தம்பி பெயர் அழகுசுந்துரு. எங்கள் ஊரில் சில ஆண்டுகளுக்கு முன்பு கடும் வறட்சி ஏற்பட்டது. இதையடுத்து, எனது தந்தை தனது சொந்தப் பணத்தில் மக்களுக்கு வாகனம் மூலம் குடிநீர் வழங்கினார்.

வெங்காடம்பட்டி ஊராட்சித் தலைவர் பதவி பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது. ஊராட்சித் தலைவரானால் அரசு மூலம் மக்களுக்கு கூடுதலாக சேவை செய்ய முடியும் என்பதால், தேர்தலில் போட்டியிடுகிறாயா என எனது தந்தை கேட்டார். எனக்கும் ஆர்வம் இருந்ததால் போட்டியிட சம்மதித்தேன். மாற்றத்தை விரும்பிய மக்கள் என் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்ததால் 796 வாக்குகள் கூடுதலாக பெற்று வெற்றி பெற்றேன்.

ஊராட்சியில் உள்ள அனைத்துவீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுப்பேன். அனைத்து அடிப்படை தேவைகளையும் செய்து கொடுப்பேன். கல்வி மற்றும் விளையாட்டில் ஆர்வம் உள்ள இளைஞர்கள் சாதனை படைக்க தேவையான உதவிகளைச் செய்வேன். வெங்காடம்பட்டியை இந்தியாவிலேயே சிறந்த ஊராட்சியாக மாற்ற வேண்டும் என்பது எனது லட்சியம். முதுநிலை பொறியியல் படிப்பை தொடர்ந்து கொண்டே, ஊராட்சித் தலைவர் பதவியின் மூலம் மக்கள் பணி செய்ய உள்ளேன்'' என்றார்.

# கனடாவின் கொன்சர்வேர்ட்டிவ் கட்சித் தலைவருக்கு இடையூறுகள் விளைவித்தமையால் பதவி நீக்கம் செய்யப்பட்ட கட்சி உறுப்பினர் ஒருவர்



கனடாவின் கொன்சர்வேட்டிவ் கட்சியின் தேசிய சபை உறுப்பினர் ஒருவர் கட்சியின் தற்போதைய தலைவர் எரின் ஓ டூலின் தலைமையை முன்கூட்டியே மதிப்பாய்வு செய்வதற்கான முயற்சியை முன்னெடுத்து அவருக்கு இடையூறுகள் விளைவித்தமைக்காக கட்சியின் தேசிய சபையால் பதவி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பெர்ட் சென் என்னும் பெயர் கொண்ட அவர் ஒன்றாறியோ மாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் ஒரு பிரதிநிதியாக செயலாற்றினார். அவர் எதிர்வரும் 2023ம் ஆண்டுக்கு முன்னர் சபை வாக்கெடுப்பை நடத்தும் என்ற நம்பிக்கையில் தற்போதைய தலைவருக்கு எதிரான கையெழுத்து சேகரிக்க ஒரு இணையவழியிலான விண்ணப்ப படிவத்தை தொடங்கினார்.

செப்டம்பர் 20ம் திகதி அன்று நடைபெற்ற தேர்தலில் கன்சர்வேடிவ் தோல்வியடைந்த 24 மணி நேரத்திற்குள் அவர் அந்த இணையவழி ஊடான விண்ணப்பப் படிவத்தை கட்சி உறுப்பினர்கள் மத்தியில் பரப்பினார். ஆனால் இந்த விடயம் ஓர சட்டவிரோதமான என்றும் இது தலைவர் ஓ"டூலின் பதவிக்காலம் முடிவடையும் முன்னரே கொண்டுவரப்பட்ட ஒரு தவறான விடயம் என்று கட்சி தேசிய சபை சுட்டிக்காட்டியது.

அத்துடன் கட்சி செலவுகள் மற்றும் எரிபொருளுக்கான நுகர்வோர் கார்பன் விலை என்று வரும்போது தலைவர் ஓ"டூல் கட்சியின் கௌரவத்தை பாதிக்கச் செய்தார் என்றும் கட்சிக்கு துரோகம் இழைத்ததார் என்றும் ஏனைய கட்சி உறுப்பினர்கள் உணர்கிறார்கள் என்றும் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்னர் பெர்ட் சென் கூறியிருந்தார்.



தலைவர் எரின் ஓ"டூல் அவர்கள் நடைபெற்ற தேர்தலில் கட்சிக்கு அதிகமான வெற்றிகளை பெறுவார் என்ற நம்பிக்கையில் மிகவும் மிதமான காட்சியை காட்டுவதற்கு வைக்க முயன்றார் என்றும் ஆனால் அவ்வாறு செய்வது சில பழமைவாதிகளை எரிச்சலடையச் செய்துள்ளுத என்றும் ஏனெனில் அவர் கடந்த ஆண்டு தலைமைப் போட்டியில் கட்சித் தளத்தில் வெற்றிபெற "உண்மையான நீல" வேட்பாளராக தன்னைத்தானே காட்டிக் கொண்டார் என்று கூறப்பட்டது .

இது இவ்வாறிருக்க. கடந்த வாரம் தலைவர் எரின் ஓ"டூலின் கட்சி சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் அவரை தலைவர் பதவியிலிருந்து நீக்குவதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தாலும் பதவி நீக்கப்படுவதற்கு குறைந்தபட்சம் 20 சதவிகிதம் பேர் முதலில் இரகசிய வாக்கெடுப்புக்கு ஆதரவாக எழுத்துப்பூர்வ அறிவிப்பில் கையெழுத்திட வேண்டும் என்றும் நியதி உள்ளது

எனினும், கன்சர்வேடிவ் தலைவர் எரின் ஓ டூல் அவர்கள் தனது 118 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தனக்கு ஆதரவு என நம்புவதாகவும் அது வெளிப்படைத்தன்மையை உருவாக்கும் என்பதால் தனது தலைமையை மறுபரிசீலனை செய்யும் அதிகாரம் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் சபையை ஆதரிப்பதாகவும் கூறினார்.

## More Delhi to Toronto flights by Air Canada

# இந்தியாவின் டெல்லியிலிருந்து கனடாவின் ரொறன்ரோ பியர்சன் வரையும் ஏயர் கனடாவின் விமானங்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டுள்ளது




இந்தியாவின் தலைநகரமான டெல்லியிலிருந்து கனடாவின் ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்திற்கு கனடாவின் ஏயர் கனடா விமான சேவையின் விமானங்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டுள்ளதாக ஏயர் கனடா தெரிவித்துள்ளது.

கனடா அரசாங்கத்தின் அனுமதியுடன் தான் இந்தியாவில் இருந்தும் ரொரன்ரோவிலிருந்தும் மற்றும் இந்தியாவுக்கு செல்லும் நேரடி விமான சேவையையும் கொரோனா இரண்டாவது அலைக்கு பிறகு மீண்டும் தொடங்கியுள்ளமை இங்கு குறிப்பிட்த்தக்கது.

அத்துடன் கனடாவின் மொன்றியால் விமான நிலையத்தையும் - டெல்லியையும் இந்த புதிய விமான சேவையானது இணைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மொன்றியால் நகரில் அதிகரித்து வரும் இந்திய வம்சாவழி மக்களின் எண்ணிக்கையை ஒட்டியெ இந்த மொன்றியால் இணைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது இதன் மூலம். மொன்றியால் வாழ் இந்திய சமூகத்திற்கு ஏயர் கனடா வாரத்திற்கு மூன்று விமான சேவைகளை வழங்கவுள்ளது எனவும் ஏயர் கனடா நிறுவனம் அறிவித்துள்ளது

இதோடு கூடுதலாக, ரொறன்வோவின் பியர்சன் விமான நிலையத்திலிருந்தும் டெல்லிக்கு விமான சேவை அக்டோபர் 15 முதல் வாரத்திற்கு 10 விமானங்களாக அதிகரிக்கப்படுகிறது.

இவ்வாறான ஏற்பாடுகள் ஏயர் கனடா நிறுவனம் செய்துள்ள வேளையில் ஏற்கனவே டெல்லியில் இருந்து கனடாவின் வான்கூவர் மற்றும் ரொறன்வோவுக்கு ஏயர் இந்தியா நேரடி விமான சேவையை வழங்கி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

# "இனப்படுகொலைக்குள்ளான எமது மக்களுக்கு நீதி கிடைக்கும் வகையில் இனி வரும் ஐந்து வருடங்களுக்கு நாம் தீவிரமான செயற்பாடுகளில் இறங்கவேண்டும்"

## பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கான நீதி மறுக்கப்படுவதற்கான காரணம் என்ன? என்ற தலைப்பில் இடம்பெற்ற கருத்தரங்கில் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

*(ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)*

------------------------------------------------------------------

''எமது ஈழ மண்ணில் 2009ம் ஆண்டில் இடம் பெ ற்ற கொடிதான அரச பயங்கரவாதம் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத இனப்படுகொலைக்குள்ளான எமது மக்களுக்கு நீதி மறுக்கப்படுவது தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. தாயகத்தில் தமிழர் பிரதிநிதிகளாக உள்ள அரசியல் தலைவர்களோ அன்றி புலம் பெயர்ந்த நாடுகளில் இயங்கி வரும் தமிழ் அமைப்புக்களோ சாதித்தது ஒன்றுமே இல்லை.

ஆனால் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் மக்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்ட வேண்டும். இவ்வாறு தான் எமது மக்களுக்கு நீதி கிட்டுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும். எனவே இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு நீதி கிடைக்கும் வகையில் இனி வரும் ஐந்து வருடங்களுக்கு நாம் தீவிரமான செயற்பாடுகளில் இறங்கவேண்டும்''

இவ்வாறு கடந்த 09-10-2021 அன்று நடைபெற்ற இணைய வழி ஊடான கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும் போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.


பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கான நீதி மறுக்கப்படுவதற்கான காரணம் என்ன? என்ற தலைப்பில் இடம்பெற்ற மேற்படி இணையவழிக் கருத்தரங்கை சர்வதேச தமிழர் உரிமைகள் மையம் ஏற்பாடு செய்திருந்தது.

கனடாவிலிருந்து விமல் நவரட்ணம் அவர்கள் இந்த இணையவழிக் கருத்தரங்கை தொடக்கி வைத்தார்.

அவர் தனது தொடக்க உரையில் பின்வருமாறு கூறினார்

"எமது உறவுகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு எதிராக போராடுவோம் என்று புறப்பட்ட புலம் பெ யர் தமிழர் அமைப்புக்களும் இலங்கையில் உள்ள தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தவறி விட்டார்கள். இதனால் தான் எமது மக்களுக்கு நீதியைப் பெற்றுத் தர வேண்டிய ஐக்கிய நாடுகள் சபை கூட பாதிக்கப்பட்ட எமது மக்களின் அவலக் குரலைக் கேட்க மறுத்து விட்டது' என்று மிகுந்த விசனத்தோடு தெரிவித்தார்.

அடுத்து உரையாற்றிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் புலம் பெயர்ந்த மக்களும் தாயகத்தில் உள்ள அரசியல் தலைமையும் இணைந்து போராட வேண்டிய கட்டாயம் தற்போது ஏற்பட்டுள்ளது என்றார். அவர் மேலும் பேசுகையில் தாயக மண்ணில் தமிழ் மக்களின் தொழிக்கப்படும் நிலைக்கு வந்துள்ளது என்றார்



அடுத்து உரையாற்றிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தனது உரையில் "எமது மக்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுக்க தற்போதைய கால கட்டத்தில் தந்திரோபாயம் என்பது மிகவும் அவசியமானது . இன்னொரு பக்கத்தில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செ ய்யும் புலம் பெயர் அமைப்புக்களுக்கு இடையில் போட்டிகள் நிறையவே உண்டு. இந்த பிணக்குகள் களைந்தெறியப்பட வேண்டும்" என்றார்

மிகவும் பயனுள்ள ஓரு இணையவழிக் கலந்துரையாடலாக விளங்கிய இந்த நிகழ்ச்சியில் கனடா. அமெரிக்கா. இங்கிலாந்து மற்றும் பல நாடுகளிலிருந்தும் பல அரசியல் ஆர்வலர்கள் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

மேற்படி கருத்தரங்கில் உரையாற்றிய கனடாவின் ஒன்றாரியோ மாகாண அரசின் உறுப்பினரும் கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் முக்கிய பேச்சாளரும் கனடா வாழ் ஆர்மெனிய தேசத்தின் மக்கள் பிரதிநிதியுமான அரிஸ் பாபிகியன் சிறப்பான ஓரு உரையை ஆற்றினார்.

அவர் தனது உரையில தனது சொந்த நாடான ஆர்மேனியாவில் தமது மக்கள் எவ்வாறு இனப்படுகொலைக்கு உள்ளானார்கள்? தொடர்ந்து புலம் பெயர்ந்து மேற்குலக நாடுகளுக்கு குடியேறிய பின்னர் தமக்கு இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களுக்கு எதிராகவும் தொடர்ந்து தமது மக்களுக்கு கொடுமைகளை இழைத்தவர்களை எவ்வாறு தண்டிப்பது தொடர்பாக பல்வேறு நாடுகளில் புலம்பெயர்ந்து வாழத் தொடங்கியவர்கள் எவ்வாறு ஒரு ஆர்மேனியர்களின் தேசிய சபையை நிறுவினார்கள் என்று பல விபரங்களை எடுத்துரைத்தார்

அடுதது உரையாற்றிய தாயகத்திலிருந்து கலந்து கொண்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் முக்கிய பேச்சாளர்களும் அங்கு பயனுள்ள கருத்துக்களை எடுத்துரைத்தார்கள்.

# சில விஜயங்களும் பல செய்திகளும்



- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)

**சி**ல பயணங்கள் இடம்பெறுவதற்கு முன்னாலேயே அதிர்வுகளை ஏற்படுத்தும், சில விஜயங்கள் முடிந்த பிறகும் அப்படியொன்று நடைபெற்றதா என்று கூட தெரியாமல் இருக்கும். ஆனால் சில விஜயங்கள் பார்த்தால் சாதாரணமாகத் தெரியும் ஆனால் தாக்கமோ ஆழமாக இருக்கும். இப்படிப் பல பரிமாணங்களை உள்ளடக்கிய சில பயணங்கள் கடந்த சில நாட்களில் இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்டன.

அப்படியான சில விஜயங்களைப் பார்போம். இலங்கையின் பொருளாதாரத்திற்கு மிகவும் முக்கியமானது ஐரோப்பிய ஒன்றியத்தால் அளிக்கப்படும் ஜி எஸ் பி + எனப்படும் வரிச்சலுகை. இந்தச் சலுகையின் மூலம் இலங்கை ஏற்றுமதியாளர்கள் வரியின்றி ஆயத்த ஆடைகளை ஏற்றுமதி செய்ய முடியும். அதன் மூலம் நாட்டுக்கு பல மில்லியன் டாலர்கள் அளவுக்கு அந்நியச் செலாவணி கிடைக்கும். ஆனால் இந்தச் சலுகையோ நாட்டில் நிலவும் மனித உரிமைகள், ஜனநாயக விழுமியங்கள், தொழி-லாளர் உரிமைகள், பெண்களுக்கான பாதுகாப்பு, முறையான ஊதியம் போன்ற 27 அம்சங்கள் பேணப்பட வேண்டும் என்ற கட்டுப்பாட்டுடனேயே அளிக்கப்படுகிறது.



அந்தச் சலுகை இலங்கை அரசு கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றாததாலும், தொடரும் உரிமை மீறல்கள், பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி மக்களை வகை தொகையின்றி கைது செய்து வழக்கு பதியப் படாமல் நீண்டகாலமாகச் சிறை-யில் அடைப்பது போன்ற பல கவலைகள் காரணமாக இலங்கைக்கான அந்தச் சலுகை இடை நிறுத்தப்பட வேண்டும் என்று அண்மையில் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் தீர்மானம் ஒன்று இயற்றப்பட்டு அதை நிறைவேற்றும் பொறுப்பு அந்தநந்த நாடுகளிடம் விடப்பட்டன. இந்நிலையில் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட உயர்மட்டக் குழுவொன்று இந்த மாதத்தின் முற்பகுதியில் கொழும்பு சென்று பலதரப்புடன் விவாதித்தது. ஆனால் என்ன விவாதிக்கப்பட்டது, அதன் முடிவு போன்றவை உப்புசப்பில்லாத நான்கு பத்தி அறிக்கையாக இம்மாதம் 6ஆம் திகதி கொழும்பில் ஒரு ஊடக அறிக்கை மூலம் வெளியானது. அதில் கூறப்பட்டுள்ள பல அம்சங்களை நமது “உதயன்” பத்திரிகை அவர்கள் நாட்டில் இருக்கும் போதே இந்தப் பயணம் குறித்து விரிவாக ஆராய்ந்தது. அன்று நாம் கணித்தது போலவே இப்போது போலவே இப்போது இந்த பயணத்தின் முடிவு குறித்து தகவல்கள் கசிய ஆரம்பித்துள்ளன.

அதன் ஒற்றைவரி சுருக்கம் என்னவென்றால், “இலங்கைக்கான அந்த வரிச்சலுகை தொடரும்” என்பதே. இலங்கை அரசு பல அம்சங்கள் குறித்து தமக்கு வாக்குறுதிகளை அளித்துள்ளதாகவும், அதன் அடிப்படையில் இந்த சலுகையைத் தொடரலாம் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது. ஆனால் இலங்கை பயங்கரவாத தடைச் சட்டத்தை விலக்கிக் கொள்வது, அரசியல் கைதிகளை விடுவிப்பது, நீண்டகாலமாகச் சிறையில் இருப்பவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்வது, அனைத்து சமூகங்களையும் சமமாக நடத்துவது, தொழிலாளர் உரிமைகள் பாதுகாக்கப்படுவது குறித்து என்ன வாக்குறுதிகள் வழங்கப்பட்டன என்பது எதையும் கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய அலுவலகம் வெளியிட்ட ஊடக அறிக்கையில் கூறப்படவில்லை. ஆனால் இந்தச் சலுகை அடுத்த ஓராண்டு நீட்டிக்கப்படும் என்று அறிய முடிகிறது.

இதில் இந்த விஜயம், அதையொட்டி நடைபெற்ற விவாதங்கள், பின்னர் என்ன நடைபெற்றது என்பது குறித்து இலங்கையின் முக்கிய மையநீரோட்ட ஊடகங்கள் பெரியளவில் கவனத்தில் எடுக்கவில்லை என்பது இலங்கையில் ஊடகங்களின் நிலையைக் காட்டியது. இவ்வளவுக்கும் இந்த ஜி எஸ் பி+ சலுகையால் சாதகம் அல்லது பாதகத்தை சந்திக்கப் போவது பெரும்பாலும் தென்னிலங்கை சிங்கள மக்களே என்பதை அந்த ஊடகங்கள் சௌகரியமாக மறந்தன.

ஆனால் இதில் மறைக்க முடியாத செய்தி என்னவென்றால் மேற்குலக நாடுகள் இலங்கையில் நிலவும் மனித உரிமைகள் நிலவரம் குறித்து பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை, அவர்கள் கரிசனை என்பது பெயரளவில் மாத்திரமே என்பது வெளிச்சமாகியுள்ளது. ஜி எஸ் பி+ சலுகை சில நிபந்தனைகளுடன் தொடரும் என்கிற அறிவிப்பு விரைவில் வெளியா-கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்து இந்தியாவிலிருந்து சில உயர்மட்ட விஜயங்கள். முதலா-வது இந்திய வெளியுறவு அமைச்சக செயலர் ஹர்ஷ்வர்தன் சிருங்லாவின் பயணம். அதையடுத்து தற்போது இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் மனோஜ் முகுந்த் நர்வானேயின் பயணம். இந்திய வெளியுறவு செயல-ரின் பயணம் ஒரு பரபரப்பை எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியிருந்தது. தமிழர் தரப்பில் அவர் இந்தியா சார்பில் மாகாண சபைத் தேர்தல்களை விரைவில் நடத்த அழுத்தம் கொடுப்பார் என்றும் தொடரும் தமது பிரச்சனைகளை இந்திய அரசின் கவனத்திற்கு கொண்டு செல்ல மேலும் ஒரு வாய்ப்பாக இருக்குமென்றும் கருதப்பட்டது. அதேவேளை சிங்கள தரப்பில் நாடு சிக்கியிருக்கும் பொருளாதார நெருக்கடியிலிருந்து தங்களை மீட்க இந்தியா உதவ வேண்டும் என்றும் நாட்டின் வட பகுதியில் அதிகரித்து வரும் சீ-னாவின் பிரசன்னம் குறித்தும் இந்தியாவின் கவலைகளுக்கு பதிலளிக்க ஒரு வாய்ப்பாக இருக்கும் என்றும் கருதப்பட்டது. அவர் கொழும்பில் பல்தரப்பட்டவர்களைச் சந்தித்து விட்டு யாழ்ப்பாணம் சென்றார். அங்கு இரவு விருந்து ஒன்றிற்கு அழைக்கப்பட்டிருந்த பல தமிழ்த் தலைவர்கள் அதில் பங்குபெறவில்லை. குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் வட மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவருடனான இரவு விருந்தில் கலந்துகொள்ளவில்லை. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அவரைச் சந்திக்கவில்லை. தமக்கு தனியாக நேரம் ஒதுக்கப்பட வேண்டும் என்று அவர் கோரியதா-கவும் அது சாதியப்படாததால் அவர் அந்த விருந்தில் பங்குபெறவில்லை என்று கூறப்படுகிறது. அதேபோல் விக்னேஸ்வரன் அவர்கள் தான் மறு-நாள் நாடாளுமன்ற கூட்டத்திற்காக கொழும்பு செல்ல வேண்டியிருப்பதால் வர இயலவில்லை என்று கூறிய-தாக யாழ்ப்பாணத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், அதேவேளை பல சந்தர்ப்பங்களில் இந்தியாவுக்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டை எடுக்கும் கஜேந்திர குமார் பொன்னம்பலம் அவருடனான விருந்தில் கலந்து கொண்டார்.



எனினும் கொழும்பில் அவரைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழர் முற்போக்கு கூட்டணி ஆகியவை மாகாண சபை தேர்தலை இலங்கை அரசு விரைவில் நடத்த இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தன. அதை தான் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய ராஜபக்ச சகோதரர்களிடம் தெரிவிப்பதாக சிருங்லா கூறியதாக ஊடகத் தகவல்கள் வந்தன. இதையடுத்து அவரது பயணம் நிறைடைந்த நிலையில் அடுத்த ஆண்டு முதல் காலாண்டில் மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்படும் என்று பசில் ராஜபக்ச மூலம் அரசாங்க அறிவிப்பு வெளியானது. உடன-டியாக இது தமது கலந்துரையாடல் காரணமாக கிடைத்த வெற்றி என்று தமிழ்க் கட்சிகள் கூறிக் கொண்டன.

ஆனால் சற்று நுணுக்கமாகப் பார்த்தால் நடைபெற திட்டமிடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல்களால் யாருக்கு என்ன பயன் என்கிற மிகப்பெரிய கேள்வி நீண்டகாலமாக உள்ளது. குறிப்பாக வடக்கு மாகாண சபைக்கு கடந்த முறை நடைபெற்ற தேர்தலுக்கு பிறகு அங்கு என்ன நடந்தது என்பதை யாவரும் அறிவர். உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்தாலும், அரசி-யல் மற்றும் ஆட்சி நிர்வாகம் என்பது வேறு என்பதை விக்னேஸ்வரன் புரிந்து கொண்டிருப்பார். அவரால் மாகாண முதலமைச்சராகப் பரிமளிக்க முடியவில்லை என்பதே யதார்த்தமாக இருந்தது. அரசியல் கட்சிகளின் இழுபறிகள், உள்குத்துக்கள், வெளிப்படையான எதிர்ப்புக்கள் ஆகியவற்றை அவரால் சமாளிக்க முடியாமல் அவரது பலவீனம் வெளிப்பட்டது. வட மா-காண சபைக்குத் தேர்தல் நடைபெற்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் பெரும்பான்மையைப் பெற முடியாது என்பதே கள நிலைமை. இதர உதிரி தமிழ்க் கட்சிகள் ஓட்டைப் பிரிக்கும் ஆனால் அது அவர்களுக்கும் எந்தப் பயனையும் அளிக்காது. இப்படியான யதார்த்தத்தை உணர்ந்து கொள்ளாமல் மாகாண சபைத் தேர்தல் என்னவோ அமெரிக்க அதிபர் தேர்தல் போலவும், அதனால் தமக்கும் மக்களுக்கும் மிகப்பெரிய நன்மைகள் ஏற்பட்டு நாட்டில் ஜனநாயகம் தழைத்துவிடும் என்று தமிழ்க் கட்சிகள் கருதுகின்றன.

பொதுவாக சிருங்லாவின் விஜயம் என்பது பரந்துபட்ட அளவில் இந்திய-இலங்கை உறவுகளை மேம்படுத்தி, சீனாவுக்கு அதிக இடமளிக்க வேண்டாம் என்கிற செய்தியை இலங்கைக்கு உறுதியாகச் சொல்வதாகவே தோன்றுகிறது.

சிருங்லா நாடு திரும்பியதும் இந்திய இராணுவத் தளபதி ஐந்து நாள் பயணமாக கொழும்பு சென்றுள்ளார். இதிலும் வழக்கமாகப் பேசப்படும் இருநாட்டு இராணுவ ஒத்துழைப்பு, போர்ப் பயிற்சி ஆகிய விஷயங்களுக்கு சம்பிரதாய ரீதியாக இந்திய அமைதிக் காக்கும் படை வீரர்களுக்கான நினைவிடத்தில் அவர் அஞ்சலி செலுத்துவது ஆகியவை இடம்பெற்றன. அப்பாறையில் இருநாட்டு இராணுவத்தின் கூட்டு இராணுவப் பயிற்சியின் நிறைவுநாள் நிகழ்ச்சியிலும் அவர் பங்கு பெறுகிறார் என்றாலும், அவரது விஜயத்திலும் முக்கிய இடம்பெற்றது பாக்கு நீரிணைப் பகுதியி-ல் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகும். இந்திய இலங்கை கடற்பரப்பில் இருக்கும் பல சிறிய தீவுகளில் சீனாவுக்கு காலடி பதிக்க இலங்கை அரசு அனுமதித்துள்ளதன் தாக்கத்தை இந்தியா சற்று தாமதமாகவே புரிந்து கொள்ள ஆரம்பித்துள்ளது என்று கருத வேண்டியுள்ளது.



கடல் அட்டைப் பண்ணை, சூரிய சக்தி உற்பத்தி மையங்கள், மின் உற்பத்தி நிலையங்கள் என சீனா கால்பதிக்க இலங்கை அரசு பல குட்டித் தீவுகளில் அனுமதியளித்துள்ளது இந்தியாவை துணுக்குறச் செய்துள்ளது. சீனா எப்படி “ஒட்டகமும் கூடாரமும்” கதையை முன்னெடுக்கும் என்பது உலகறிந்தது. எப்படி ஆப்ரிகாவில் பல நாடுகள் சீனாவின் நவகாலனித்துவ அடிமைகளாக மாறிப் போயின. இதன் பின்புலத்தில் குட்டித் தீவுகளின் சீனக் கால்பதிப்பு குறித்து இந்தியாவின் கடுமையான ஆட்சேபனை மற்றும் எதிர்ப்பைத் தெரிவிக்கவே இந்த இரண்டு முக்கிய பயணங்கள் அடுத்தடுத்து இடம்பெற்றன என்றே பொதுவாக கருத்து நிலவுகிறது. அதிலும் இந்திய இராணுவத் தளபதி சுமார் மூன்று ஆண்டுகள் இந்திய அமைதிகாக்கும் படை இலங்கையின் வடபுலத்தில் நிலைகொண்டிருந்த போது அதில் அதிகாரியாகப் பணியாற்றியவர். எனவே அவருக்கு வடக்கின் கேந்திர ரீதியான முக்கியத்துவத்தை அறிந்தவர்.

மற்றபடி மாகாண சபை தேர்தல், ஜனநாயக நெறிமுறைகள், மீனவர்கள் பிரச்சனை போன்றவையெல்லாம் ஒரு மேலோட்டமான முகக்கவசம் போன்றே என்று கருத வேண்டியுள்ளது. ஆனால் இந்தியாவின் முடிவுகள் அனைத்தும் தனது பிராந்திய மற்றும் தேசிய நலன்களையே அடிப்படையாக கொண்டிருக்கும் என்பது உண்மை, அது அப்படித்தான் இருக்க முடியும். இந்தியாவை முழுமையாக அறிந்தவர்களுக்கு இது புரியும். இந்தியா தனது வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கைகளில் ஒருதலைபட்சமாகவோ அல்லது ஒரு நாடு சார்ந்தோ ஒரு முடிவை எடுக்காது, எடுக்கவும் முடியாது. அதை விளங்கிக் கொள்ள வேண்டும் அல்லது விளங்கவில்லை என்றால் வெறுமனே இருக்க வேண்டும் என்பதே பொதுவான புரிதல்.

ஆனால் என்னைப் பொறுத்தவரையில் இந்த வாரத்தில் இடம்பெற்ற முக்கியமான விஷயமாக நான் பார்ப்பது இலங்கையின் பொலிஸ்மா அதிபர் வடமாகாணம் சென்றதும், யாழ்ப்பாண ஆயரைச் சந்தித்துப் பேசியதும் ஆகும். இந்த விஷயத்தின் போது இலங்கையின் வடக்கே வேலையில்லாப் பிரச்சனை பெரியளவில் உள்ளது என்று பொலிஸ்மா அதிபர் ஆயரி-டம் கூறியதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. வடக்கே அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக அரசு கூறும் நிலையில், அங்கு வேலை வாய்ப்புகள் இல்லாத காரணத்தால் சமூக விரோதச் செயல்கள் அதிகரித்துள்ளன என்று அரசின் உயர் பொலிஸ் அதிகாரி யாழ் ஆயரிடம் கூறியுள்ளது சிந்திக்க வைக்கிறது. அதேவேளை ஆயர் வடக்கே மேலும் கூடுதலாக 500 தமிழ் பேசு பொலிசார் தேவை என்று கோரியதாகவும் அதற்கு தான் ஏற்பாடுகளை செய்வதாக பொலிஸ்மா அதிபர் கூறியதாகவும் யாழ் ஆயர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

எந்த விஜயத்தின் மூலமும் மக்களுக்கு நன்மை கிட்டுமாயின் அது அவர்களுக்கும் நாட்டிற்கும் நல்லதே. ஆனால் நடக்குமா என்பதே கேள்வி!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அரசியல் பதவிகள் மூலமாக சொத்துக்களைத் திரட்டியவர்களின் விபரங்களைத் துள்ளியமாகத் தந்துள்ள பன்டோரா பத்திரிகை தகவல்கள்



உலகின் பல நாடுகளிலும் இயங்கிவரும் 150 இற்கும் மேற்பட்ட ஊடக நிறுவனங்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற 600 இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்களின் இரண்டு வருட கடின உழைப்பாலும் விடாமுயற்சியினாலும் தற்போது உலக மக்களின் கைகளுக்கும் பார்வைக்கும் கிட்டியுள்ள பன்டோரா பத்திரிகைத் தகவல்கள் இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் அரசியல் பதவிகள் மூலமாகச் சொத்துச் சேர்த்தவர்களின் விபரங்கள் மிகவும் துள்ளியமாக வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

பன்டோரா பேப்பர்ஸ் இல் தற்போது உள்ள ரஷ்ய ஜனாதிபதி புட்டினின் பெயரும் அடங்கியுள்ளது. இவர் தனது ஆயுட் காலம் வரை ரஷ்யாவின் அதிபராக பதவி வகிக்க ஆசைப்பட்டவர் என்பதும் சொத்துக்களை திரட்டுவதிலும் அதிக ஆசை கொண்டுள்ளார் என்பதும் தற்போது புலப்பட்டுள்ளது.

ஆனால் ரஷ்யா அவரிடம் இவ்வாறான மறைக்கப்பட்ட சொத்துக்கள் எதுவும் இல்லை எனத் தெரிவித்துள்ளது. ஜோர்தான் அரசரின் சொத்துக்களும் சட்டவிரோதமானவை அல்ல எனவும் அவை அவர் தனிப்பட்ட ரீதியில் சம்பாதித்தது எனவும் கூறப்பட்டுள்ளது. எல்டன் ஜான்,சகீரா ஆகியோரும் தாம் சம்பாதித்த சொத்து எனக் கூறியுள்ளார்கள்.

இவ்வாறிருக்க. இலங்கையில் வர்த்தகரான குமார் நடேசனின் பெயரும், அவரின் மனைவியான முன்னாள் பிரதியமைச்சரான நிருபமா ராஜபக்ஷவின் பெயரும் இந்த விபரத்தில் உள்ளன. பன்டோரா பேப்பர்ஸில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கையர்கள் தொடர்பான விசாரணையை ஒரு மாதத்துக்குள் நடத்தி அறிக்கை ஒன்றை பெற்றுத் தருமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஆனால் தற்போதைய ஜனாதிபதியினதும் பிரதமரினதும் சகோதரியுமான முன்னாள் பிரதியமைச்சரான நிருபமா ராஜபக்ஷவின் பெயர் அவரது கணவர் பெயர் ஆகியன இந்த அறிக்கையில் உள்ளதால் அவர்கள் பெயரில் உள்ள சொத்துக்கள் மகிந்தா மற்றும் கோட்டாபய ஆகியோரின் சொத்துக்களையும் உள்ளடக்கியிருக்கலாம் என்று கருத்துப் பரிமாற்றங்கள் இலங்கையில் இடம்பெற்று வருகின்றன. எனவே ஜனாதிபதி எடுப்பதாகக் கூறப்படும் நடவடிக்கையும் ஒரு கண்துடைப்பு என்றும் கூறப்படுகின்றது.

ஆனால் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ள வர்த்தகர் குமார் நடேசன் தானும் தனது மனைவியும் எவ்வித சட்டவிரோத நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்றும் இந்தச் செய்தி மூலம் தான் மிகவும் கஷ்டத்துக்கு உள்ளாகி உள்ளதாகவும் இது தொடர்பாக ஓய்வு பெற்ற நீதிபதிகளின் தலைமையில் விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நடேசனுடைய வர்த்தகம் ஹோட்டல் உள்ளிட்ட பல துறைகளில் விரிவடைந்துள்ளது. நிருபமா ராஜபக்ஷ 2010-2015 காலத்தில் நீர் வழங்கல் மற்றும் கழிவு முகாமைத்துவ பிரதி அமைச்சராக பதவி வகித்துள்ளார். அவர்களுக்கு சொந்தமான நிறுவனத்தின் ஊடாக லண்டன் மற்றும் சிட்னி நகரில் 2 சொகுசு பங்களாக்கள் மற்றும் கலைப்பொருட்களை வாங்கியுள்ளதாக பன்டோரா பேப்பர்ஸ் மூலம் தகவல் கசிந்துள்ளது. இதுதொடர்பாக IC IJ அவர்களிடம் விசாரிக்க நடவடிக்கை எடுத்து இருந்தாலும் அதற்கு பதில் கிடைக்கவில்லை.

2011 இல் அவரது சொத்து மதிப்பு 170 அமெரிக்க டொலராக இங்கு குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதனை ICIJ உறுதி செய்யவில்லை. நிருபமா ராஜபக்ஷவிடம் அவர்கள் முன்வைத்த கேள்விகள் 1990 ஆரம்பம் தொடக்கம் 2010 ஆரம்ப காலம் வரையானதாகும். அதாவது அவர் பிரதியமைச்சர் ஆவதற்கு முன்னராகும். 2015 தொடக்கம் அவர் அரசியல் ரீதியாக ராஜபக்' குடும்பத்துடன் தொடர்புபட்டிருக்காததோடு நல்லாட்சி அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட்டார். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் அவர் முல்கிரிகல ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

எதிர்க் கட்சி தரப்பைப் பொறுத்தவரை நிருபமா ராஜபக்'வின் பெயர் அதில் குறிப்பிடப்பட்டிருப்பது நல்ல பேசுபொருளாக அமைந்துள்ளது. ஏனென்றால் அவர் ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதனாலாகும். நிருபமாவை அரசியலுக்கு கொண்டு வந்தவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆவார். இன்று அவரைப் பற்றி கூறும் எதிர்க்கட்சியினர் 2015 இற்குப் பின்னர் அவர் தங்களது முகாமிலேயே இருந்தார் என்பதை மறந்து விட்டார்கள் அல்லது மக்களுக்கு அது பற்றிய ஞாபகம் இல்லை என்று நினைக்கின்றார்கள்.

எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசாங்கம் இதுபற்றி அமைதியாக உள்ளதாகத் தெரிவிக்கின்றார். ஜனாதிபதி விசாரணை நடவடிக்கையை இரண்டு மூன்று நாட்களுக்குள்ளேயே எடுத்து விட்டார். இங்கு எதிர்க்கட்சித் தலைவருக்கு இது போன்ற பனாமா பேப்பர்ஸ் விவகாரத்தில் அப்போதைய அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் மெகா பொலிஸ் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் ஆலோசகராக பணிபுரிந்த வித்யா தில்றுக் அமர பாலவின் பெயரும் மற்றும் பலரின் பெயர்களும் அடங்கியிருந்தது மறந்து போன விடயமாகும்.

இவ்வாறான பல சம்பவங்கள் காணப்பட்ட போதிலும் அப்போதைய நல்லாட்சி அரசாங்கம் பனாமா பேப்பர்ஸ் பற்றிய விசாரணை குறித்து அக்கறை காட்டவில்லை. பன்டோரா பேப்பர்ஸ் தொடர்பாக லஞ்ச ஆணைக்குழுவிற்கு சென்ற நிசாந்த வர்ணசிங்கவிற்கு பனாமா பேப்பர்ஸை மறந்து விட முடியாது.

இந்த பன்டோரா பேப்பர்ஸ் விடயம் தொடர்பாக கிடைத்துள்ள மேலதிக விபரங்கள் பின்வருமாறு: பன்டோரா பேப்பர்ஸ்' ஆவணங்கள் உலகளவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன. கடந்த வார இறுதியில் இதனை புலனாய்வு ஊடகவியலாளர்களின் சர்வதேச கூட்டமைப்பு (ICIJ) வெளியிட்டது. உலகில் 100 நாடுகளுக்கும் அதிகமான எண்ணிக்கையில் அதாவது உலகின் அரைவாசி நாடுகளின் அரசுத் தலைவர்கள், முன்னாள் அரசுத் தலைவர்கள், அரச முக்கியஸ்தர்கள், முன்னாள் அரச தலைவர்கள், அரசியல்வாதிகள், கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள், அதிகாரிகள், வங்கியாளர்கள் என 300 இற்கும் அதிகமானவர்களின் பட்டியல்கள் இங்கு வெளியிடப்பட்டுள்ளன. வரிவிதிப்பின்றி சுதந்திரமாக கடல் கடந்த முதலீட்டின் மூலம் விலைக்கு வாங்கப்பட்ட சொத்துகள், கலைப்பொருட்கள் பற்றிய விபரங்களே இங்கு வெளியிடப்பட்டுள்ளன.

பன்டோரா ஆவணங்கள் மூலம் தெரியவந்துள்ள கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி 32 ட்ரில்லியன் அமெரிக்க டொலராகும். வெளியிடப்பட்டுள்ள ஆவணங்களின் எண்ணிக்கை 12 மில்லியன்கள் ஆகும். கணக்கு எண்ணிக்கை 29000 அளவாகும்.

பன்டோரா ஆவணங்கள் மூலம் அதிகாரத்திலுள்ள 11 அரச தலைவர்களின் சொத்து விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவர்களிடையே ஜோர்தானின் அரசர் அப்துல்லா, டொமினிக் குடியரசின் ஜனாதிபதி லுவி அபிநதர், அசர்பைஜான் ஜனாதிபதி இல்ஹாம் அல்யேவ், மொண்டிகிரோ ஜனாதிபதி மிலோ டுநோநோவிக், கென்ய ஜனாதிபதி உகுரு கென்யாற்றா, கபோன் ஜனாதிபதி அலி போங்கோ ஓன்டிபா, இக்குவடோர் ஜனாதிபதி கிளர்டோ லஸோ, சிலி ஜனாதிபதி செபஸ்தியன் தினேரா, கட்டார் அமீர் ஆமீன் பின் ஹமாத் அல்னி, உக்ரேன் ஜனாதிபதி வோலோதிமீர் செலென்ஸ்கி ஆகியோர் அதில் உள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன.


முன்னாள் அரச தலைவர்கள் 8 பேரின் பெயர்களும் அதில் உள்ளடங்குகின்றன. அதிகாரத்தில் உள்ள அரச தலைவர்களிடையே துபாய், செச் குடியரசு, லெபனான் போன்ற நாடுகளின் பிரதமர்களும் உள்ளார்கள். முன்னாள் அரச தலைவர்களிடையே பிரிட்டனின் முன்னாள் பிரதமர் டோனி பிளேயர் போன்று இத்தாலியின் முன்னாள் பிரதமர் சில்வியோப் லுஸ்கோனியும் உள்ளார். சர்வதேச நிதியத்தின் முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளரான டொமினிக் ஸ்டவுஸின் பெயரும் அதில் உள்ளது. பிரேசில், பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான். ஆர்ஜென்டினா, இஸ்ரேல் ஆகிய நாடுகளின் பல அரசியல் தலைவர்களின் பெயர்களும், மொரோக்கோ அரசி லலா ஹன்சிகா ஆகியோரும் அந்தப் பட்டியலில் உள்ளடங்குகின்றனர். அத்துடன் வேறு சில நாடுகளைச் சேர்ந்த கோடீஸ்வர வர்த்தகர்கள் பலரும் அதில் உள்ளார்கள். உலகப் பிரசித்தி பெற்ற பாடகியான சகிரா, எல்டன் ஜோன், ஜெர்மன் மொடல் குளோடியா ஸ்கிப்பர், இந்திய கிரிக்கெட் நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கர் ஆகியோரும் உள்ளார்கள்.

இந்த மறைக்கப்பட்ட பொருளாதார வெளிகொணர்வு முயற்சியில் 600 இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் செயற்பட்டிருந்தார்கள். அவர்கள் 150 இற்கும் அதிகமான ஊடக நிறுவனங்களை பிரதிநிதித்துவம் செய்திருந்தார்கள். அவர்கள் இதற்காக இரண்டு வருடங்களை செலவிட்டு இருந்தார்கள். இந்த ஆவணங்கள் கடல் கடந்த சேவை வழங்கும் 14 நிறுவனங்களுக்குச் சொந்தமானவை எனக் கூறப்படுகின்றது. இங்கு அறிந்து கொள்ளப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 956 ஆகும். அவற்றிடையே 32 இற்கும் அதிகமானவை பிரித்தானியாவில் உள்ள வேர்ஜின் தீவிலேயே அமைந்துள்ளன.

பன்டோரா ஆவணங்கள் மூலம் தெளிவாகத் தெரிவது என்னவென்றால் கடல் கடந்த நிதிப் பொறிமுறை உலகில் எல்லா நாடுகளிலும் காணப்படுகின்றது என்பதாகும். உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடுகளும் அவற்றிடையே உள்ளன. இத்தொகுதிக்கு சொந்தமான ஏனைய முக்கிய தரப்பினராக பன்னாட்டு வங்கிகள், நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள், கணக்கியல் நிறுவனங்கள் உள்ளன. இவற்றின் தலைமையகங்கள் அநேகமாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிலேயே அமைந்துள்ளன. இந்த கொடுக்கல் வாங்கல்களை மிக இரகசியமாக மேற்கொள்ளலாம். அதனால் அவற்றில் ஈடுபடுபவர்களின் உண்மையான சொத்து விபரங்களை பெறுவது சிரமமாகும். எவ்வாறாயினும் கண்டுபிடிக்கப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை 60 இலட்சத்துக்கும் அதிகமாகும்.

12 இலட்சம் இ-மெயில்கள் அவற்றிடையே உள்ளன. 2016 ஆம் ஆண்டு இவ்வாறு பனாமா ஆவணங்கள் கண்டுபிடித்த கோப்புகளின் எண்ணிக்கை 11.5 மில்லியன். 2017 இல் பரடைஸ் ஆவணங்கள் கண்டுபிடிப்பு மூலம் 13.4 கோப்புகள் பகிரங்கமாக்கப்பட்டன. கடல்கடந்த நிறுவனங்கள் என்றால் என்ன என்பதை பின்வருமாறு விளக்கலாம். உதாரணமாக நபரொருவர் ஐக்கிய இராச்சியத்தில் சொத்து ஒன்றை வாங்கி இருக்க முடியும். ஆனால் அதன் உரிமையோ வேறொரு நாட்டிற்கு செல்கிறது. அதாவது சொத்து உள்ள இடத்தில் அல்லாமல் வெளியே (கடல்கடந்த) நிறுவன வலையமைப்புக்கு சொந்தமாகிறது.

இன்னுமொரு முக்கிய விடயம்செலுத்த வேண்டிய வரித் தொகை குறைவது மற்றும் எந்த ஒரு வரியும் செலுத்தாமல் தவிர்ப்பது என்பதாகும். பிரித்தானியாவுக்கு சொந்தமான கேமேன் தீவு, வேர்ஜினியா தீவு மற்றும் சுவிட்சர்லாந்து ஆகியவற்றைப் போன்று சிங்கப்பூரிலும் இவ்வாறான நிறுவனங்கள் பிரபலமானவை. இவ்வாறு இரகசியமான கடல் கடந்த சொத்துகளை வைத்திருப்பது சட்டவிரோதம் அல்ல என்றாலும், தவறான முறையில் சேகரித்த பணத்தை முதலீடு செய்வது இதன் மூலம் நடைபெறுகிறது. இவ்வாறான நிறுவனங்களுக்கு நிறுவன பெயர் மாத்திரமே உள்ளதோடு, பணிக்குழுவினர் இல்லை. நிறுவனத்துக்கு முகவரி உண்டு. இவ்வாறான நிறுவனங்கள் காரணமாக உலகின் பல நாடுகள் வருடந்தோறும் இழக்கும் வரி வருமானம் நூற்றுக்கணக்கான பில்லியன் அமெரிக்க டொலர்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



**Serving the Tamil Community of Greater Toronto**



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.



CHRISTEEN SEEVARATNAM
**(416) 258-6759**

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

Carefirst Family Health Team

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario
ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை
ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித
பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
தற்போது கனடா ஸ்காபுறோ நகரில் சங்கர் அன்கோவில் தாராளமாகக்
கிடைக்கின்றன. இங்கே படத்தில் காணப்படும் அவசியமான உபகரணங்களும்
உணவுப் பதார்த்தங்களும்.....
மிக மலிவு விலைகளில்... ஆச்சி மசாலா தயாரிப்புக்கள்...
தமிழ்நாட்டின் MTR தயாரிப்புக்கள்... அம்மியும் குழவியும் (கல்லினால் ஆனது)...
இந்தியாவின் VIDIEM சக்தி வாய்ந்த கிறைன்டர்கள்...
இந்தியாவின் Sumeet கிறைன்டர்கள் பல அளவுகளில்
அனைத்தும் கிடைக்கின்றன...
தமிழ் மக்களின் நம்பிக்யைப் பெற்ற வெற்றிகரமான வர்த்தக நிறுவனமாக விளங்கும்
'சங்கர் அன் கோ' தனது வாடிக்கையாளர்களில் எதிர்பார்ப்பு கருதி, எதிர்வரும் விஜயதசமி
பண்டிகைக்குத் தேவையான அனைத்து வகை பொருட்கள்,
கொலு வைப்பதற்குத் தேவையான அழகிய கடவுளர்களின் சிலைகள், ஏனைய
பொம்மைகள் மற்றும் மாலைகள் அனைத்தையும் இறக்குமதி செய்துள்ளார்கள்.
ABC
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)


கனடாவில்
ஒரே நாளில் ஒரே மேடையில்
அதிபர் பொ. கனகசபாபதி அரங்கில்
POWERED BY
VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
உதயன்
வெள்ளி விழாவும்
நண்பன் WORLDWIDE
விருது விழாவும்
Tasty தமிழா
30.10.2021
சனிக்கிழமை
மாலை 6.00 மணி தொடக்கம்
கலை நிகழ்ச்சிகள், இசை,
விருதுகள் வழங்கல்,
இராப்போசன விருந்து
Covid-19
கட்டுப்பாடுகளுக்கு
ஏற்ப
அழைக்கப்படுவோரின்
எண்ணிக்கை
மட்டுப்படுத்தப்படும்
Netwyn.Place
Auditorium
10. Thornmount Drive
Scarborough ON, M1B 3J4
அனுமதிச் சீட்டுகளுக்கு
416 732 1608 அல்லது 647 762 9512
An Authentic Tamil Take-out & Catering Restaurant
BUY - SELL - INVEST - LEASE
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Rajeef Koneswaran
Manager
(416) 282-4444
1265 Morningside Ave Suite 203, Toronto, ON M1B 3V9,
Sugshe Finance Canada Inc.
Sugshi Group of Companies
Ganesan Sugumar
Tel: 416 363 2624
220 Duncan Mills Rd, Unit #83, North York, ON. M3B 3J5
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Realty Inc., Brokerage
PACE LAW
FOR 40 YEARS
SERIOUS INJURY LAWYERS
Call: Poorany Sornabala
647.968.7059
PACE LAW SERIOUS INJURY LAWYER
191 The West Mall Suite 1100, Toronto, ON M9C 5K8, Canada
Phone: 1-877-236-3060 - Fax: 416-236-1809, info@pacelawfirm.com
Ethos COMMUNICATIONS
Diversity Demystified
We wish Uthayan
Publishers Team,
all the very best as
they celebrate
25 glorious years
in Publishing and
Community Service.
NO.1 NORTH AMERICAN PROFESSIONAL SECURITY COMPANY
PROTECT YOUR HOME
AND BUSINESS
ANY TIME
ANY WHERE
IN THE WORLD.
WE ONLY DO PROFESSIONAL
INSTALLATIONS AND
CONCEAL WIRES IN THE ATTIC
OR BEHIND THE WALLS.
CAMSONICS :- 905 216 8966
ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
AGA BEAUTY LEARNING ACADEMY & SPA
Sasi Naren
647.716.5252
INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive,
Markham ON. L3S 4N8
MORTGAGE ALLIANCE
Krishna Punniyam
Mortgage Agent
YOUR HOME SOLD
GUARANTEED
AT THE PRICE
YOU WANT,
OR I'LL BUY IT
விடு வாங்க விற்க
Baskaran Sinnadurai
Broker
RE/MAX ACE
416 880 8585
1286 Kennedy Rd, Unit 3
Toronto, ON M1P 2L5
CGA
NIMALRAJ VINAYAGAMOORTHY
Certified General Accountant
5200 Finch Ave E, Unit # 300
Scarborough, ON M1S 4Z4
Telephone: 416-494-4777
Cell: 416-888-1128
Fax: 416-494-4050
E-mail: nimal@nlraccounting.com
JRB
R.R.Rajkumar
647-289-6164
அம்மா
AMMA PAWN BROKER
1.0%
1.5%
416-757-0034 416-994-3861
105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
SANTHA
FULL SERVICE FACILITIES OF GENERAL CONTRACTORS
Santha
Tel: 416-200-5470
info@santha.ca
www.santha.ca
Sharuthie Windows
1755 Bough Beeches Blvd,
Mississauga, ON. L4W 2B9
Tel: 416 844 4373
Residential & Commercial
Real Estate Services
647-447-1562
Bala Logendralingam
RE/MAX
Christeen Seevaratnam - 416-258-6759
Serving the Tamil Community
Debt Problems ?
V. SRI
CREDIT SOLUTION CENTRE
416.439.0224
Award Winning Teams
Amal
416.829.9993
Abi
416.732.1810
Homelife /Future Realty Inc., Brokerage.
வீடு வாங்க விற்க
Nathan Sivagnanam
Sales Representative
Direct: 416.888.7038
Office: 905.454.4000
Formula Honda
Where You're Treated like Family
Rajah Tharmalingam
Sales & Leasing Consultant
647-833-4998
2240 Markham Road, Scarborough
1-888-496-7156 www.formulahonda.com
Buy - Sell - Invest
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
Kailain Thillainathan
647-668-8276
Ragu Thillainathan
416-629-5800
CANADIAN HOME APPRAISAL INC.
S.K.Bales
Bus:- 416- 438- 2200
Cell:- 416- 801- 3219
TECHSOURCE
Computer & Electronics Liquidator
TEL: (416)757-9111
1260 KENNEDY RD,
SCARBOROUGH, ON M1P 2L4
Keith Sanmugathas
Sun Sanmugathas
PROPERTY MAX
SANMUGATHAS TEAM
416-666-9464
416-291-0005
சங்கர் அன் கோ.
SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE, EAST UNIT # 6
SCARBOROUGH ON
(Kennedy & Eglinton)
Tel: 416 759 5100 Fax: 416 759 4916
TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY
5200 Finch Ave East #313
Scarborough
(Middlefield & Finch)
416-754-4024
ANGELS
FASHION CENTRE
Majestic City Mall
Sarees & Jewellery
Tel: 416-854-5622
Unit: G3 2900 Markham Road
Scarborough ON, M1X 0C8
Designs 2 Prints Ltd
Design Solutions For Any Media
Prabagar - 647.858.2290 / 416 292 4999
www.designs2prints.com - info@designs2prints.com
2900 Markham Road, Unit G1, Scarborough, ON M1X 0C8
Mortgage Architects
Sabesan Sivasubramaniam
Seithy.com
east FM 102.7
ஈழநாடு
GTA தமிழ்
Easy 24 News

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**பிறப்பு:**

15 - 11 - 1935

**இறப்பு:**

02 - 11 - 2020

# திரு. கந்தையா இராசையா

ஓய்வு பெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர்
(Technical Officer) இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களம்

கற்றவராம் தங்களை கரம்பிடித்த நாட் தொடக்கம்
கஸ்டங்கள் தெரியாமல் வாழ்ந்தோம்
மற்றவர்கள் நலனை நோக்கும் குணமுடையோன்
மாசற்ற பண்பின் அடையாளம் நீங்கள்
வற்றாத செல்வங்களாய் வாய்த்த பிள்ளைகளை
வாஞ்சையயொடு வளர்த்தெடுத்து இன்புற்றோம்
உற்றார் உறவினர் ஊரவர்கள் அனைவரையும்
உள்ளத்தால் நேசித்து உறவாடிய உத்தமரே

ஓராண்டு கழிகிறது ஐயா உமை இழந்து
ஒன்றாக கழித்த நாட்கள் மனதிருந்து
ஆறாது இன்னும் நெஞ்சைவிட்ட விலகாமல்
இணைந்தேதான் வருகின்றன எந்நாளும்
பேரோடு வாழ்ந்த பெரியவரே உம் பிரிவு
பேரிடி தான் எமக்கு இன்னும் பதறுகின்றோம்
ஓராயிரம் வருடங்கள் ஓடி மறைந்தாலும்
உம் அழகு முகம் தந்த ஒளி இங்கு மறையாது

எமது அன்புக்குரியவரின் ஓராண்டு நினைவஞ்சலி பிரார்த்தனையும் மதிய போசன வைபவமும் எதிர்வரும் 23-10-2021 சனிக்கிழமையன்று, **733 Birchmount Road, Scarborough.ON M1K 1R5** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள கனடா கந்தசாமி ஆலய கலாச்சார மண்டபத்தில் மதியம் 11.00 மணி தொடக்கம் நடைபெறும் என்பதை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

அன்றைய தினம் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்

**இங்ஙனம்:** மனைவி, மக்கள், மருமக்கள், மற்றும் பேரப்பிள்ளைகள்
**தகவல்:** மோகன் (மகன்): (647) 806-8435

# அடுத்த பத்து ஆண்டுகளுக்கு திமுக ஆட்சியை அசைக்க முடியாது!

- கனடா நக்கீரன்

கனடா போன்ற வளர்ச்சி பெற்ற நாடுகளில் ஐந்தாண்டுக்கு ஒருமுறை நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுகிறது. மாகாண நாடாளுமன்றத்துக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் நாலாண்டுக்கு ஒருமுறை குறிப்பிட்ட நாளில் தேர்தல் நடைபெறுகிறது. தேர்தல்கள் மிக அமைதியாக நடந்து முடிந்துவிடும். வாக்குச்சாவடியைக் கண்காணிக்க பொலீசார், துணை இராணுவம் எதுவும் கிடையாது. பெரிய பரப்புரை கூட்டங்கள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் கிடையாது. வேட்பாளர்கள் வீடுகளுக்கு முன்னால் தங்கள் பெயர், கட்சிப் பெயர் கொண்ட தட்டிகளை மட்டும் நட்டு வைப்பார்கள். முக்கியமான கட்சித் தலைவர்கள் தொலைக்காட்சியில் தோன்றி தங்கள் கொள்கை, கோட்பாடு பற்றி மூன்றுமுறை விவாதம் நடத்துவார்கள். அவ்வளவுதான்.



வாக்களிக்க ஒரு படத்தோடு கூடிய அடையாள அட்டை மற்றும் தேர்தல் ஆணையம் அனுப்பிய வரக்கு அட்டையைக் காட்டினால் போதும். கள்ள வாக்கு என்ற பேச்சுக்கு இடமில்லை. தேர்தல் சாவடிகளில் தேர்தல் முகவர்கள் என யாரும் இருக்க மாட்டார்கள்.

ஆனால் தமிழ்நாட்டில் நிலமை முற்றிலும் வேறு. கோயில் திருவிழா போலவே தமிழ்நாட்டில் தேர்தல் திருவிழா நடைபெறுகிறது. அடிமட்ட வாக்காளப் பெரும் மக்களுக்கு பணம், சேலை, மூக்குத்தி, கொலுசு, மதுபானம், புரியாணி எனப் பணக்காரக் கட்சிகள் வாக்காளர்களைக் கவனிக்கின்றன. தேர்தல் ஆணையம் சாட்டுக்கு ஆங்காங்கே திமர் சோதனையிட்டு பணம், சேலை எனக் கைப்பற்றுகிறார்கள். தமிழ்நாட்டைப் பற்றிச் சொன்னது முழு இந்தியாவுக்கும் பொருந்தும். கனடாவை எட்டிப் பிடிக்க தமிழ்நாடு மற்றும் மாநிலங்களுக்கு ஒரு சகாப்பதம் ஆவது செல்லும் என நம்பலாம்.

தமிழ்நாட்டில் புதிதாக உருவாக்கப்பட்ட காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, நெல்லை, தென்காசி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி ஆகிய 9 மாவட்டங்களுக்கான ஊரக உள்ளாட்சி தேர்தல் 6 மற்றும் 9 ஆம் தேதிகளில் இரண்டு கட்டங்களாக நடைபெற்றது. ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர், கிராம ஊராட்சி தலைவர், ஊராட்சி ஒன்றிய வட்டார உறுப்பினர், மாவட்ட ஊராட்சி வட்டார உறுப்பினர் பதவிகளுக்காக தேர்தல் நடைபெற்றது.

முதல் கட்டமாக, 78 மாவட்ட ஊராட்சி வட்டார உறுப்பினர்கள், 755 ஊராட்சி ஒன்றிய வட்டார உறுப்பினர்கள், 1,577 ஊராட்சி கிராம பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் 12,252 ஊராட்சி வட்டார உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றது. முதற்கட்ட வாக்குப்பதிவில் தோராயமாக 74.37 விழுக்காடு வாக்குப் பதிவானது.

இரண்டாம் கட்டமாக 62 மாவட்ட ஊராட்சி வட்டார உறுப்பினர்கள், 626 ஊராட்சி ஒன்றிய வட்டார உறுப்பினர்கள், 1,324 ஊராட்சி தலைவர்கள் மற்றும் 10,329 ஊராட்சி பஞ்சாயத்து வட்டார உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றது. மொத்தம் 34,65,724 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதிபெற்றவர்கள் ஆவர்.
இரண்டு கட்டத் தேர்தலிலும் மொத்தம் 23,998 இடங்களுக்கு 79,433 வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள்.

அட்டவணை 1

மாவட்ட ஊராட்சி உறுப்பினர் (9 மாவட்டங்கள்)

| மாவட்டம் | மொத்த இடங்கள் | திமுக கூட்டணி | அதிமுக கூட்டணி | பாமக |
|---|---|---|---|---|
| காஞ்சிபுரம் | 11 | 10 | 0 | 0 |
| செங்கல்பட்டு | 16 | 7 | 2 | 0 |
| வேலூர் | 14 | 7 | 0 | 0 |
| ராணிப்பேட்டை | 13 | 11 | 0 | 1 |
| திருப்பத்தூர் | 13 | 3 | 2 | 0 |
| விழுப்புரம் | 28 | 20 | 0 | 0 |
| கள்ளக்குறிச்சி | 19 | 19 | 0 | 0 |
| திருநெல்வேலி | 12 | 9 | 0 | 0 |
| தென்காசி | 14 | 13 | 1 | 0 |

அட்டவணை 11

ஒன்றியக் குழு உறுப்பினர் (9 மாவட்டங்கள்)

| மாவட்டம் | மொத்த இடங்கள் | திமுக கூட்டணி | அதிமுக கூட்டணி | பாமக | அமமுக | சுயேச்சை | தேமுதிக |
|---|---|---|---|---|---|---|---|
| காஞ்சிபுரம் | 98 | 53 | 8 | 2 | 0 | 2 | 0 |
| செங்கல்பட்டு | 154 | 31 | 14 | 0 | 0 | 2 | 0 |
| வேலூர் | 138 | 68 | 13 | 8 | 0 | 3 | 0 |
| | 127 | 65 | 1 | 6 | 1 | 5 | 0 |
| திருப்பத்தூர் | 125 | 27 | 14 | 1 | 0 | 1 | 1 |
| விழுப்புரம் | 293 | 80 | 12 | 4 | 0 | 9 | 0 |
| கள்ளக்குறிச்சி | 180 | 51 | 3 | 0 | 0 | 2 | 0 |
| திருநெல்வேலி | 122 | 67 | 8 | 0 | 2 | 12 | 0 |
| தென்காசி | 144 | 70 | 8 | 0 | 0 | 10 | 0 |

வாக்குகள் எண்ணும் பணி ஒக்தோபர் காலை 8.00 மணிக்குத் தொடங்கினாலும் ஒக்தோபர் 13 நாள் வரை 90 விழுக்காடு வாக்குகளே எண்ணி முடிக்கப்பட்டு வெற்றியாளர்களின் பெயர்களும் கட்சியும் வெளியாகியுள்ளன.
செவ்வாய்க்கிழமை காலை முதல் சிசிடிவி கண்காணிப்பின் கீழ் 74 வாக்கு எண்ணும் மையங்களில் வாக்குகள் எண்ணப்பட்டன. மேலே கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிபரம் முழுமையானது அல்ல இறுதியானது அல்ல.

தமிழ்நாடு உள்ளூராட்சித் தேர்தலில் நடிகர் விஜய் மக்கள் இயக்கத்தின் **(VMI)** 169 நிர்வாகிகள் முதல்முறையாக தேர்தலில் போட்டியிட்டு 117 இடங்களில் வெற்றி பெற்றுள்ளனர். இந்த வெற்றி பலரை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. விஜய் மக்கள் இயக்க நிர்வாகிகள் ஒன்பது மாவட்டங்களிலும், குறிப்பாக கல்லக்குறிச்சி, காஞ்சிபுரம், விழுப்புரத்தில் குறிப்பிடத்தக்க தங்கள் செயல்திறனை வெளிப்படுத்தியுள்ளனர். இதுகாறும் விஜய் மக்கள் இயக்கம் ஆற்றிய மக்கள் நற்பணிக்கான அறுவடை என இந்த வெற்றியை எடுத்துக் கொள்ளலாம்.
விஜய் மக்கள் இயக்கம் இன்னமும் தேர்தல் ஆணையத்தில் ஒரு அரசியலில் கட்சியாகப் பதிவு செய்யப்படவில்லை. தேர்தல் பரப்புரையில் விஜய் மக்கள் இயக்க வேட்பாளர்கள் இயக்கத்தின் பெயரையும் சின்னத்தையும் மட்டும் பயன்படுத்தினார்கள். இந்த வெற்றி விஜயின் அரசியல் வருகைக்கான கதவை அகலத் திறந்திருக்கிறது.

இந்தத் தேர்தலில் மூத்த நடிகரும் அரசியல்வாதியுமான கமல்ஹாசனின் கட்சியான மக்கள் நீதி மையம் தமிழ்நாடு மாநிலத் தேர்தலில் படு தோல்வி அடைந்தது போல உள்ளூராட்சித் தேர்தலிலும் மண்ணைக் கவ்வியுள்ளது. இதனால் அந்தக் கட்சியின் எதிர்காலம் இருண்டுவிட்டது என்றே சொல்லலாம்.



சீமானின் நாம் தமிழர் கட்சியும் தேர்தலில் பலத்த தோல்வியைத் தழுவியுள்ளது. வந்தேறிகள் (தெலுங்கர், கன்னடர், மலையாளிகள்) வாழலாம் ஆனால் ஆளமுடியாது எனத் தமிழ்த் தேசியம் என்ற முகமூடியை அணிந்து கொண்டு சீமானும் அவரது தம்பிமாரும் பச்சை இனவாதம் பேசுவது பாசீசம் ஆகும். கடந்த தமிழ்நாடு சட்ட மன்றத் தேர்தலில் 6.8 விழுக்காடு வாக்குகளை நாம் தமிழர் கட்சி பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.
இந்தத் தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சி அதிமுக தேர்தல் கூட்டணியில் இருந்து வெளியேறித் தனித்துப் போட்டியிட்டது. இதற்கான முக்கிய காரணம் வன்னியர்கள் வேலூர், காஞ்சிபுரம், விழுப்புரம், திருப்பத்தூர், தென்காசிசு கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் பெரும்பான்மையான எண்ணிக்கையில் வாழ்கிறார்கள் என்பதே. தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் பாமக, அஇஅதிமுக கட்சியுடன் கூட்டணி வைத்து 23 தொகுதிகளில் போட்டியிட்டு 5 தொகுதிகளில் - மயிலம், சேலம் மேற்கு, தருமபுரி, பென்னாகரம், மேட்டூர் - வெற்றி பெற்றது. வெற்றிபெற்ற ஐந்து சட்டமன்ற உறுப்பினர்களும் வன்னியபுர் சமூகத்தைச் சார்ந்தவர்கள் ஆவர்.

நடந்து முடிந்த தேர்தலில் அதிமுக கூட்டணியில் இருந்த பாமக, தேமுக வெளியேறிய சூழ்நிலையில் பாஜக வுடன் கைகோர்த்துக் கொண்டு களத்தில் இறங்கியது. கட்சியின் இணைப்பாளர்கள் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் ஓ.பன்னீர்செல்வம் ஊர் ஊராகச் சென்று பரப்புரை செய்தார்கள். பாமக கட்சி வெறியேறினாலும் அதனால் இழப்பில்லை என்று அதிமுக சொல்லியது. சட்ட மன்றத் தேர்தலில் பாமக யோடு கூட்டணி வைத்ததால் தலித் வாக்குகள் தங்களுக்கு கிடைக்கவில்லை என்றும் அந்த நிலமை மாறும் என்றும் அதிமுக தலைவர்கள் கூறினார்கள்.

ஆனால் தேர்தல் முடிவுகள் அதிமுக க்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துள்ளது. அதிமுக இன் கோட்டைகள் என நம்பப்பட்ட பல உள்ளூராட்சி மன்றங்களில் அது தோல்வியைத் தழுவியுள்ளது. ஜெயலலிதா மற்றும் சசிகலா இருவருக்கும் சொந்தமான கோடநாடு மாளிகையில் 2017 ஆம் ஆண்டில் நடந்த கொள்கை, கொலைக்குப் பின்னால் எடப்பாடி பழனிச்சாமி இருந்தார் என்ற குற்றச்சாட்டு அதிமுக இன் செல்வாக்கை வெகுவாகப் பாதித்துள்ளது. மற்றது ஒரு நாடு ஒரு மொழி எனப் பறைசாற்றும் பாஜக வுடன் ஆன பொருந்தாக் கூட்டணி.



ஆளுமையும் வசீகரமும் படைத்த ஜெயலலிதாவிற்குப் பிறகு அதிமுகவை வழிநடத்தும் எடப்பாடி முழுத் தமிழகத்தும் ஆன தலைவராக தன்னை வார்த்தெடுக்கவில்லை. முன்னைய காலங்களில் தென் மாவட்டங்களிலும் டெல்டாவிலும் முக்குலத்தோர் வாக்குக்கள் வழக்கமாக அதிமுகவிற்கு சென்றன. ஆனால் சசிகலா, தினகரன் பிரிந்த பின்னர் அதில் பெரிய ஓட்டை விழுந்து விட்டது.

மேலும் அதிமுகவில் இரட்டைத் தலைமைக்கிடையே நிலவும் பனிப்போர், கட்சியின் அடிமட்டத் தொண்டர்களையும், மக்களையும் குழப்பியுள்ளது. மறுபக்கம் எடப்பாடி பழனிசாமியின் தன்முனைப்புக் காரணமாக சசிகலாவையும், தினகரனையும் அதிமுகவில் இணைக்க மறுக்கிறார். இதுபோன்ற பல பலவீனங்களால் அதிமுகவுக்கு வாக்களிக்க மக்கள் தயக்கம் காட்டியுள்ளார்கள்.

திமுக இந்தத் தேர்தலில் பாரிய வெற்றியை ஈட்டியுள்ளது. ஏறக்குறைய 80 விழுக்காடு இடங்களைக் கைப்பற்றியுள்ளது. எதிர்க்கட்சியாக இருந்த காலத்திலும் திமுக உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றிபெற்று வந்துள்ளது. மாநில சட்டசபைத் தேர்தலில் திமுக 505 வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. இதில் 205 வாக்குறுதிகளை இந்த ஐந்து மாதத்தில் நிறைவேற்றியுள்ளதாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கூறுகிறார். 1. மொத்தம் 2.09 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் ரூ.4,000 கொரோன நிவாரண நிதியுதவி. 2. ஆவின் பால் லிட்டருக்கு ரூ.3 குறைப்பு. 3. மகளிருக்கு அரசு நகரப் பேருந்துகளில் இலவசப் பயணம். 4. பெட்ரோல் விலை லிட்டருக்கு 3 ரூபாய் குறைக்கப்பட்டது போன்ற வாக்குறுதிகளைக் குறிப்பிடுகிறார். **(https://www.hindutamil.in/news/tamilnadu/719769-cm-mk-stalin-on-dmk-government-19.html)**

தமிழ்நாட்டு மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகள் இன்னும் நிறைய இருக்கிறது. தமிழகம் விவசாயம், தொழில் துறையில் முதலிடத்தைப் பிடிக்க வேண்டும். அதற்கு ஊழல், இலஞ்ச ஒழிப்பு. முக்கியமானது. ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை என்பதற்கிணங்க ஸ்டாலின் ஆட்சியிலும் இலஞ்சம் வாங்கும் உயர் அலுவலகர்கள், காவலர்கள் பிடிபடுகிறார்கள். அரச ஊழியர்களுக்கு இலஞ்சம் கொடுக்காமல் எந்தக் காரியமும் நடவாது என்ற அவல நிலை தொடர்கிறது.

நடந்து முடிந்த தேர்தலில் எந்த மாவட்டத்துக்கும் ஸ்டாலின் எந்தப் பரப்புரைக்கும் போகவேயில்லை. இது அவரது தன்னம்பிக்கையைக் காட்டுகிறது.

தாய் பத்தடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும் என்பர்கள். இந்தப் பழமொழியை ஸ்டாலின் நனவாக்கி வருகிறார். இந்த வேகத்தில் ஆட்சி தொடர்ந்தால் அடுத்த பத்து ஆண்டுகளுக்கு திமுக ஆட்சியை அசைக்க முடியாது!

சுவாமி விபுலாநந்தர் தமிழ் ஆய்வு மையம் - கனடா

மற்றும்

தமிழியல்துறை, தமிழியற்புலம்,
திருக்குறள் இருக்கை (1969 ஆம் ஆண்டு தமிழக அரசால் நிறுவப்பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, தமிழ்நாடு

இணைந்து நடத்தும்

பொருண்மை: திருக்குறள் கூறும் அறம்.
பன்னாட்டுத் திருக்குறள் கருத்தரங்கம் - 3

நிகழ்ச்சி நிரல்

வரவேற்புரை:
முனைவர் போ.சத்தியமூர்த்தி, தலைவர், தமிழியல்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், தமிழ்நாடு

தலைமையுரை:
பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி, தலைவர், சுவாமி விபுலாநந்தர் தமிழ் ஆய்வு மையம் கனடா

சிறப்புரை:
திரு. சாம் தில்லையா, BA, LLB, சட்டவாளர், ஆய்வாளர், ரொறன்ரோ, கனடா

நன்றியுரை:
திரு இராசையா மகிந்தன் தமிழ் முதுநிலை விரிவுரையாளர்,
அண்ணாமலை - கனடா

கனடா: காலை:10:00 மணி ஞாயிறு 17.10.2021
இந்தியா: மாலை 7:30 மணி ஞாயிறு 17.10.2021

Zoom : 214 415 7884
Passcode: drbala

கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்கள்:
பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி – கனடா / முனைவர் போ.சத்தியமூர்த்தி– இந்தியா

அனைவரும் வருக! கருத்துரை தருக!!

ரொறன்ரோ தமிழ்ச் சங்கம்

நடத்தும்

"மகாகவி பாரதியார் நூற்றாண்டு நினைவுக் கருத்தரங்கம்"



நாள் : 15 ஒக்டோபர் வெள்ளிக்கிழமை 2021
நேரம் : இரவு 8:00 – 10:00 மணி (கனடா ரொறன்ரோ)
நாள் : 16 ஒக்டோபர் சனிக்கிழமை 2021
நேரம் : காலை 1:00 – 2:30 மணி (இலண்டன்)
காலை 5:30 – 7:00 மணி (இலங்கை, இந்திய)
காலை 11:00 –12:30 மணி (அவுஸ்திரேலியா சிட்னி)

"மகாகவி பாரதியாரின் ஆளுமையம்சங்கள் - முக்கோணப்பார்வை"

'ஆன்மிகம்' - வைத்திய கலாநிதி இ.லம்போதரன்
'அரசியல்' - எழுத்தாளர் க.சண்முகலிங்கம்
'ஆங்கில இலக்கியப் புலமை'- பேராசிரியர் அமுது ஜோசப் சந்திரகாந்தன்

ஒருங்கிணைப்பு: பேராசிரியர் நா.சுப்பிரமணியன்

Zoom ID: 84777257162 Passcode: 554268


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9





கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# Fruits & Vegetables Contribute Significantly to the Mental Wellbeing of Children-New Research Finds

**- Siva Parameswaran Senior International journalist (London)**

The message from the research seems to be clear and loud: avoid meat and eat more fruits and vegetables.

In what is considered to be one of the largest researches ever undertaking to assess the mental wellbeing of children, researchers from the University of East Anglia have found the clue-It's fruits and vegetables. This new research finds that children who eat more fruit and veg have better mental health. The study is the first to investigate the association between fruit and vegetable intakes, breakfast and lunch choices, and mental wellbeing in UK school children.

For the extensive research the team studied data from almost 9,000 children in 50 schools. They found that the types of breakfast and lunch eaten by both primary and secondary school pupils were significantly associated with wellbeing. Children who eat a better diet, packed with fruit and vegetables, have better mental wellbeing – the new research has assertively found.

Post publication of this research findings educational and nutrition experts have voiced in unison that fruits and vegetables are better than meat for the mental health of children in their prime growing years. It shows how eating more fruit and veg is linked with better wellbeing among secondary school pupils in particular. And children who consumed five or more portions of fruit and veg a day had the highest scores for mental wellbeing.

The study was led by UEA Health and Social Care Partners in collaboration with Norfolk County Council.

### "Good quality nutrition needed for children"

The research team say that public health strategies and school policies should be developed to ensure that good quality nutrition is available to all children before and during school to optimise mental wellbeing and empower children to fulfil their full potential. Lead researcher Prof Ailsa Welch, from UEA's Norwich Medical School, said: "We know that poor mental wellbeing is a major issue for young people and is likely to have long-term negative consequences.

"The pressures of social media and modern school culture have been touted as potential reasons for a rising prevalence of low mental wellbeing in children and young people. "And there is a growing recognition of the importance of mental health and wellbeing in early life -- not least because adolescent mental health problems often persist into adulthood, leading to poorer life outcomes and achievement.

"While the links between nutrition and physical health are well understood, until now, not much has been known about whether nutrition plays a part in children's emotional wellbeing. So, we set out to investigate the association between dietary choices and mental wellbeing among schoolchildren."

### Huge sample size

The research team studied data from almost 9,000 children in 50 schools across Norfolk (7,570 secondary and 1,253 primary school children) taken from the Norfolk children and Young People's Health and wellbeing Survey. This survey was commissioned by the Public Health department of Norfolk County Council and the Norfolk Safeguarding Children Board.

Children involved in the study self-reported their dietary choices and took part in age-appropriate tests of mental wellbeing that covered cheerfulness, relaxation, and having good interpersonal relationships. Prof Welch said: "In terms of nutrition, we found that only around a quarter of secondary-school children and 28 per cent of primary-school children reported eating the recommended five-a-day fruits and vegetables. And just under one in ten children were not eating any fruits or vegetables.

"More than one in five secondary school children and one in 10 primary children didn't eat breakfast. And more than one in 10 secondary school children didn't eat lunch. The team looked at the association between nutritional factors and mental wellbeing and took into account other factors that might have an impact -- such as adverse childhood experiences and home situations.

Dr. Richard Hayhoe, also from UEA's Norwich Medical School, said: "We found that eating well was associated with better mental wellbeing in children. And that among secondary school children in particular, there was a really strong link between eating a nutritious diet, packed with fruit and vegetables, and having better mental wellbeing. "We also found that the types of breakfast and lunch eaten by both primary and secondary school pupils were also significantly associated with wellbeing.

### Traditional breakfast better than snack

"Children who ate a traditional breakfast experienced better wellbeing than those who only had a snack or drink. But secondary school children who drank energy drinks for breakfast had particularly low mental wellbeing scores, even lower than for those children consuming no breakfast at all.

"According to our data, in a class of 30 secondary school pupils, around 21 will have consumed a conventional-type breakfast, and at least four will have had nothing to eat or drink before starting classes in the morning. "Similarly, at least three pupils will go into afternoon classes without eating any lunch. This is of concern, and likely to affect not only academic performance at school but also physical growth and development.

"Another interesting thing that we found was that nutrition had as much or more of an impact on wellbeing as factors such as witnessing regular arguing or violence at home. Prof Welch said: "As a potentially modifiable factor at an individual and societal level, nutrition represents an important public health target for strategies to address childhood mental wellbeing. "Public health strategies and school policies should be developed to ensure that good quality nutrition is available to all children both before and during school in order to optimise mental wellbeing and empower children to fulfil their full potential."



Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

## KANAGAAMBIKAI

PAWN BROKERS





25 வருடங்கள்

## உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி


உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

416 269 7198

# தமிழை ஒரு இயக்கமாகக் கொண்டு வாழ்ந்த நண்பர் சபா அருள் சுப்பிரமணியத்தின் மறைவு தமிழ் இலக்கிய உலகத்திற்குப் பேரிழப்பாகும்

**கவி வித்தகர் சபா அருள் சுப்ரமணியம்**



எமது தாய் மொழியாம் தமிழை ஒரு இயக்கமாகக் கொண்டு வாழ்ந்த நண்பர் சபா அருள் சுப்ரமணியத்தின் பிரிவு (09-10-2021) தமிழ் இலக்கிய உலகத்திற்குப் பேரிழப்பாகும். குறிபாகப் புலம் பெயர்ந்த கனடிய மண்ணில் தமிழ் மொழியைத் தக்கவைப்பதற்குக் கடந்த 30 வருடங்களாக முன்னின்று உழைத்தவர்களில் இவரும் ஒருவர் என்றால் மிகையாகாது. இவரையும் இவரது மனைவி திருமதி. யோகசக்தி அருள் சுப்ரமணியத்தையும் முதன் முதலாக அதிபர் பொ. கனகசபாபதி அவர்களின் வீட்டில்தான் சந்தித்தேன். மாதகல் மண்ணில் பிறந்த இவர் கனடாவுக்குப் புலம் பெயர்ந்திருந்தார். மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய அதிபராகவும் இவர் பணியாற்றியிருந்தார். இவருக்கு மூன்று மகன்கள் இருக்கிறார்கள். சிறுவர் இலக்கியத்தில் எங்கள் இருவருக்கும் அதிக ஈடுபாடு இருந்ததால், தொடர்ந்தும் அடிக்கடி சந்தித்துக் கலந்துரையாட முடிந்தது. சமீபகாலமாகச் சுகவீனமடைந்திருந்தாலும், சமூகத் தொண்டை அவர் கைவிடாது தொடர்ந்து கொண்டே இருந்தார்.

கனடா அறிவகத்திற்கு அவர் பொறுப்பாக இருந்தபோது, நான் ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கத்தின் தலைவராக இருந்தேன். அவர்களின் தமிழ் மொழிப் பரீட்சையும், நாங்கள் நடத்தும் தமிழ் மொழிப் பரீட்சையும் அனேகமாக ஒரே வாரஇறுதியில்தான் நடந்து கொண்டிருந்தன. இதனால் பங்கு பெற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் குழப்பநிலையை அடைந்தனர். ஏற்கனவே அவர் எனக்கு அறிமுகமானவராக இருந்ததால், பேசித்தீர்கக் கூடிய விடயம் என்பதால் நான் அவருடன் இது பற்றி உரையாடினேன். எங்கள் பக்கத்து நடைமுறைச் சிக்கல்களை அவருக்கு எடுத்துச் சொன்னேன். அவர் பெருந்தன்மையோடு, சற்றுக் கடினம்தான் ஆனாலும் முயற்சி செய்கிறேன் என்று சொல்லி, தங்களின் பரீட்சைத் திகதியை வேறு ஒரு தினத்திற்கு மாற்றிக் கொண்டார். அவர் பொறுப்பாக இருந்த நிறுவனத்தைவிட, தமிழ் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து அவர் காட்டிய அக்கறை என்னை மிகவும் கவர்ந்திருந்தது. இருவருமே சிறுவர் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டிருந்ததால், அத்துறை சம்பந்தமாக அடிக்கடி கலந்துரையாட முடிந்தது. தனது சிறுவர் இலக்கிய நூல் வெளியீடுகளுக்கு உரையாற்றப் பல தடவைகள் என்னை அழைத்துக் கௌரவப்படுத்தி இருக்கின்றார். தாய் மொழியாம் தமிழ் மொழி மீது அதீத பற்றுக் கொண்ட இவர் பழகுவதற்கு மிகவும் இனிமையானவர்.

“தமிழ் பூங்கா” என்ற ஒரு மாணவர் அமைப்பை ஏற்படுத்தி அதன் பொறுப்பாளராக இருந்து செயற்பட்டார். கடைசியாக “பட்டறிவு பகிர்வு” என்ற கவிதை மின்நூலை சென்ற ஆகஸ்ட் 28 ஆம் திகதி “சூம்” மூலம் வெளியிட்டிருந்தார். தனது பிறந்த ஊரின் பெருமை பேசும், “மாதகல் மான்மியம்” என்ற நூலை வெளியிட்டிருந்தார். தமிழ் சிறுவர்களின் மொழி வளர்ச்சிகாகப் பல நூல்களை வெளியிட்டிருக்கின்றார். இவற்றில் பயிற்சி நூல்கள், கட்டுரைகள், இலக்கண வினாவிடை, சிறுவர் கதைகள், சிறுவர் பாடல்கள், ஒலிவட்டுக்கள் போன்றவை முக்கியமாக அடங்கும். எதிர்கால சந்ததியினருக்கு இவை எப்போதும் வழிகாட்டியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

அவரது குடும்பத்தின் துயரத்தில் நாங்களும் பங்கு பற்றி, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி!

**குரு அரவிந்தன்.**
**தலைவர்,**
**கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்.**

# கோபம் ஏற்படும் வேளையில் நாம் ஏன் உரத்துப் பேசுகிறோம்?




**ஒ**ரு ஆசிரியர் மாணவர்களோடு சுற்றுலா வந்த இடத்தில், அங்கே ஒரு குடும்பத்தை சேர்ந்த உறுப்பினர்கள், சத்தம் போட்டு ஒருவரை ஒருவர் திட்டிட்டிக் கொள்கின்றனர்.

அதைப் பார்த்த ஆசிரியர், தன்னோட மாணவர்களிடம் திரும்பி சிரிச்சிட்டே கேட்கிறார்? ஏன் மனிதர்கள் கோபத்தில் இருக்கும் போது மட்டும், பக்கத்தில் இருப்பவரிடம் கூட இப்படி சத்தம் போட்டு திட்டுகிறார்கள்?

மாணவர்கள் சில நிமிடங்கள் சிந்திக்கிறார்கள்.

பின்னர், மாணவர்களில் ஒருவர், கோபத்தில் நாம் அமைதியை இழக்கிறோம்! அதனால் சத்தமிடுகிறோம் என்றார்.

ஆசிரியர், ஆனால், உனக்கு மிக சமீபத்தில் இருக்கும் நபரிடம் ஏன் சத்தமிடுகிறாய்? அவர்கள் உன்னருகில் தானே நிற்கிறார்கள்? நீ சொல்ல வேண்டியதை அவர்களுக்கு மட்டும் கேட்கும் விதமாக சொல்லலாமே?

ஒவ்வொரு மாணவனும் ஒரு காரணம் சொல்கிறார்கள். ஆனால் எந்த காரணத்திலும் அடுத்தவர்களுக்கு உடன்பாடில்லை!!

கடைசியா ஆசிரியர் பதில் சொன்னார் .... எப்பொழுதும் இரு மனிதர்கள், ஒருவர் மீது ஒருவர் கோபம் கொள்கிறார்களோ, அப்பொழுது அவர்களின் மனது இரண்டும் வெகு தொலைவுக்குச் சென்று விடுகிறது? எனவே தூரத்தில் இருக்கும் மனதுக்கு கேட்க வேண்டும் என்பதற்காகவே சத்தமிடுகிறார்கள்! மனது எவ்வளவு தூரம் விலகி இருக்கிறதோ, அவ்வளவு தூரம் இவர்கள் தங்கள் ஆற்றலை உபயோகித்து சத்தம் போட வேண்டியிருக்கு!

ஆனால், இதுவே இரு மனிதர்கள் ஒருவர் மீது ஒருவர் அன்பாக இருக்கும் போது என்ன நடக்கிறது? அவர்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் சத்தமிடுவதில்லை! அமைதியாகவும், அன்பான முறையிலும் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவார்கள்? காரணம் அவர்களின் மனது இரண்டும் வெகு சமீபத்திலே இருக்கிறது! மனதிற்கு இடையேயான தூரம் மிகக் குறைவாக இருக்கும் அல்லது மனதிரண்டும் ஒன்றோடு ஒன்று இணைந்தே இருக்கும்!

இதைவிடவும் அதிகமாக ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தும்போது என்ன நடக்கும்? அவர்கள் ஒருவருக்கொருவர் சத்தமாக பேச தேவையிருக்காது! அவர்களின் மனதுகள் இரண்டும் கிசுகிசுப்பாக பேசுவதில் இருந்தே, அவர்களின் கருத்துக்கள் பரிமாறப்படும்!

இன்னும் இன்னும் அன்பு அதிகமாகும்போது வார்த்தையே தேவைப்படாது! அவர்கள் கண்கள் ஒருவரை ஒருவர் பார்க்கும்போதே மனதின் எண்ணங்கள் வெளிப்பட்டுவிடும்!

எனவே நீங்கள் ஒருவருடன் ஒருவர் வாதிடும்போது, உங்கள் மனதுகள் இரண்டும் தொலைவாகப் போய்விடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். மனதின் தொலைவை அதிகப்படுத்தும் வார்த்தைகளை உபயோகப்படுத்தாதீர்கள்.

அப்படி செய்யாமல் போனால், ஒருநாள் உங்கள் மனங்களிரண்டின் தூரம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாகி, கடைசியில் ஒன்றுசேரும் பாதையே அடைக்கப்பட்டுவிடும் நிலை வந்துவிடும்.

**- காசி விசுவநாதன்**

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
Canadian Tamils Remembrance Organization
www.tamilremembrance.com, CTRO@tamilremembrance.com - (647)-619-3619

**அறிவித்தல்.**

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம், மாவீரர் தொடர்பான விபரங்களையும், மாவீரர்களது பெற்றோர், சகோதரர்கள் தொடர்பான விபரங்களையும் திரட்டுகின்றது.

கனடிய மண்ணுக்கு அண்மைக் காலத்தில் வருகை தந்த மாவீரர்களின் குடும்பத்தினர்,தற்போது புதிய முகவரியில் வாழும் மாவீரரின் குடும்பத்தினர்,புதிய தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தும் மாவீரர்களது குடும்பத்தினர் அனைவரும் தங்களது முகவரி, தொலைபேசி இலக்கம். போன்ற விபரங்களைத் தந்துதவுமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

நன்றி.

வணக்கம்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்.

தொடர்பு இலக்கம்: 647 619 3619

**ctro@tamilremembrance.com.**

# பழம்பெரும் நடிகர் ஸ்ரீகாந்த் காலமானார்



ஸ்ரீகாந்த் 1960களில் இருந்து தமிழ்த் திரைப்படங்களில் நடித்து வரும் ஒரு மூத்த நடிகர் ஆவார். இவர் 1965 இல் இயக்குநர் ஸ்ரீதரின் வெண்ணிறஆடை திரைப்படத்தில் அறிமுகம் ஆனார்.

நடிகர் வெண்ணிற ஆடை மூர்த்தியின்நெருங்கிய நண்பரான இவர், திரையுலகில் நுழையும் முன் அமெரிக்கத் தூதரகத்தில் பணிசெய்தார். இவர் நிறைய படங்களில் சிவாஜி கணேசன், முத்துராமன், ஜெய்சங்கர் போன்ற நடிகர்களோடு துணைப் பாத்திரங்களில் நடித்தார். பின்னர் ரஜினிகாந்த், கமல்ஹாசன் போன்ற நடிகர்களோடு எதிர்நாயகனாகத் தோன்றினார். ரஜினி கதாநாயகனாக நடித்த முதல் படமான பைரவியில் முதன்மை எதிர்நாயகனாக நடித்தது இவரேயாவார்.

இவர் கதைநாயகனாக நடித்து 1974 இல் வெளிவந்த திக்கற்ற பார்வதி திரைப்படம் சிறந்த தமிழ்த் திரைப்படத்துக்கான தேசிய விருது பெற்றது.

# ஹிப் ஹாப் ஆதியின் அன்பறிவு படப்பிடிப்பு நிறைவு பெற்றது




இசையமைப்பாளராக அறிமுகமான ஹிப்ஹாப் ஆதி இப்போது முழுநேர நடிகராக மாறி படங்களில் தொடர்ந்து நடித்து வருகிறார். புது புது இயக்குனர்களுக்கும் நடிகர்களுக்கும் தன்னுடைய அடுத்தடுத்த படங்களில் வாய்ப்பு அளித்துவரும் ஹிப்ஹாப் ஆதி இப்பொழுது அறிமுக இயக்குனர் அஸ்வின் இயக்கத்தில் அன்பறிவு திரைப்படத்தில் நடித்து வருகிறார். கிராமத்து கதை களத்தில் முதல்முறையாக ஹிப்ஹாப் ஆதி இரட்டை வேடத்தில் நடிக்கும் இந்த படத்தின் படப்பிடிப்பு இப்பொழுது நிறைவு பெற்றுள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. ஹிப் ஹாப் ஆதியின் இசைக்கென்றே இங்கு தனி ரசிகர்கள் பட்டாளம் உள்ளது. குறிப்பாக இளைஞர்களை கவரும் வகையில் இவரது துள்ளலான இசை தொடர்ந்து படங்களில் ஒலித்துக் கொண்டிருக்க அடுத்ததாக ஹீரோ அவதாரம் எடுத்துள்ளார். மீசைய முறுக்கு படத்தின் மூலம் ஹீரோவாக அறிமுகமான ஹிப்ஹாப் ஆதி அதைத் தொடர்ந்து நட்பே துணை, நான் சிரித்தால், சிவக்குமாரின் சபதம் என தொடர்ந்து படங்களில் நடிப்பதிலும் இயக்குவதிலும் கவனம் செலுத்தி வருகிறார்.

நெப்போலியன் ஆதிக்கு தாத்தாவாக இதுவரை சிட்டி பாயாக கலக்கிக் கொண்டிருந்த ஹிப்ஹாப் ஆதி முதல்முறையாக கிராமத்து பையனாக நடித்துள்ள திரைப்படம் அன்பறிவு. அறிமுக இயக்குனர் அஸ்வின் இயக்கியுள்ள இந்த திரைப்படத்தில் நெப்போலியன், ஊர்வசி, விதார்த்,சங்கீதா கிரிஷ், விஜய் டிவி தீனா என பலர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். நெப்போலியன் இப்படத்தில் ஹிப் ஹாப் ஆதிக்கு தாத்தாவாக நடித்துள்ளதாக கூறப்படுகிறது. சிவப்பு மஞ்சள் பச்சை படத்தில் நடித்திருந்த காஷ்மீரா பர்தேசி இப்படத்தில் கதாநாயகியாக நடித்துள்ளார்.



இரட்டை வேடத்தில் முதல் முறையாக இப்படத்தில் ஹிப்ஹாப் ஆதி இரட்டை வேடத்தில் நடித்துள்ளதாக கூறப்படுகிறது. சிவகுமாரின் சபதம் படத்தைத் தொடர்ந்து சத்யஜோதி பிலிம்ஸ் இந்தப் படத்தையும் தயாரித்துள்ளது. மதுரையில் இதன் படப்பிடிப்பு தொடர்ந்து நடைபெற்று வந்தது. இந்த நிலையில் அன்பறிவு படப்பிடிப்பு நிறைவு பெற்றதாக படக்குழு தற்போது அறிவித்துள்ளது.

அன்பறிவு படப்பிடிப்பு நிறைவு பெற்றது அன்பறிவு படத்தைத் தொடர்ந்து மீண்டும் சத்யஜோதி பிலிம்ஸ் தயாரிப்பில் ஹிப்ஹாப் ஆதி புதிய திரைப்படத்தில் நடிக்கிறார். அந்த படத்தை மரகத நாணயம் பட இயக்குனர் ஏ ஆர் கே சரவணன் இயக்க உள்ளார். இதன் அதிகாரப்பூர்வ அறிவிப்பு சில தினங்களுக்கு முன்பு வெளியானது. சத்யஜோதி பிலிம்ஸ் மற்றும் ஹிப்ஹாப் ஆதி மூன்றாவது முறையாக இதன் மூலம் இணைகின்றனர். இன்னும் பெயரிடப்படாத இப்படத்தின் படப்பிடிப்பு மிக விரைவிலேயே தொடங்க உள்ளது. அன்பறிவு தயாரிப்பு பணிகள் மிக விரைவிலேயே தொடங்கப்பட்டு ஓரிரு மாதங்களில் படத்தை வெளியிட படக்குழு திட்டமிட்டுள்ளது.




# ரஜினி ரசிகர்களுக்கு ஆயுதபூஜை விருந்தாக "அண்ணாத்த டீசர்" வெளியாகிறது




ரஜினிகாந்த் நடிப்பில் சிவா இயக்கத்தில் அண்ணாத்த திரைப்படம் உருவாகியுள்ளது. சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் உருவாகியுள்ள இந்த திரைப்படத்தில் நயன்தாரா, கீர்த்தி சுரேஷ், மீனா, குஷ்பு உள்ளிட்ட பல நட்சத்திரங்கள் நடித்துள்ளனர். டி இமான் இசையமைத்துள்ளார்.

அண்ணாத்த படத்தின் பர்ஸ்ட் லுக் மற்றும் மோஷன் போஸ்டர் சமீபத்தில் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் வரவேற்பை பெற்றது.

அண்ணாத்த படம் தீபாவளியை முன்னிட்டு நவம்பர் 4-ம் தேதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால் சன் பிக்சர்ஸ் தொடர்ச்சியாக அப்டேட்டுகளை வெளியிட்டுவருகிறது.

அதன் ஒரு பகுதியாக மறைந்த பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியம் பாடிய கடைசி பாடலான அண்ணாத்த திரைப்படத்தின் பர்ஸ்ட் சிங்கிள் பாடலான "அண்ணாத்த பேசுனா ஸ்டைலு பாடல்" ஏற்கனவே வெளியாகி ரசிகர்களிடையே பெரிய வரவேற்பைப் பெற்றது. அதனைத் தொடர்ந்து கடந்த இரு தினங்களுக்கு முன்னர் "சாரல் காற்றே" என்ற காதல் பாடலும் வெளியானது.

இந்தப் பாடலின் ரஜினிகாந்த்தின் இளமைத் தோற்றம் ரசிகர்களிடையே வரவேற்பைப் பெற்றது. இந்த பாடலை சித் ஸ்ரீராம், ஸ்ரேயா கோஷல் பாடியுள்ளனர். இரண்டு பாடல்களும் ரசிகர்களிடையே வரவேற்பைப் பெற்ற நிலையில் அண்ணாத்த படத்தின் டீசரும் அடுத்து வெளியாகிறது.

இதுபற்றி சன் பிக்சர்ஸ் டுவிட்டரில் வெளியிட்டுள்ள பதிவில், "அரங்கம் முழுக்க தெறிக்க தெறிக்க அண்ணாத்த டீசர் அக்டோபர் 14-ந் தேதி மாலை 6 மணிக்கு வெளியாகிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# வாலி, நாகேஷ் வறுமையில் வாடும் போது சோறு ஆக்கி போட்டவர் ஸ்ரீகாந்த் நடிகர் சிவகுமார் நெகிழ்ச்சி



நடிகர் ஸ்ரீகாந்த் 1965 இல் இயக்குநர் ஸ்ரீதர் இயக்கிய வெண்ணிற ஆடை திரைப்படத்தில் அறிமுகம் ஆனார். இவர் நிறைய படங்களில் சிவாஜி கணேசன், சிவக்குமார், முத்துராமன், ஜெய்சங்கர் போன்ற நடிகர்களோடு துணைப் பாத்திரங்களில் நடித்தார். பின்னர் ரஜினிகாந்த், கமல்ஹாசன் போன்ற நடிகர்களோடு எதிர்நாயகனாகத் தோன்றினார். தமிழ் சினிமாவின் பெரிய நட்சத்திரங்கள் கலைஞர்கள் போற்றக்கூடிய நடிகராக விளங்கினார்.

தற்போது 82 வயதான தங்கப்பதக்கம் ஸ்ரீகாந்த் நேற்று காலமானார். தன் நண்பரின் மறைவையொட்டி நடிகர் சிவக்குமார் அவர் குறித்து நினைவுக்குறிப்புகளை பகிர்ந்துள்ளார். எனது அருமை நண்பர் திரு ஸ்ரீகாந்த் 1965 ஏப்ரலில் ஜெயலலிதாவின் முதல் ஜோடியாக ஸ்ரீதரின் வெண்ணிற ஆடை படத்தின் கதாநாயகனாக அறிமுகமானார். ஈரோட்டில் பிறந்து, அமெரிக்க தூதரகத்தில் பணி புரிந்து, K பாலசந்தரால் மேடை நடிகராக பிரபலமடைந்த வெங்கி என்கின்ற ஸ்ரீதர், மேஜர் சந்திரகாந்த் என்ற கதையின் நாடகத்தில் நடித்த கதாபாத்திரத்தின் பெயர் தான் ஸ்ரீகாந்த். திரைப்படத்தில் அறிமுகமாகும்போது அதே பெயரையே ஒப்புக் கொண்டு நடித்தார். நாகேஷ் நகைச்சுவையில் விஸ்வரூபம் எடுத்தார், வாலி கவிதையால் கரை கண்டார், வறுமையின் கோரப்பிடியில் சிக்கி வாலியும், நாகேஷும் துவக்க நாட்களில் சாப்பாட்டுக்கே திண்டாட்டம் போட்ட போது, தன் கையால் சமைத்து போட்டு, மாம்பலம் கிளப் ஹவுசில் இருவரையும் காப்பாற்றியவர் ஸ்ரீகாந்த்.

கதாநாயகனாக நிற்க முடியவில்லை என்றாலும் "சில நேரங்களில் சில மனிதர்கள், ராஜநாகம்" போன்ற முக்கிய படங்களில் முத்திரை பதித்தார். என்னோடு இணைந்து, "மதன மாளிகை, சிட்டுக் குருவி, இப்படியும் ஒரு பெண், அன்னக்கிளி, யாருக்கும் வெக்கமில்லை, நவக்கிரகம்" என பல படங்களில் நடித்தவர்.

ஆன்மா சாந்தியடையட்டும் சமீபத்தில் 80 வயது பூர்த்தி அடைந்த விழா கொண்டாடினார். இன்று அவரது ஒரே மகள் மீரா வீட்டில் ஸ்ரீகாந்த், லீலாவதி, மீரா கணவர் அலெக்சாண்டர், பேத்தி காவேரி ஆகியோரையும் சந்தித்து ஓவியம், சினிமா என்று இரண்டு கா.ஃபி டேபிள் புக்ஸை கொடுத்து வாழ்த்தி வந்தேன்.

இன்று அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன். என நடிகர் சிவகுமார் தனது இரங்கலை தெரிவித்துள்ளார்.

# ஈழத்துத் திருக்கோவில்கள் 968



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில் உடுப்பிட்டி

தர்மகர்த்தா சபை ஏற்படுத்தப்பட்ட பின்னர் வீரபத்தரசுவாமி கோயிலை ஆகமவிதிகளுக்கமைய அமைக்க எண்ணி, தென்னிந்திய பிரபல ஸ்தபதிகளின் ஆலோசனையும் பெறப்பட்டது. இதற்கமைய பாலஸ்தாபன வேலைகள் 1989-1990 இல் நடைபெற்றது. நாட்டுநிலை, நிதிநிலைமை காரணமாகத் திருப்பணிவேலைகள் பல சந்தர்ப்பங்களிலும் தடைப்பட்டபோதிலும், 11.07-1997 ஆம் ஆண்டு ஆனி உத்தரத்தன்று அன்பர்களின் உதவியாலும், இறையருளாலும், வீரபத்திரசுவாமி கோயில் மகாகும்பாபி'கம் கோலாகலமாக நிறைவேறியது.

கொடியேற்றத்திருவிழா நடைபெற்றால் ஆகம விதிப்படி சுவாமி தேரிலேறி வலம் வந்து அருள்பாலிக்க வேண்டும் என்பது மரபு. பல்வேறு சூழ்நிலை காரணமாக வீரபத்தர சுவாமி கோயிலில், 1998 ஆம் ஆண்டு வரை அப்பேறு நிகழவில்லை. இக்குறையை சித்திரத்தேர் ஒன்றைச் செய்து வழங்கியதன் மூலம் நிறைவேற்றி வைத்தவர் அறப்பணிச்செல்வர் ஆசிரியர் திரு. பொன்னையா வேலாயுதம் அவர்கள். பத்ரகாளியம்பிகா சமேத சந்திரசேகர வீரபத்திரசுவாமி எழுந்தருளுவதற்குரிய சிற்பத்தேரை உருவாக்கியவர், உடுப்பிட்டியைச் சேர்ந்தவரும், சிற்பாச்சாரியார் பணியிலே ஒன்பதாவது தலைமுறையைச் சேர்ந்தவருமான ஸ்தபதி நாகரத்தினம் மகேந்திரன் அவர்கள். இவரது கன்னிப் படைப்பான இச் சித்தரத்தேரிலே, கதைகூறும் பல சிற்பங்கள் காணப்படுகின்றன.

காஞ்சியிலிருந்து சந்திரசேகர மாப்பாண முதலியார் இவ்வாலயம் இருக்குமிடத்திற்கு வந்ததிலிருந்து, வீரபத்திரசுவாமி வாள், கேடயம், கபாலம் முதலிய ஆயுதங்கள் ஏந்தித் தக்கனை வதம் புரிவது வரை 56க்கும் மேற்பட்ட சிற்ப ஓவியங்கள், இத்தேரிலே செதுக்கப்பட்டுள்ளது. ஆரம்பகாலத்தில் பத்து நாள் திருவிழாவே உடுப்பிட்டி வீரபத்திரசுவாமி கோயிலில் நடைபெற்று வந்துள்ளது. 1998 ஆம் ஆண்டு தேரோட்டம் நிகழ்ந்த பின்னர், பதினாறு திருவிழாக்கள் மிகச் சிறப்பாக வருடா வருடம் நடைபெற்று வருகின்றது.

இறைவழிபாட்டின்மூலம் வேண்டிய சித்திகளைப் பெறும்பொருட்டு ஆலயங்களிலே உற்சவங்கள் நிகழ்த்தப்- படுகின்றன. இவற்றுள் மகோற்சவம் முக்கியமானதாகும். மகோற்சவத்தின் ஆரம்பத்தில் நடைபெறும் கொடியேற்றம் படைத்தலையும், வாகன உற்சவம் காத்தலையும், இரதோற்சவம் அழித்தலையும், தீர்த்தம் அருளலையும், மௌன உற்சவம் மறைத்தலையும் குறிக்கின்றது. தேர்த்திருவிழாவின் தத்துவங்களை புராணக்கதைகள் விளக்கியுள்ளன.

தேர்த்திருவிழா குறிக்கும் சம்உறாரமானது, துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனமாகும். இக் காரணத்தினாலேயே தேர் அக்கினிச்சுவாலையைப் போன்ற தோற்றமுடையதாகக் காணப்- படுகின்றது. தேரில் எழுந்தருகின்ற மூர்த்தியும் சம்உறார மூர்த்தியாகவே தேரில் இவர்ந்தருளுகின்றார். இக் காரணத்தினாலேயே தேரில் எழுந்தருளும் போது சுவாமிக்குச் சிவப்பு நிறமான பட்டுவகைகளையும், மலர் மாலைகளையும் அணிவிக்கும் வழக்கம் காணப்படுகின்றது. தேரில் எழுந்தருளும் மூர்த்தி கோபுரவாசலை அடைந்ததும், விதிமுறைப்படி பூசை செய்து இறைவனுக்கு வெற்றித்திலகமிட்டு வரவேற்பது மரபு.

முப்புரதகனம் என்பது ஆன்மாக்களிடம் குடிகொண்டுள்ள மும்மலங்களை அழித்து ஆன்மாக்களைக் காப்பதையே குறிக்கும். தேரின் மேற்பகுதி கலசத்தை நோக்கிச் செல்லும்போது குவிந்து செல்கின்றது. அதுபோல மனிதனும் பல்வேறு எண்ணக் குவியல்களுக்குள் அடிமைப்பட்டுக் கிடந்தாலும், இறுதியில் இறைவனை நோக்கி ஒருமுகப்பட்ட சிந்தனையுடன் வாழவேண்டும் என்பதை தேரின் தத்துவம் உணர்த்துகின்றது. இவ்வாறான எத்தனையோ தத்துவங்களைத் தேரும், ஏனைய உற்சவங்களும் தத்துவார்த்தமாக விளக்கியுள்ளன.

உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரசுவாமி, சுந்தர விமானங்கள் பொருந்திய திரிதளத் தூபியைக் கொண்ட மூலஸ்தானத்தில் எழுந்தருளியுள்ளார். காளிகா அம்பிகைக்கு துவிதளத் தூபியைக் கொண்ட தெற்கு வாசல் கோயிலும், 175 வருடங்களுக்கு மேலாக அருள்பாலித்த பத்திரகாளி சமேத வீரபத்திரசுவாமிக்குத் தனியோர் ஆலயமும் அமைக்கப்பட்டுள்ளது. விநாயகர், முருகன், மகாலட்சுமி, நடேசர், தெட்சிணாமூர்த்தி, வைரவர், சண்டேஸ்வரர், ஆகியோர் பரிவார மூர்த்திகளாகக் காணப்படுகின்றனர்.

பெரியதும் சிறியதுமான இரு மணிக்கூட்டுக் கோபுரங்கள் இக்கோயிலுக்கு மெருகூட்டுகின்றது. இவற்றுடன் மடப்பள்ளி, களஞ்சிய அறை, வாகனசாலை, சுற்றுமதில், சுற்றுக்கொட்டகை, வசந்தமண்டபம், யாகசாலை, கொடித்தம்பம், ஆகியனவும் அமைக்கப்பட்டுள்ளது. வடக்கே உள்வீதியில் திருமஞ்சனக் கிணறும், வெளிவீதியில் தீர்த்தக்கேணியும், காணப்படுகின்றது. மகா மண்டபம், தரிசன மண்டபம் ஆகியவற்றை அழகிய சிற்பவேலைகள் செய்யப்பட்ட கருங்கல் தூண்கள் தாங்கியுள்ளன.

ஈசான மூலையில் அன்னதான மண்டபத்துடன் இணைந்த கல்யாண மண்டபம் உண்டு. கிழக்குத்திசையில் தேர் முட்டி அமைந்து, அருளும் அழகும் நிறைந்த திருக்கோயிலாக உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில் திகழ்கின்றது. உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயிலின் முன்வாசலில் வளர்ந்து பரந்த மருதும், வடமேற்கே வாகையும், வடகிழக்கே அரசும் காணப்படுகின்றன. ஒவ்வொரு செவ்வாயும் மருதமரத்தடியில் பொங்கல் நடைபெறுகின்றது.

சந்திரசேகர வீரபத்திரசுவாமி புரிந்த அற்புதங்கள் சொல்லில் அடங்காதவை. இவை செவிவழிக்கதைகளாக இன்றும் நினைவு கூரப்பட்டு வருகின்றது. ஆரம்பகாலத்தில் ஆறுமுகன் என்னும் அடியவர் வாயிலாகவும், பின்னர் இளையபிள்ளை என்று ஊர் மக்களால் செல்லமாக அழைக்கப்பட்ட ஆறுமுகம் இளையதம்பி என்ற பக்தரின் வாயிலாகவும், இவ்வூர் மக்களுக்கு சந்திரசேகர வீரபத்திரசுவாமியின் கடாட்சம் அருள் வடிவில் கிடைக்கப்பெற்றதாகக் கர்ணபரம்பரைக் கதைகள் மூலம் அறியக் கூடியதாயுள்ளது. கொடிய கொள்ளை நோய் போன்ற பல்வேறு இன்னல்கள் ஏற்பட்ட காலங்களிலும், உடுப்பிட்டி மக்களை சந்திரசேகர வீரபத்திரசுவாமி காப்பாற்றி அருள் புரிந்துள்ளார். தற்காலத்தில் இவ்வாலயத்தில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

சிவனின் வீரபராக்கிரமத்தைப் புலப்படுத்தும் சிவ வடிவங்களுள் ஒருவராகிய வீரபத்திரசுவாமியிடம் உள்ளம் உருகி வேண்டினால், தீவினைகள் அழிந்து, ஆயுள், ஆரோக்கியம், மற்றும் சர்வமங்கலமும் உண்டாகும் என அனுபவம் பெற்றோர் கூறியுள்ளனர். தமிழகத்திலும், ஈழத்திலும் உலகின் எல்லாப் பகுதிகளிலும் திருக்கோயில்கள் எண்ணற்றனவாக எழுச்சி பெற்றுள்ளன. அருளாளர்களும், மன்னர்களும், பக்தர்களும் பயபக்தியுடன் இத்திருக்கோயில்களைப் பேணிப் பாதுகாக்கும் பண்பாட்டினைக் கொண்டவர்களாக விளங்கியுள்ளனர். அவ்வாறே திருக்கோயில்கள் எமது பண்பாட்டின் சின்னங்கள் என்பதைக் கருத்தில் கொண்டு திருக்கோயில்களையும் அதன்மூலம் தமிழர் பண்பாட்டுக் கூறுகளையும் பேணிக்காப்பது அவசியமாகும்.

*வளரும்...*

உ

பிக்கரிங் நகரில்

அருள்ஜோதி சிவாலயம்





1400 Baylyst Unit - 13 அமைந்திருக்கும்
அருள்மிகு கௌரி அம்பிகா சமேத சாம்பசிவ பெருமானுக்கு
"மஹா கும்பாபிஷேகம்"

20-10-2021 புதன்கிழமை கர்மாரம்பத்துடன் ஆரம்பமாகி
23-10-2021 சனிக்கிழமை காலை 9மணி முதல் 4மணி வரை அடியவர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தலாம்
24-10-2021 ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 தொடக்கம் 8.30 வரை உள்ள சுபமுகூர்த்தத்தில்
மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

அடியவர்கள் யாவரும் ஆசாரசீலர்களாக ஆலயத்திற்கு வருகைதந்து சிவப்பரம் பொருளின் அருளைப் பெருமாறு அழைக்கின்றார்கள் ஆலய அறங்காவல சபையினர்.

தொடர்புகளுக்கு: 647-746-7474

# இவ்வார ராசிபலன்

**15-10-2021 வெள்ளி தொடக்கம் 21-10-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். பொதுப் பணிகளில் ஆர்வம் ஏற்படும். திருமணத் தடைகள் நீங்கும். புதுத் தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. வெளியூர் பயணம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். எண்ணிய காரியம் கை கூடும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள். பாத விநாயக வழிபாடு பாவம் போக்கும்.

அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**ரிஷபம்:** இனிப்பான செய்திகள் வரும். பழிச் சொல்லிலிருந்து விடுபடுவீர்கள். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பணியாட்களால் தொல்லை மாறும். கல்வியில் மந்த நிலை மாறும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத் தொழில் திருப்பம் வரும். அலுவலகங்களில் பாராட்டு குவியும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவரின் தொல்லைக் குறையும். பிரித்து குடும்பம் ஒன்று சேரும். முருக வழிபாடு முன்னேற்றம் தரும்.

அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**மிதுனம்:** மனம் மகிழும் நாள். உழைப்பிற்கான பலனை பெறுவீர்கள். திறமைகள் அதிகமாகும். இன்னல்கள் அகலும். கடன் தீரும். ஆக்கம் அதிகரிக்கும். பழைய பாக்கி வசூலாகும். வியாபாரத்தில் கவனம் தேவை. தன வரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். பழைய நட்பு பலன் தரும். உறவினரால் பாதகம் உண்டு. உடல் நலனில் அக்கறை தேவை. உலோகத் தொழில் உயர்வு தரும். எள் தானம் ஏற்றம் தரும்.

அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**கடகம்:** திறமைகள் வெளிப்படும். பெரியோர்களின் ஆசி கிடைக்கும். உடல் நலத்தில் அக்கறை தேவை. ஏற்றுமதி தொழிலில் நல்ல முன்னேற்றம் உண்டு. காதலால் மகிழ்ச்சி உண்டு. பொருள் சேர்க்கையுண்டு. வரவுகள் மிகுதியுண்டு. கால்நடையால் லாபம் உண்டு. ஆரோக்கியம் திருப்தி தரும். மறைமுக தொல்லை நீங்கும். ஆடை அணிகலன்கள் சேரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். மத வழிபாடு மாற்றம் தரும்.

அதிர்ஷ்ட எண். 8,0,5,3
அதிர்ஷ்ட நிறம். நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள். N,U




**சிம்மம்:** தொலைப்பேசி தகவல் மகிழ்ச்சி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். பயணத்தால் நல்ல பயன் கிடைக்கும். குடும்ப அன்யோன்யம் பெருகும். வீண் வம்பு ஓடி மறையும். பிள்ளைகளால் மன கசப்பு வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். மாருதி வழிபாடு மகிழ்ச்சியை தரும்.

அதிர்ஷ்ட எண்: 1,8,9,2
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,J




**கன்னி:** உற்சாகமும் மகிழ்ச்சியும் அலைமோதும். கணவன், மனைவி அன்பு கூடும். நினைத்த காரியம் நிறைவேறும். பயணங்களால் பணம் கரையும். வாக்கு வாதத்தை தவிர்ப்பது நல்லது. பங்கு சந்தையில் லாபம் கிடைக்கும். காதல் கை கூடும். ஆபரண சேர்க்கை உண்டு. ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். வறுமைகள் விலகும். பெருமைகள் கூடும். பூமியால் லாபம் அடைவீர்கள். பணப் பற்றாக்குறை நீங்கும். புஷ்ப வழிபாடு புண்ணியம் சேர்க்கும்.

அதிர்ஷ்ட எண்: 2,8,5,3
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,I




**துலாம்:** வழிபாடு மாற்றம் தரும். காதல் பிரிவை ஏற்படுத்தும். வீண் குழப்பங்கள் வந்து போகும். உடல் நலம் மேம்படும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். புதிய முயற்சிகள் கை கூடும். நண்பர்கள் உதவி கிட்டும். குடும்பத்தில் அமைதி உண்டு. அயல் நாட்டுப் பயணம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு அற்புதமான நாள். பித்ருக்கள் சாபம் நீங்கும். மங்களச் செய்தி வரும். கந்த வழிபாட்டால் மந்த நிலை மாறும்.

அதிர்ஷ்ட எண்: 1,4,9,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,V




**விருச்சிகம்:** நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். வீண் செலவுகளை தவிர்ப்பது நல்லது. புதிய சிந்தனை உருவாகும். கண்ணாடிப் பொருட்கள் சேதமாகும். எதிர்ப்புகள் தவிடுப் பொடியாகும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். வெளி வட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வேண்டாத நபர்கள் விலகுவர். காக வழிபாடு கர்மம் போக்கும். அதிர்ஷ்ட எண்: 4,2,7,0
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Q




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'

**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377





**தனுசு:** மனதில் மகிழ்ச்சி கூடும். நட்பு வட்டம் விரிவடையும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும். உறவினர் வருகை உண்டு. பொறாமைகள் விலகும் நாள். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகள் தாமதமாகும். நீண்ட நாளைய நோய் விலகும். தொழில் முயற்சி வெற்றி தரும். நண்பர்கள் உதவி கிட்டும். சுபக்காரியங்கள் நடந்தேறும். இல்லத்தில் அமைதி பெருகும். எள் தானம் ஏற்றம் தரும்.

அதிர்ஷ்ட எண்: 0,9,3,6
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,F




**மகரம்:** பொறாமை விலகும். குதுகலம் சேரும். வருமானம் வரும். கல்வி ஆர்வம் கூடும். கட்டிடத் தொழில் லாபம் தரும். பதவி வாய்ப்பு வரும். பிள்ளைகளால் தொல்லை உண்டு. பூமி லாபம் உண்டு. தான தர்மங்கள் பலன் தரும். பணவரவு உயரும். பொருளாதாரம் உயரும். மங்கள செய்தி வரும். முயற்சிகள் பலன்தரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். நவதானிய வழிபாடு நலம் தரும்.

அதிர்ஷ்ட எண்: 2,4,6,8
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,U




**கும்பம்:** பயணம் வெற்றி தரும். சுறுசுறுப்பாக செயல்படுவீர். விரக்திகள் மறையும். இனிதான செய்திகள் தேடி வரும். புதிய நட்பு உருவாகும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. இனம் புரியா சந்தோஷம் குடி கொள்ளும். வலம்புரி வழிபாடு வளம் சேர்க்கும்.

அதிர்ஷ்ட எண்: 0,1,7,2
அதிர்ஷ்ட நிறம்: பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,K




**மீனம்:** புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப் போக்கு மாறும். சுயதொழில் வாய்ப்பு அமையும். மங்களமான நாள். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். ஆபரணப் பொருள் களவு போகும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். உடல் சோர்வு ஏற்படும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். பசு வழிபாட்டால் பாவ விமோசனம் உண்டு.

அதிர்ஷ்ட எண்: 9,7,4,0
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,G

## வீணாவின் கவிக்கணை



தாய் குரல் கேட்டு
சிரிக்கும் சேய் போல்,
நம் தாய் மொழி,
தரணியில் எங்கு
கேட்டாலும் மகிழ்ந்திடும்
நம் முகங்களே,
நம் சுற்றத்தையும் சொந்த
பந்தங்களையும் பிரிந்து வந்த
பின்னும், பிரியாத
உறவாய் வாழ்ந்து வளர்வது,
என்றென்றும் நம்
தாய்மொழியாம் தமிழ் மொழியே,
வாழ்க தமிழ் மொழி !
வளர்க தமிழ் மக்கள்!

# அன்பின் தொனி - 626

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள்** - Be Holy

**அற்புதத்தின் இரண்டாம் பகுதி**

கெட்டசிந்தையுள்ளவர்களும் சத்தியமில்லாதவர்களும் தேவபக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணுகிறவர்களு மாயிருக்கிற மனுஷர்களால் உண்டாகும் மாறுபாடான தர்க்கங்களும் பிறக்கும், இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு.
**- 1 தீமோத்தேயு 6: 5**

தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே.
**- கொலோசெயர் 3: 10**

துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள். **- ரோமர் 13: 14**

மேலே குறிப்பிட்ட இந்த அற்புதங்கள், இவற்றை வாசிக்கும் உங்களுடைய வாழ்க்கையிலும் ஏற்படலாம், ஏற்படவேண்டும். எனவே தேவ கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து பரிசுத்தம் அடையுங்கள், அப்படியல்லாமல் தேவனுடைய பரிசுத்த பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க எவராலும் முடியாது. ஆகவே இப்பொழுதே உங்களை ஆயத்தப்படுத்துங்கள். தேவன் அருளிய பரிசுத்த ஆவியானவர் ஒருவனை ஆட்கொண்டு நடத்தும்போது அவனுடைய வாழ்க்கையில் எல்லாப் பகுதியிலும் மாற்றங்கள் ஏற்படுகிறது. அவனுடைய பேச்சு, நடை, உடை, போகும் இடம், சேரும் நண்பர், பணத்தைச் செலவு செய்யும்முறை யாவற்றிலும் மாற்றமும், முன்னேற்றமும் வெளிப்படையாகக் காணக்கூடியதாய் இருக்கும். மேலும், "பழைய மனிதனை"களைந்துவிட்டு, தேவனுடைய கிருபையினால் மாம்ச இச்சைகளுக்கு இடம் கொடாதபடி "புதிய மனிதனை" தரித்தவனாய், தேவன் உருவாக்கிய நீதியிலும் பரிசுத்தத்திலும் வாழ முற்படுகிறான்.

**கடைசிநாட்களில் கொடிய காலங்கள**

எம்மைச் சூழ்ந்து வாழ்பவர்கள் ஒன்றில் தேவனை அறியாதவர்களாகவும் அல்லது பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டவைகளுக்கு எதிராக செயற்படுகிறவர்களாகவும் இருப்பதைக் காணலாம். உதாரணமாக அப்படிப்பட்டவர்களுடைய வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை கீழ்க்காணும் வேதப் பகுதிகளில் விபரமாக வாசித்து அறியலாம்.

மேலும், கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காத வர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள், இப்படி ப்பட்டவர்களை நீ விட்டு விலகு. பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளால் இழுப்புண்டு, எப்போதும் கற்றாலும் ஒரு போதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண்பிள்ளைகளுடைய வீடுகளில் இப்படிப்பட்டவர்கள் நுழைந்து, அவர்களை வசப்படுத்திக்கொள்ளுகிறார்கள்.
**- 2 தீமோத்தேயு 3: 1-7**

அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள், வேசிமார்க் கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள், ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள். **- 1 கொரிந்தியர் 6: 9-11**

மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது, நீங்கள் செய்யவேண்டுமென்றிருக் கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல. மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன, அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே, இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன். **- கலாத்தியர் 5: 17-21**

நீங்கள் உங்கள் பிதாக்களின் நாட்கள் தொடங்கி என் கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், அவைகளைவிட்டு விலகிப் போனீர்கள், என்னிடத்திற்குத் திரும்புங்கள், அப்பொழுது உங்களிடத்திற்குத் திரும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார், நாங்கள் எந்த விஷயத்தில் திரும்பவேண்டும் என்கிறீர்கள். மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே. நீங்கள் சபிக்கப்பட்டவர்கள், ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள். என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள், அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோ வென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். பூமியின் கனியைப் பட்சித்துப்போடுகிறவைகளை உங்கள் நிமித்தம் கண்டிப்பேன், அவைகள் உங்கள் நிலத்தின் பலனை அழிப்பதில்லை, வெளியிலுள்ள திராட்சக்கொடி பழமில்லாமற்போவதுமில்லை என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது எல்லா ஜாதிகளும் உங்களைப் பாக்கியவான்கள் என்பார்கள், தேசம் விரும்பப்படத்தக்கதாயிருக்கும் என்று சேனைக ளின் கர்த்தர் சொல்லுகிறார்.
**- மல்கியா 3: 7-12**

தொடரும்...


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவதற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, நிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

# காலங்களில் அவன் வசந்தம்

**கவியரசு கண்ணதாசன் நினைவு நாள். அக்டோபர் 17 1981. 40 ஆண்டுகள் ஆகிறது அவரது மறைவு... ஆனால் அவருக்கு எந்த நிலையிலும் மரணமில்லை. கவியரசு அவர்கள் காலங்களில் வசந்தமாகி நம்முடைய சுவாசத்தில் கலந்தே வாழ்கிறார்! தொடர்ந்து அவரை கொண்டாடுவோம்.**



பொங்கி வரும் புது நிலவு
பூந்தென்றல் காற்று
பொதிகை மலைச் சந்தனம்
குயில் பாடும் புதுராகம்
இவற்றுடனே பனித்துளியின்
ஈரலிப்பும் கொஞ்சம் சேர்த்து
கொஞ்சு தமிழ் பாவைக்கு
நீ குழைத்த அரிதாரம்
காலத்தை வென்று நிற்கும்
உன் கவி அலங்காரம்!

பாற்கடலில் அமுதை வெல்லும்
சுவையாக நின்று சுடராக ஒளிரும்
சுந்தர பாவைக்குச் சந்தமிகு பாட்டுக்களால்
பட்டுடுத்தி வைத்தவனே! பரந்தாமன் புகழ் பாடும் கவியரசே!
கண்ணதாசரே!

வீடு வரை உறவு வீதி வரை மனைவி
காடு வரை பிள்ளை கடைசி வரை யாரோ?
என்று, விடை காண முடியாமல்
கவிபாடிச் சென்றாயே!

கண்ணதாசரே!
“கலங்காதிரு மனமே“, என்று நீர்
சொல்லிய பாடல் தான்
வெள்ளித்திரையில் (கன்னியின் காதலி) நும்
கன்னித்தமிழ் முதற்பாடல்!

வாழ்வின் அனுபவத்தை
வார்த்தைகளால் வடித்ததனால்
”கருவிலிருந்து கல்லறை வரை”
கலங்காமல் வாழ்ந்தீர்!

பருவ வயதில் நீர் செய்த
குறும்பனைத்தும்,
பரந்தாமன் செய்து நின்ற
கரும்பு லீலைகள் தான்!

வருந்திய காலத்தில் வைத்தியன்
போல் பரிவு செய்யும்
புருஷோத்தமன் புகழ் பாடும்
திருந்திய புலவன் நீ!

கலைஞர் (மு.க) காதலித்த கவிவாணர் நும்போல்
கவி வானில் இன்று வரை கண்டதில்லை நான்,
காதலின் புனிதத்தைக் காப்பாற்றத்தானோ நீர்
கம்பிகளுக்குப் பின்னால் கண் கலங்கி நின்றீர் ?

கலங்கி நின்ற வேளையிலும் உமது
தமிழ் வழங்கியதே ஓர் “கனி“
அழகனும் அய்ங்கரனும் அன்று பெறவில்லை
இந்தக் “கனி“!

ஆனாலும் இன்றும் சுவைக்கிறது
இந்த தமிழ் “மாங்கனி“!

நதியில் விளையாடி கொடியில் தலை சீவி நடந்து
நாம் சுவாசித்த தமிழ் மூன்றும்
மோகனமாய் ஒலிக்கின்றதே!
அது எப்படி?

நாமகள் உந்தன் நாவினில் வந்து
நல்ல தமிழை உரைத்திட செய்த
விந்தை தன்னை வியப்புடன் பார்க்கிறேன்!
தமிழனை உரைத்திடும் ஆசான் கூட
“நீ “தென்றலில்“ வரைந்திடும்
தீந்தமிழ் நடையை மந்திரமாக
மாணவர் கற்றிட வைத்த
சுந்தரத் தமிழின் சொந்தக்காரனே!
“முப்பது நாளும் பவுர்ணமி“ யாக உன்,
இலக்கிய வானில் இன்பம் கண்டேன்!

தப்புத் தப்பாய் தமிழினை எழுதிடும்
புதிய கவிதை புல(ம்பல்)வர் தம்பியர்,
தலைநிமிர்ந்து தமிழ்தனை அறிய
மீண்டும் மீண்டும் உனைப் படித்திடல் வேண்டும்!,

அயோத்தி ராமனுக்குத் தான்
“வனவாசம்“ என்றில்லை,
உன் அரசியல் வாழ்விலும்
வந்ததே “வனவாசம்“
வாழ்வில் களங்கத்தை போக்கிய
“புது வாசம்“
அதுவே, பின்னால் உனது “மனவாசம்“!

பிறந்தவர் எவரும் புரிந்து எழுதுவதில்லை
புகழுக்காக எழுதுவர் ஒரு சிலர்,
பொருளுக்காக எழுதுவர் ஒரு சிலர்,
திறந்த புத்தகம் உனது வாழ்வு!
மறந்திட முடியாதே மனிதனாய் வாழ்கின்றாய்

உன்னிடம் எது இல்லை,
கலையும் காதலும்
கட்டிப் புரண்டன உன்னிடம்!
நீ நாத்திகம் கண்டு ஆத்திகம் பேசினாய்!
அரசியல் கண்டு ஆன்மீகம் வளர்த்தாய்!
மதுவில் மிதந்து மங்கையின் சுகத்தில்
சொர்க்கத்தை கண்டவன் நீ!

தவறு என்று சொல்லப்பட்டவையெல்லாம்
உன்னால் தாலாட்டபட்டவை தானே!
அது எப்படி?
பின்னாளில், ”சுகமான சிந்தனைகள்” செய்ய
நீ புரிந்த யாகங்கள் தான்
உனது போக வாழ்வின் மோகன கீதங்களோ?

புத்தன் மனிதர்களின் துன்பங்களை பார்த்து யோகியானான்!
நீயோ போகத்தால் “யோகியானாய்“
பாவத்தைச் சுமந்த இயேசுவைப் போல்
போகத்தை சுமந்த சிலுவையாகி,
புது மனிதனானாய்!

புரியாத தத்துவங்கள் தெரியாமல் போகாமல்
புதுப்புது அர்த்தங்கள் புரியும்படி எழுதினாய்!
“அர்த்தமுள்ள இந்து மதத் தத்துவங்கள்“
அக்ரஹாரத்தோடு நிற்காமல்
அரிச்சுவடி படிப்பவர் அறியும் வகை
எழுதிவைத்த தேவனே!

உனைப் பூத் தூவி வாழ்த்துகிறேன்,
உனது வாழ்வும் எழுத்தும்
கலை வடிவங்களும் மனித குல
மேம்பாட்டிற்கு உதவும் வகை
செய்வோம் என்று நினைவு நாள்
அஞ்சலியை நிறைவு செய்கின்றேன்!

- வீணை மைந்தன்




படத்திற்கான விளக்கம் பின்வருமாறு
1991 ல் மொன்றியாலில் நடந்த “கவியரசு“ நினைவு நாளில் என்னால் எழுதி வாசிக்கப் பெற்ற இக்கவிதை வரிகளை 2019 இல் “கவியரசு“ வின் மைந்தன் வழக்கறிஞர் திரு. காந்தி கண்ணதாசன் வாசித்து மகிழ்ந்தவர். ”அப்பாவை அப்படியே படம் பிடித்துக் காட்டி உள்ளீர்களே !” என பாராட்டினார்.

பின்குறிப்பு: “கருவிலிருந்து கல்லறை வரை“ குமுதத்தில் எழுதியது
“மாங்கனி“ கவியரசு எழுதிய காவியம்
“முப்பது நாளும் பவுர்ணமி“ குமுதத்தில் எழுதியது
“வனவாசம்“ - “மனவாசம்“ கவியரசு எழுதியது
“சுகமான சிந்தனைகள்“ கவியரசு எழுதியது
“அர்த்தமுள்ள இந்து மதம்“ கவியரசு எழுதியது
“தென்றல்“ “கண்ணதாசன்“ கவியரசுவின் பத்திரிகைகள்.

**“மக்கள் கவிஞர்” கல்யாண சுந்தரனார் காலமாகிய அதே அக்டோபர் 8ஆம் நாள் - “நல்ல தமிழ் எழுதும் எழுத்தாளர், கவிஞன்” என்று முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களால் பாராட்டப் பெற்ற கவிஞர் பிறைசூடன் அவர்கள் மறைவு குறித்து எங்கள் கவிதாஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம்.**

# "சிறை" தந்த பிறைசூடன்



பிறை சூடிய பெருமானின் அருளும்,
குறை ஒன்றும் இல்லா,
மறை மூர்த்தி கண்ணன் அருளும்,
நிறைவாகப் பெற்றதினால்
குறையின்றித் தமிழ் கற்று
மறை நான்கும் அறிந்துணர்ந்து -
தமிழ்த்
துறைதோறும் ஆய்ந்தறிந்து
சிறை தந்த இயக்குனராம்
ஆர்.சி சக்தியின் நட்பாலே
(முதல்) முறையாகப் பிறைசூடன் திரை கவியானான்!
காவல்துறை வீரனாக வேண்டுமென்று
ஆவல் மிகக் கொண்ட தந்தையின் விருப்பத்தை
மேவி நிறைவேற்றாமல்
நாவன்மை மிகு தமிழால்
கவி எழுதி தமிழின்பம் தந்தவனை
ஆவிதான் போனாலும் அவன் புகழை
சாவிலும் மணக்கின்ற தமிழாலே
தமிழ்த்திரையும் இலக்கியமும்
நிலைக்கும் வரை நினது புகழ்
நிலமிசை நீடு வாழும் ஐயா!

**- வீணை மைந்தன்.**

# கடந்தவையும் கடப்பவையும் (6)

- உமா மோகன் -

அப்போ நடந்ததைச் சொல்லும் வேளை
இப்போ நடப்பவை குழப்புது என்னை
சற்றே நிதானித்து நின்று விட்டு தொடர்ந்து
செல்க அத் தோழியரை - ஆம்

தொடர்ந்தே நடக்கும் தோழியரும்
அடர்ந்தே படர்ந்த மல்லிகைப்
பந்தல் கொண்ட வீடுகள் உயர்ந்து
நிற்கும் அழகுதனைப் பார்த்தவாறே நடந்திடுவர் - அன்று சிறுவரைக்

கூடையில் இருத்தி குடைவிரித்து
வாடைக் காற்றின் வசந்தம் தரும் விசிறி போட்டு
கண்ணைப் பறிக்கும் வெளிச்சம் பாச்சி - அங்கு
அண்ணர் ஒருவர் படம் பிடிக்கும் அன்றைய

பெயருக்குரிய 'குகன் ஸ்ருடியோ' அதையும் தாண்டி - பின்
பெரிய கோபுர அழகு கொண்ட சிவனையும் ஒருதரம்
திரும்பிப் பார்த்து விரையும்போது
நெருங்குமே கடைத் தெருப் பகுதியது

என்ன இல்லை அன்று அங்கு?
சொன்ன நாளே தைத்தெடுக்கும் தையற்கடைகள்
வண்ணமான நகைகள் கொண்ட நகைக்கடைகள்
எண்ணப்படி வாங்கிக் கொள்ள பலசரக்கை

வரிசையாகப் போட்டுவைப்பார் வனப்புடனே - நல்ல
உரிசையாக இருக்கும் தின்பண்டங்கள் அத்தனையும்
தேர்ந்தெடுத்து வாங்கிடலாம் தெருவோரக் கடைகளிலும் - குடும்பமாக
சேர்ந்து போகும் வழக்கம் கொண்ட மக்களது

பொழுதுபோக்கு இடம் ஒன்று பெரிதாக அங்கிருக்கும் -
திரும்பி அதைப் பார்க்கும் போது
பழைய கதை மனக்கண்முன் வந்துபோகும்

சண்டைக் காட்சி வந்த போது
'இண்டைக்கு வேண்டாம்' என்று கூறி
வீரிட்டு அன்று அழுததனால் இடைநடுவில்
ஆருக்கும் இடையூறு இல்லாமல்

திரும்பி வீடு வந்த கதை - தந்தையார்
பெருமையோடு கேலியாகச் சொல்லும் கதை.
மாலை நேரம் வந்துவிட்டால் தங்கள்
வேலை எல்லாம் முடித்து விட்டு

குதூகலமாய் கிளம்பிடுவர் அயலூர் மக்களும் தான் - அங்கு
பலவித ஊர்திகளில் பாங்காக வருவரவர் - அச்
'சென்ட்ரல் தியேட்டர்' இற்கு

அதையும் தாண்டி பலவேறு
கதைகளையும் பேசிக்கொண்டு
சிறு தூரம் நடந்துவிட வந்துவிடும்
பெருவிரைச்சல் கொண்ட அந்த சந்தையும் தான்.....

சந்தை நடுவிருக்க சுற்றிவர நான்கு பக்க வீதி அங்கு
வங்கியோடு வரிசையாய் இணைந்த பல கட்டடங்கள்
இவற்றிற்கும் சந்தைக்கும் இடையினிலே
பலவூர் சென்றுவரும் வண்டிகள் தரித்து நிற்க

எண்டைக்கும் திருவிழா போல் கலகலக்கும்
அன்றைய பருத்தித்துறைப் பெருநகர்
வடக்குப் பக்க வாசலே வசதி எங்களுக்கு
படக்கென்று சந்தைக்குள் புகுவதற்கு - உள்ளே

சந்தையின் கதவோடு உருண்டையான பெருந்தூண் ஒன்று
இரண்டாகி இருபுறமும் குத்தண இருப்பது போல்
கடகப் பெட்டிகள் மேல் தட்டுப் பெட்டிகளைத் தான் வைத்து
பாலப்பழமும் நாவற்பழமும் என காலத்திற்கேற்ப

பல்வகைப் பழங்களையும் அங்கு
நல்லபடி குவித்து வைத்து - அதன்மேல்
கொத்துப்பேணி அளப்பதற்கும் வைத்துக்கொண்டு
மெத்தவும் அழகுடனே அமர்ந்திருப்பர் இருவர் அங்கு - அவர்களை

அடுத்தடுத்தே மேலும் பலர் விதம் விதமாய் பெட்டிகளில்
அடுக்கியே வைத்திருப்பர் பல்சுவைப் பழங்களையும்
பட்டுப்புளியோடு கீறிவைத்த கிளிச்சொண்டு மாங்காயும்
உப்புத்தூள் போட்டு அடுக்கி அங்கு வைத்திருப்பர்

பார்த்தவுடன் வாயூறும் வயசு அது - புளிப்பை
தேர்ந்தெடுத்து நன்குண்ணும் நண்பிக்கோ - அதை
வாங்கும் வரை விழி இரண்டும் வேறு
எங்கும் போகாது - அருகில்

கறுத்தக்கொழும்பு மாம்பழமும் கருத்தைக் கெடுக்கும் மணத்தோடு அங்கிருக்க - நல்ல
பெரிய விளாம்பழத்தோடு பெரியநெல்லி
சிறிய நெல்லிக்காய்களோடு இலந்தைப்பழமும் அங்கிருக்கும்

கப்பல் கதலி மொந்தன் இரதை ஆனை என
எல்லா வகை வாழைப்பழங்களையும்
கூவிக் கூவி விற்பார்கள் - அங்கு
தேனாக இனிக்கும் நல்ல பலாச்சுளையைப்

பக்குவமாய் பிடுங்கி சுவை அறியக் கொடுத்திடவே -
மிக்க விருப்போடு பலரும் அதை வாங்கிச் செல்வர் - அதன்
மூக்கைத் துளைக்கும் வாசனையும்
நாக்கில் எச்சில் ஊறவைக்கும்.

இவை மட்டுமா???
வடை வாய்ப்பன் எள்ளுப்பாகு வெள்ளையான கச்சான் அலுவா முறுக்கொடு பனங்காய்ப் பணியாரம் எனப் பல்வகைச்சிற்றுண்டிகளொடு

சுடச்சுட பாலப்பம் - சம்பலோடு
குளிர்ச்சியான வெள்ளையப்பம் மற்றும் இடியப்பம்
நல்லதொரு வாசனை கொண்ட வெள்ளைச் சம்பலோடு மிருதுவான உடன் சுட்ட தோசையையும் - அங்கு

எப்போதும் வாங்கிடலாம் - அடுத்து
மரக்கறிப்பக்கம்
அன்று பறித்த மரக்கறிகள் - பல
கொண்டு வந்து குவித்திருப்பர்

அந்தப் பக்கம் எங்களுக்குத் தேவையில்லை
வந்த பக்கம் சென்று அங்கு
புளிப்பை விரும்பும் நண்பி பட்டுப்புளிப் பக்கம் போக
இனிப்பை விரும்பும் மற்றவளோ நாவற்பழப் பக்கம் போக

இருவரின் ஐகளிலும் இரு சுறுள்கள்
நடந்தபடியே நடத்திடுவர் - ஒருத்தி
தன்நிலை மறந்து கண்ணடித்துக் கண்ணடித்துப் பட்டுப்பளியோடு ஊறிட - மற்றவள்

நிறக்கிறதா நாக்கு என நாக்கை வெளியில்
நீட்டி நீட்டிப் பார்த்தபடி நாவற்பழம்தனை நன்கு ருசித்திடுவாள்.

(தொடரும்)

# முத்திரைகளை கிழிக்கும் பாண்டோரா ஆவணங்கள்




பாண்டோரா என்பவள் உலகின் முதல் பெண் என கிரேக்க புராணங்கள் குறிப்பிடுகின்றன. மேலும் அவள் பற்றிய கதை விரிவாக விளக்கப்பட்டிடுக்கும் இவ்வாறு கிரேக்க தொன்ம கதையை ஒட்டித்தான் உருவானது பாண்டோராவின் பெட்டி **(Pandora's Box)** என்ற சொல். ஏதேனும் ஊழல் அல்லது ரகசியங்கள் அடுக்கடுக்காய் வெளிவரும் போது பாண்டோராவின் பெட்டி திறந்தது என்று கூறப்பட்டுள்ளது.

இப்போதும் அப்படியொரு பெட்டி திறக்கப்பட்டுள்ளது . அதற்கு பாண்டோரா பத்திரிகை **(Pandora Paper)** என்று பெயர்.

இந்த பாண்டோரா பத்திரிகை உலகின் மிகப் பெரிய செல்வந்தர்கள், அதிகாரம் மிக்க தலைவர்கள், பிரபலங்கள், அரசியல் தலைவர்கள், அதிகாரிகள், விளையாட்டு உலகினர் என பலர் பணமாகவும் சொத்துக்களாகவும் வெளிநாடுகளில் வாங்கி வைத்திருக்கின்ற மற்றும் முதலீடு செய்திருக் கின்ற விவரங்கள் வெளியாகியுள்ளன.




இதற்கு முந்தைய ஊழல்களில் எல்லாம் கறுப்புப் பணம் என்றாலே சுவிஸ் வங்கிகள், பனாமா கேமேன் தீவுகள், பிரிட்டிஷ் வர்ஜின் தீவுகள் போன்ற நாடுகளைக் குறிப்பதாக இருந்தன. இப்போதோ சிங்கப்பூர், துபாய், நியூசிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் கிடைக்கும் வரிச் சலுகைகளைப் பயன்படுத்தி பலரும் முதலீடு செய்திருப்பது தெரியவந்துள்ளது.

புலனாய்வுப் பத்திரிகையாளர்களுக்கான சர்வதேசக் கூட்டமைப்புக்கு **(International Consortium of Investigative Journalists - ICIJ)** இந்த ஊழல் ஆவணங்கள் கிடைத்தன. அது உலகின் முக்கியமான பத்திரிகைகளான 'தி வாஷிங்டன் போஸ்ட்,' 'தி கார்டியன்', 'பிபிசி' போன்ற ஊடகங்களுக்குப் பகிர்ந்தளித்தது. உலகின் 14 நிதிச் சேவை நிறுவனங்களின் ஒரு கோடிக்கும் மேற்பட்ட ஆவணங்களிலிருந்து இந்த ஊழல் வெளிவந்தது.

இவ்வாறு பெரும் புள்ளிகள் எப்படியெல்லாம் பல ஊழல்களை செய்திருக்கின்றார்கள் என்ற விவரங்களை பார்த்தால் வியப்பாக இருக்கின்றது.

உதாரணமாக உள் நாட்டில் ஒரு ஊழல் மூலமாக கிடைத்த பணத்தை கொண்டு வெளிநாட்டில் ஒரு அறக்கட்டளை ஆரம்பித்து அதன் மூலம் ரியல் எஸ்டேட் உட்படப் பல துறைகளிலும் முதலீட்டை மேற்றக்கொள்ளல். இதில் அறக்கட்டளையை உருவாக்கும் ஒருவர் இருப்பார் அவர் செட்லர் **(settlor)** எனப்படுவார். அதன் பிறகு செட்லர் குறிப்பிடும் நபர்களின் சார்பாக அந்த அறக்கட்டளையை நிர்வகிக்க ஒரு அறங்காவலர் இருப்பார். மூன்றாவதாக அதிலிருந்து கிடைக்கும் லாபத்தை அனுபவிக்கும் பயனாளிகள் இருப்பார்கள்.

இவ்வாறு தவறான வழியில் கிடைத்தது, வரி ஏய்ப்பு செய்தது, லஞ்சமாகப் பெற்றது, தரகு வேலையில் கிடைத்தது எனப் பல வகையிலும் கிடைத்த பணத்தை இப்படி வெளிநாடுகளில் அறக்கட்டளைகளில் முதலீடு செய்கிறார்கள்.

இது போன்ற முதலீடுகள் சில நேர்மையானவையாக இருந்தாலும் பெரும்பாலானவை கருப்பு பணமாகவே இருக்கும் . இது தொடர்ந்து இடம் பெற்றாலும் சமீப காலமாக இந்த பாண்டோரா பத்திரிகை விவகாரம் சற்று பரவலாக பேசப்பட்டு வருகிறது. மேலும் இது போன்ற பண பதுக்கல்கள் நேர்மையான வரி விதிகள் மூலமான கட்டுப்பாட்டால் மட்டுமே குறைக்க முடியும் இது உலகளாவிய ரீதியில் மட்டுமல்லாது ஒவ்வொரு நாட்டிலும் இடம் பெறவேண்டும்.

*- இரா. சஹானா*

*(சென்ற வார தொடர்ச்சி)* *(அத்தியாயம் 30)*

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் இலங்கைப் பயணம்

அப்போது 'வீரவைஷ்ணவரே வருக! வுருக! திருக்கேதீஸ்வர சிவ பூமிக்கு வருக! வருக!' என்றான் வந்தியத்தேவன். 'நீர் செய்த பேருதவிக்கு நன்றி' என்றும் கூறினான். 'நான் குடந்தையில் இருந்து தஞ்சை போகும் வழியில் ூடு பல்லக்கில் சென்ற பழுவூர் ராணியிடம் உம் பெயரைச் சொல்லி, முத்திரை மோதிரம் பெற்றுக் கொண்டேன். பழுவூர் ராணி எனக்கு ஒரு வேலை தந்தார். இலங்கையில் மதுரைப் பாண்டிய வம்சத்து மணிமகுடத்தையும், இரத்தின மாலையையும் இலங்கை அரச குடும்பத்தவர் மலைநாட்டில் ஒழித்து வைத்திருக்கிறார்களாம். அதை தேடிக் கொடுத்தால் சின்னப்பழுவேட்டரையரிடம் இருந்து தஞ்சைக் கோட்டைக் காவலன் என்ற பதவியை எனக்குப் பிடுங்கித் தருவாராம்' என்றான் வந்தியத்தேவன். 'நல்லது நல்லது நான் உனக்கு உதவி செய்யவே இங்கு வந்தேன்! இதோ உன் முத்திரை மோதிரமும், ஓலைச் சுருளும் எடுத்து வா இங்கிருந்து தப்பி விடுவோம். இதனை சேனாதிபதி விக்கிரமகேசரி தான் கொடுத்தார். உன்னோடு வழிகாட்டியாக போகும்படி பணித்தார்' என்றார் ஆழ்வார்க்கடியான். வந்தியத்தேவனிற்கு இளவரசரை பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்கியது. 'இளவரசர் எங்கே இருப்பார்? தங்கள் பெரிய உதவிக்கு மீண்டும் நன்றி. இருந்தும் சேனாதிபதியை பார்த்துவிட்டு புறப்படலாம்' என்றான் வந்தியத்தேவன். 'ஆமாம் அவரைப் பார்த்து வானதி தேவியார் பற்றி பேசிய பின்பு புறப்படுவோம்' என்றார் ஆழ்வாக்கடியான். 'இது என்ன இவருக்கு எல்லாம் எப்படித் தெரி-கிறது! இவர் பெயரில் எனக்கிருப்பது சந்தேகந்தான் நல்லவனைப் போல் சொல்லி என்னை எங்கு மாட்டிவிடப் போகிறானோ தெரியவில்லையே!' என்று எண்ணிக் கொண்டான் வந்தியத்தேவன். கொடும்பனார் பெரிய வேளாளரா-கிய சேனாதிபதி பூரிவிக்கிரமகேசரி, வயது முதிர்ந்த அனுபவசாலி. சோழர் குலத்தவருடன் நெருங்கிய உறவு பூண்டவர். இவர் சகோதரன் சிறிய வே-ளாளர், வானதியின் தந்தை. இலங்கைப் போர்க்களத்தில் வீர சொர்க்கம் சென்றவர். அவர் அடைந்த தோல்வியின் அவமானத்தை துடைக்க, வயது முதிர்ந்த இயலாமையிலும் போர் நடாத்த தலைமை தாங்கி இங்கு வந்துள்ளார். இவர் முதல் மந்திரி அநிருத்தரிடம் பேசிக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் ஆழ்வார்க்கடியான் மூலம் வந்தியத்தேவன் பற்றிய செய்தியை அவர் அறிந்திருந்தமையால், வந்தியத்தேவனை காப்பாற்ற ஏற்பாடு செய்தார். வந்தியத்தேவனும், ஆழ்வாரக்கடியானும் சேனாதிபதியிடம் வந்தனர்.

அப்பொழுது சேனாதிபதி வந்தியத்தேவனை நோக்கி, 'தம்பி உன்னை அவர்கள் நன்றாக கவனித்தார்களா? இங்கு உணவில்லை! பஞ்சம் தான் இலங்கை மன்னன் மகிந்தனின் சேனை வீரர்கள் குளக்கரைகளை உடைத்துவிட்டு போய் விட்டார்கள். விவசாயம் செய்ய முடியவில்லை, ஆட்களும் இல்லை. எம்முடைய நாட்டில் இருந்து போதிய அரி-சி வருவதில்லை. இந்த நாட்டு மக்கள் கூட பஞ்சத்தில் பிழைக்கின்றார்கள்' என்றார். அதற்கு வந்தியத்தேவன், 'ஐயா பழையாறை வீரப் படை வீடுகளின் வழியாக குந்தவை பிராட்டி வந்த போது, அங்குள்ள பெண்கள் இலங்கையில் உள்ள கணவன்மார்களும், பிள்ளைகளும் பட்டினி கிடப்பதாக முறையீடு செய்ய, குந்தவை பிராட்டி சேனாதிபதி பெரிய வே-ளாளர் இருக்கும்வரை நீங்கள் பயப்பட வேண்டாம்! என்று தைரியம் கொடுத்தார்.




அத்துடன் கொடும்பனார் வானதி தேவி என்று குந்தவைக்கு ஒரு பெண் தோழி உண்டு. நல்ல மகிழ்ச்சியாக இருவரும் இணைபிரியாது இருக்கிறார்கள். குந்தவை பிராட்டி தங்களிற்கு எந்த செய்தியும் தரவில்லை. ஆனால் வானதி பற்றி இளவரசரிடம் சொல்ல சில சேதி தந்துள்ளார்' என்றான். இவற்றைக் கேட்டு பூரித்துப் போன சேனாதிபதி, வந்தியத்தேவனைக் கட்டித் தழுவி விடை கொடுத்தார். அத்துடன் இவன் ஆழ்வார்க்கடியான் என ஆழ்வார்க்கடியானை அறிமுகம் செய்தார். வந்தியத்தேவனும், ஆழ்வார்க்கடியானும், மேலும் இரு வீரர்களின் துணையுடன் அன்றிரவே இளவரசரைப் பார்க்க புறப்பட்டனர் மாதோட்டத்தில் இருந்து புறப்படட்டார்கள். அடர்ந்த காடுகள், பயங்கரமான மிருகங்கள் இவற்றின் ஊடாக அவர்கள் பயணம் தொடர்ந்தார்கள், மிக வேகமாகச் சென்று, சூரியன் அஸ்தமிக்கும் சமயம் இராஜபாட்டையை அடைந்தனர். இராஜபாட்டையில் இருந்து தம்புள்ளை நோக்கி பயணம் செய்ய வேண்டும். தம்புள்ளையில் சிங்களவர்கள் வசித்தனர். அவர்கள் எந்த தடையும் இன்றி தம் தொழில்களைச் செய்து வாழ்ந்தனர். சோழர் தம்புள்ளை வரை கைப்பற்றி விட்டனர். தம்புள்ளைக்கு அப்பால் சிம்மகிரி குன்றும், கோட்டையும் மகிந்தன் வசம் இருக்கிறது. இங்கு புத்த பிக்குகள் நல்ல மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். இழந்து போன விகாரைகள் யாவும் திரும்பவும் புதுப்பித்துக் கொடுக்றார்கள். இங்கு யுத்தமுறை மாறிவிட்டது. இளவரசை எதிர்த்துப் பேசும் சக்தி யாருக்கும் இல்லை. ஆனால் குந்தவை தேவி-யின் வாக்கு ஒன்றே அவரிற்கு தேவ வாக்கு. இவ்வாறு வந்தியத்தேவனும், ஆழ்வார்க்கடியானும் பேசிக் கொண்டிருக்கையில் நான்கு குதிரைகள் மின்னல் வேகத்தில் பாய்ந்து சென்றன. வந்தியத்தேவன் அவர்களை பார்த்தான். இவன் பாத்திபேந்திரவர்மன் அல்லவா! இவன் காஞ்சியிலுள்ள இளவரசர் ஆதித்தரின் அந்தரங்க நண்பன் அல்லவா! இவன் ஏன் இலங்கை வந்தான்? என்று எண்ணுகையில், அவன் திரும்பிப்பார்த்து, வந்தியத்தேவனை நோக்கி, 'நீ எப்படி இங்கு வந்தாய்? பழுவேட்டரையர்கள் உன்னை ஒழித்துவிட்டு இருப்பார்கள் என்று எண்ணினேன்! எப்படியாவது உயிரை காப்பாற்றி தப்பிப் பிழைத்துவிட்டாய். உன்னிடம் இளவரசர் ஒப்புவித்த காரியம் என்ன ஆயிற்று?' என்று வினவினான் பாத்திபேந்திரன். 'அதை நான் முடித்துவிட்டேன். என்னிடம் தந்த ஓலைகளில் ஒன்றை சக்கரவர்த்தியிடமும், மற்றைய ஒன்றை குந்தவையிடமும் கொடுத்து விட்டேன்.' என்றான் வந்தியத்தேவன். அதற்கு

*(தொடர்ச்சி 38ம் பக்கம்)*



ஜீவன் முக்தி (பகுதி ) 128

# மனம் என்ற ஒன்றே உங்களுக்கு இல்லை

கோர்த்துக் கோர்த்துப் பார்த்து வருகின்ற எண்ணங்களை, தானாகவே காரணம் இல்லாமல் பொங்குகிற எண்ணங்களை Pain shaft. joy shaft என்று பிரித்து பார்க்கும்பொழுததான், உங்கள் மனதையே நீங்கள் உருவாக்குகிறீர்கள்.

மனமே அப்போதுதான் உருவாகின்றது. நீங்கள் ஆச்சரியமாகக் கேட்கலாம்... மனதை அப்போதுதான் உருவாக்குகின்றோம் என்றால், அதுவரை எங்களுக்கு மனமே இல்லையா?
ஆம்! எண்ணங்களைக் கோர்த்து பார்க்கம்வரை உங்களிடம் மனம் உன்ற ஒன்றே இல்லை.

கோர்த்தல் எனும் மாயச் செயலால் உருவாகும் நிழல் உருவத்தைத்தான் மனம் என்கிறீர்கள்.
அதுவரைக்கும் மனம் இல்லை. ஆதற்குப் பிறகும் மனம் இல்லை.

எப்போதெல்லாம் எண்ணங்களைக் கோர்த்துப் பார்க்கின்றீர்களோ அப்போது மட்டும்மான் மனம் எனும் நிழல் தண்டு (shaft) உருவாகின்றது. நிழலை பார்த்த குழந்தை அதைப் பேய் என்று நம்புவதைப்போல உங்களின் ஜீவன் மனத்தை பார்த்து பயந்து போயிருக்கிறது. நிஜத்தில் உங்களின் மனம் என்பது ஒன்றுமில்லாத ஒன்று. மனம் என்பது ஒரு சம்பந்தா சம்பந்தமில்லாத பொருத்தமற்ற, ஒழுங்கற்ற எண்ணங்களின் சுடகூட்டுத் தொகை.
எண்ணங்களைக் கோத்தால் மனம் இருப்பதாய்த் தெரியும். அதை நிறுத்த ஆரம்பிக்கம் வினாடியே அப்படி ஒன்று இல்லை என்று தெரியும்.

## ஒரு சின்ன 5 நிமிட சோதனை.

இப்பொழுது அதைச் செய்து பார்க்கலாம். ஒரு பேப்பரில் என்னென்வெல்லாம் தொடர்ந்து வருகிறதோ, அதை எழுதிக் கொண்டே இருங்கள். எழுதிப் பார்க்கவில்லையென்றாலும் கவனித்து அதை உட்கார்ந்து பார்த்தீர்களானாலும் போதுமானது.

உங்களையே அறியமல் சிரிக்க ஆரம்பித்துவிடுவீர்கள். நமக்குள் என்ன நடக்கிறது!. ஒரு ஐந்து நிமிடம், உங்களுக்குள் ஓழுகின்ற எண்ணங்களை எழுதிப் பார்த்து, படித்துப் பாரத்தீர்களென்றால் தெரியும். ஒரு பெரிய பைத்தியக்காரச் சண்டையே உள்ளே நடந்து கொண்டு இருக்கின்றது என்று.

## துன்பத்தண்டு. இன்பத்தண்டு இரண்டும் மாயங்களே.

நமக்கு எழும் எல்லா எண்ணங்களும் (துக்க எண்ணம், மகிழ்ச்சி எண்ணம்) ஒன்றோடு ஒன்று தொடர்பில்லாத, தனித்தனியான எண்ணங்களே.
தனக்குள் தன்னால் அமர முடியாமைதான் நரகம்.

உலகத்தில் இருக்கின்ற எல்லாருக்கும் நாம் நேரத்தை ஒதுக்குவோம். நேரத்தை வழங்கி விடுவோம். ஆனால் நாம் நமக்காக நேரத்தை ஒதுக்குவதே இல்லை. துக்கத்தையெல்லாம் கோர்த்துப் பார்க்கும் மனம் ஓடிக்கொண்டே இருக்கிறது. அது இல்லாத ஒரு saft உருவாகிக்கொண்டே இருக்கிறது.

இதைத்தான் pain saft துன்பத் தண்டு என்று சொல்கிறோம்.
தன்னையும் அறியாமல் துன்பத்தண்டிலிருந்து துக்கமமாக தொடர்ந்து எண்ணங்கள் வந்துகொண்டே இருக்கிறது. அதைத் தொடர்பு செய்து, தொடர்பு செய்து கடந்த காலத்தோடு ஒப்பிட்டுக்கொண்டே இருக்கும்.

நமக்குள்ளே பொங்குகின்ற வேதனை அளவிற்கு மீறி இருப்பதனால்தான், நாம் நமக்குள்ளே உட்கார்வதற்குப் பயப்படுகிறோம். வேறு யாருடனாவது உட்கார்ந்துகொண்டே இருப்போம்.
மற்றவர்களுடைய துணையை மேம்படுத்திக் கொண்டு இருப்போமே தவிர நம்மோடு இருக்கவே மாட்டோம். காரணம் கோர்த்துக் கொள்கின்ற மன அமைப்பு, இதிலிருந்து விடுபடுத்திக் கொள்வதுதான் நாம் செய்ய வேண்டிய முதல் காரியம்.

விடுபடுவதற்கான சில முக்கிய சத்தியங்கள்:

சத்தியம் 1 - இன்பத்தை நீட்டிக்கவும், துன்பத்தைக் குறைக்கவும் நீங்கள் செய்கின்ற முயற்சிகளின் தொகுப்புத்தான் மொத்த மனித வாழ்வு.

சத்தியம் 2 - இன்பத்தை நீட்டிக்கவோ, துன்பத்தைக் குறைக்கவோ யாராலும் முடியாது. எவ்வளவு முயன்றாலும் அது இன்னும் ஆழமான துக்கத்திற்கே இழுத்துச் செல்லும்.

சத்தியம் 3 - ஒவ்வொரு நொடியிலும் ஒன்று எதையோ ஒன்றை நீட்டிக்க முயற்சிக்கின்றீர்கள். இல்லை எதையோ குறைக்க முயற்சிக்கின்றீர்கள்.

நீட்டிக்கவோ, குறைக்கவோ செலவிடும் செயலை மட்டும் நிறுத்தினால் போதும். ஒவ்வொரு நொடியும் இதற்காகவே வீணாகும் சத்தியும், புத்தியும் மிச்சமாகிவிடும்.

இப்படி ஒவ்வொரு நொடியிலும் சக்தி பொங்க, புத்தி பொங்க வாழ்பவர் ஜீவன் முக்தர். துன்பத்தண்டு, இன்பத்தண்டு என்ற இரண்டு மயாங்களுக்குள்ளும் சிக்கித் தவிப்பவர் மனிதர்.

## "சும்மா சொல்லற!" - நேரடியாக மனதை அணுகுங்கள்.

சில நேரங்களில் தங்களுடைய வாழ்க்கையில் நடந்த இன்பமயமான சந்தோஷ மான நிமிடங்களை கோர்த்துக் கொண்டு ஒரு shaft-ஐ இன்பத்தண்டை உருவாக்கிக் கொள்வார்கள். மனதில். இன்பத் தண்டையோஈ துன்பத் தண்டையோ உருவாக்கிக் கொண்டே இருப்போம் ஆனால் நிஜ வாழ்வு இன்பமயமானதுமல்ல, துன்பமயமானதுமல்ல. அது ஆனந்தமயமானது.

நம் வாழ்க்கையில் நாம் எல்லோரும் செய்யும் இந்த முயற்சி தொடர் தோல்வியிலேயே முடிவடைகிறது.

தொடர்ந்து துக்கத்தை குறைக்கவும், நீட்டிக்கவும் செய்யும் முயற்சியிலிருந்து விடுபடாதவரை சுதந்திரமில்லை. இந்த இரண்டை சுற்றிச் சுற்றியே இயங்கும் வாழ்க்கைச் சூழலில் இருந்து விடுபடுவதுதான்.

அருணகிரிநாதர் மிக அழகாகச் சொல்கிறார்... 'சும்மா இரு' என்று சொல்கிறார்.
உங்களுக்குள்ளேயே உங்களால் சும்மா இருக்க முடிந்ததென்றால் அதுதான்



மொத்த ஆன்மீக வாழ்க்கையினுடைய சாரம்.

ஆனால் நமக்குள் நம்மால் உட்கார்வதே இல்லை.
சற்றுமுன் முயற்சித்துப் பார்த்தீர்கள். ஐந்தே ஐந்து நிமிடம்தான் உட்கார்ந்தீர்கள். என்னதான் நடக்கிறது? பார்க்கலாமே என்று. ஆனால் அவ்வளவு நேரம் இல்லாத இடுப்பு வலி அப்போதுதான் வந்திருக்கும். அவ்வளவு நேரம் இல்லாத கால்வலி அப்போதுதான் வரும். அவ்வளவு நேரம் இல்லாத அலைக்கழிகின்ற எண்ணங்கள் அப்போதுதான் வரும்.
இல்லாத எல்லா எண்ணங்களும் வரும். அமைதியாக இருப்பதைத் தவிர நம்முடைய மனம் ஓடி ஓடியே பழகிவிட்டது.

ஒரு சின்ன சோதனையை இப்போதே செய்யலாம்.
இந்த நுட்பத்தை பயிற்சி செய்து பாருங்கள். என்ன எண்ணம் வந்தாலும் கோர்த்துப் பார்க்காமல் இருங்கள்.
உதாரணத்திற்கு
'கண்ணை மூடிய உடனேயே முதலில் என்ன எண்ணம் வரும்?'
'போரடிக்குதப்பா! எவ்வளவு நேரம் சும்மா உட்கார்ந்திருப்பது?' என்று வரும்.
'பத்து வருடத்திற்கு முன்பு நீங்கள் போரடிக்கிறது என்று உணர்ந்த உணர்வு வேறு. எட்டு வருடத்திற்கு முன்பு உணர்ந்த உணர்வு வேறு. இப்பொழுது வந்திருக்கின்ற உணர்வு வேறு'.

ஆனால் இப்போது வந்திருக்கின்ற உணர்வு அப்போது வந்திருந்த உணர்வு மாதிரித்தான் என்று கோர்த்துப் பார்ப்பீர்கள். அதனால்தான் சலிப்பு வரும். போரடிக்கின்றது, என்ற உங்களின் சலிப்பு இந்த ஒரு நிகழ்வின் சலிப்பல்ல பத்துவருட சலிப்புக்களின் தொகுப்புதான் பெரிய சலிப்பாக சட்டென வந்து விடுகிறது.
உங்கள் கடந்த காலத்தைப் பற்றி நீங்கள் எப்படி சிந்திக்கிறீர்களோ, அந்த அறிவை மாற்றுங்கள். அவற்றிலிருந்து உங்களை விடுபடுத்திக் கொள்ளுங்கள். உங்கள் கடந்த காலத்தைப் பற்றி சிந்தனை அறிவு மாறினால மட்டும்தான், எதிர்காலம் மாற்றி அமைக்கப்படுவதற்கான வழி பிறக்கும்.
உங்களுடைய வாழ்க்கையைப் பார்த்தீர்களென்றால் ஒரு மிகப் பெரிய Pain shaft ஆகத்தான் மதிப்பிட்டு இருப்பீர்கள். இப்பொழுது உங்களுடைய மனது பார்த்ததைப் பார்த்திருக்கலாம். ஒரு ஐந்து நிமிடம் உட்கார்வதற்குள்ளே உடலில் எத்தனை ஆட்டம் ஆடுகின்றது என்று.

## தொடர்ந்து உள்ளே பாருங்கள் - எதிர்காலத்தை மாற்றியமைத்து விடலாம்

ஒரு மனிதனுக்கு மிகப் பெரிய இழப்பு என்னவென்றால், தனக்குள் ஒரு ஐந்து நிமிடம், அமைதியாக உட்கார முடியாமல் இருப்பதுதான். நீங்கள் உங்களுடைய வாழ்க்கையைப் பாருங்கள். நீங்கள் உங்களோட உட்காருவது என்கின்ற பழக்கமே இல்லாமல் போய்விட்டது.

ஏதாவது ஓய்வு வந்ததென்றால், உடனே வீட்டில் போய் படுக்கையில் சாய்கிறார்கள்.
படுக்கையில் விழுந்த உடனே, முதலில் செய்கின்ற வேலை என்னவென்றால் ரிமோட்டைத் தட்டுவது. அந்த ரிமோட்டைத் தேடி எடுத்துக்கொண்டுதான் படுக்கையிலேயே உட்காருகின்றோம்.
ஒரு வேளை கரண்ட் இல்லாமல் தொலைக்காட்சி பார்க்க முடியவில்லையென்றால் என்ன செய்வோம்? பழைய செய்தித்தாள்களை எடுத்து வைத்துக்கொண்டு, முதல் வரியிலிருந்து கடைசி வரிவரைக்கும் அதையே புரட்டிப் பார்த்துக் கொண்டிருப்போம். எடிட்டர்கூட அப்படிப் படித்து இருக்க மாட்டார்கள். அப்படிப் படிப்போம். கோர்த்துப் பார்ப்போம்.

கோர்த்துப் பார்ப்பதை விட்டுவிட்டு எந்த எண்ணம் வந்தாலும், கடந்த கால அனுபவத்தோடு கோர்த்துப் பார்க்காமல் அப்படிபே தளர்வாக பாருங்கள்.
'போரடிக்குதா!
சரி அடிக்கட்டும்.
வேறு என்ன செய்ய முடியும்?'
'இப்போது இப்படித்தான் இருக்கும்' என்று எண்ணம் வந்தாலும், கோர்த்துப் பார்க்காமல் முழுமையாக ஏற்றுக் கொள்ளும் தன்மையோடு இருங்கள். என்ன நடந்தாலும் சரி நன்கு ஆழமாகப் புரிந்து கொள்ளுங்கள். இப்பொழுது உங்களுக்குள்ளே வலி இருந்தாலும், வேறு ஏதாவது துக்கம் இருந்தாலும். என்ன இருந்தாலும் சரி உங்களுடைய உடல்ரீதியான, மனரீதியானப் பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் சரி.
உதாரணத்திற்கு...
முட்டி வலி என்றால், இப்போது 'வலி இருக்கும் இடத்தில் என்ன நடக்கின்றது?' என்று ஆழ்ந்து பாருங்கள். நேற்று இருந்த முட்டிவலி வேறு, நேற்று முன் தினம் இருந்த முட்டி வலி வேறு. இதெல்லாம் தனித்தனியான அனுபவங்கள். அதைக் கோர்த்துப் பார்த்து இப்பொழுது இருக்கின்ற முட்டிவலிதான் அது என்று நினைக்காதீர்கள்.

இப்போது முட்டியில் என்ன நடக்கின்றது? என்று பாருங்கள்.
ஒரு சின்னக் குழந்தைக்கு ஒரு ரோஜாப்பூ கிடைத்தால் எப்படிப் பார்க்கும். புதிதாக மலர்ந்து பார்க்கும். அதுபோல் புதுமையோடு பாருங்கள். வலி இருக்கின்ற இடத்தைப் பாருங்கள். உடல் வலியாக இருந்தாலும், மனவலியாக இருந்தாலும் புதிதாகப் பாருங்கள்.

அந்த எண்ணத்தைக் கோர்த்துப் பார்ாக்காமல் என்ன நடக்கின்றது என்று உற்றுப் பாருங்கள்.
ஒரு சின்ன நுட்பம். இது ஒரு அருமையான நுட்பம்.
இப்பொழுதே, உட்கார்ந்து பாருங்கள். மனதிற்குள்ளே எந்த எண்ணம் வந்தாலும், வார்யோ, வேதனையோ, துக்கமோ, சந்தோஷமோ, சாந்தமோ என்ன வந்தாலும், என்னதான் நடக்கின்றது என்று அமைதியாகப் பாருங்கள்.

கண்களை மூடி நிமிர்ந்து அமருங்கள்.
எவ்வளவு நேரம் முடிகின்தோ, அவ்வளவு நேரம் முயன்று பாருங்கள்.....
இந்தச் சிறிய செயலைத் தொடர்ந்து செய்வதினாலேயே, அந்த அசுர மனதை எளிதில் மாய்த்து விடலாம். ஜீவன் முத்தியைத் தொட்டு விடலாம். எண்ணங்களைக் கோர்த்துப் பார்க்காமல் வாழ்வதுதான் ஜீவன் முக்த நிலை.

*(தொடரும்...)*

**நித்தியானந்த பரமசிவம் மகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய அமுத மொழிகள். மேலதிக தொடர்புகளுக்கு: (416) 880-8585**

மலேசிய மடல்

# பாட்டாளிக்காக தாளும் கோலும் ஏந்திய பாட்டாளி



நக்கீரன்

கோலாலம்பூர், அக். 07:

ஏர் முனை கொண்டு நிலத்தைப் பண்படுத்தும் வேளாண் குடும்பத்தில் பிறந்து கோல் முனை கொண்டு மக்களின் மனதைப் பண்படுத்த புறப்பட்டார் ஓர் இளங்கவிமகன் வானத்தை நோக்கி.., வானத்தே உலாவரும் கோள்களையும் உற்றுநோக்கி வளமார்ந்த கற்பனையில் ஆழ்ந்திட்ட கவிமக்களின் நடுவே நிலத்தைப் பார்த்து நிலத்தே உலாவந்த மக்களை ஆழ்ந்து நோக்கி அவர்களிடையே காணப்பட்ட ஏற்றத்தாழ்வை மாற்ற முனைந்து தாளையும் கோலையும் ஏந்திய "மக்கள் கவி"யாம் பட்டுக்கோட்டையார்தான் அந்த இளங்கவி.

அதற்கு முன்னம், தன் வாழ்க்கை நாடகத்தில் மேடை நடிகர், நாட்டியக்காரர், மீன்-நண்டு பிடிக்கும் தொழி-லாளி, தென்னங்கீற்று வியாபாரி, மாட்டுத் தரகர் என்றெல்லாம் ஏறக்குறைய 16 வேடங்களை ஏற்றவர் இவர்.




1959-ஆம் ஆண்டு தொடக்கத்தில் வெளிவந்த தங்கப் பதுமை என்னும் படத்திற்காக, அப்படத்தின் கதையை ஒட்டி

மனிதன் ஆரம்பமாவது
பெண்ணுக்குள்ளே
அவன் ஆடி அடங்குவது மண்ணுக்குள்ளே

என்று தொடங்கும் பாடலை எழுதினார் பட்டுக்கோட்டையார். ஆனால், அதே ஆண்டு இதே நாளில் (அக்டோபர்-08) இவரும் 30 வயதிற்குள் அவசர அவசரமாக மண்ணுக்குள் அடங்கியது தமிழுலகம் எதிர்கொண்ட பெருந்துயரம்.

ஆம், அவருக்கு இன்று 62-ஆவது நினைவு நாள்.

ஒரு காலத்தில் நெற்களஞ்சியமாக விளங்கிய தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை பட்டணத்துக்கு அருகில் உள்ள, சங்கம் படைத்தான் காடு என்ற சிற்றூரில் அருணாச்சலனார்- விசாலாட்சி தம்பதியருக்கு 1930-ஆம் ஆண்டில் இளைய மகனாகப் பிறந்தார் கலியாணசுந்தரனார்.

19 வயதிலேயே கவி புனையும் ஆற்றல் பெற்ற இவர், பட்டாளிப் பெருமக்கள் பட்ட பாட்டையே திரைப்படங்களில் பாட்டாக்கினார். இளம் பருவத்திலேயே வறுமையையும் பசியையும் அனுபவித்த பட்டுக்கோட்டையார், முதலாளித்துவத்தை தொலைவில் இருந்தே அவதானித்தார்.

சமூக ஆர்வத்துடன் கலை நாட்டமும் இருந்ததால் கிராமத்தை விட்டு புறப்பட்ட இவர், சக்தி நாடக சபா என்னும் நாடக நிறுவனத்தில் இணைந்து, பின்னாளில் திரைத்துறை மூலம் புகழ்பெற்ற சிவாஜி கணேசன், எம்.என். நம்பியார், எஸ்.வி.சுப்பையா, ஓ.ஏ.கே. தேவர் போன்றோரின் அறிமுகத்தையும் நட்பையும் பெற்றார். குறிப்பாக, ஓ.ஏ.கே. தேவருடன் நெருங்கிப் பழகி உள்ளத்தைப் பகிர்ந்து கொண்ட இவர், பலமுறை தேவருடன் உணவையும் பகிர்ந்து கொண்டுள்ளார்.

திரைப்படத் துறை மெல்ல வளர ஆரம்பித்த நேரத்தில் நாடகத் துறை சன்னஞ்சன்னமாக நசியத் தொடங்கியது. சக்தி நாடக சபாவின் நாடகங்கள் ஒவ்வொன்றாக திரைப்படமானபொழுது அதன் நடிகர்களும் ஒவ்வொருவராக திரைத்துறையில் நுழைய ஆரம்பித்தனர். ஆனால் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமோ நடிப்பைத் தொடராமல் கவிபுனையும் ஆர்வத்துடன் "புரட்சிக்கவி" பாவேந்தரிடம் உதவியாளராகச் சேர்ந்தார்.

பள்ளிப்படிப்பு இல்லாமல் திண்ணைக் கல்வியை மட்டும் ஈராண்டுகளுக்கு பெற்றிருந்த இவர், 1952 இல் புதுவைக்கு பயணமானது இப்படித்தான். தொடர்ந்து பாவேந்தர் நடத்திய குயில் இதழில் உதவியாளராகப் பணியாற்றினார். அந்த வாய்ப்பைப் போற்றும் விதமாக பட்டுக்கோட்டையார் தன் மனைவிக்குக் கடிதம் எழுதும்பொழுதெல்லாம் தனக்குத் தமிழ் கற்பித்த குரு பாரதிதாசன் வாழ்க என்று எழுதிவிட்டுத்தான் தொடருவாராம்.

கவிஞராக உருமாறிய பட்டுக்கோட்டையார், பாட்டுக்கோட்டையாராக விரும்பி, திரைப்படப் பாடல் வாய்ப்புக்காக திரைப்பட அதிபர்களையும், இசையமைப்பாளர்களையும் அடிக்கடி சந்திக்க வேண்டியிருந்தது.

அப்போது, மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்த பாசவலை என்ற திரைப்படத்தில் பாடல் எழுத, இவருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது. மெல்லிசை மன்னர்களான விசுவநாதனும் இராமமூர்த்தியும்தான் இந்தப் படத்திற்கு இசையமைப்பாளர்கள்.

பாடல் எழுதுவதற்காக வந்திருந்திருக்கிறாராம் ஒருத்தர் என்ற தகவ-லை அறிந்து வெளியில் வந்து எட்டிப்பார்த்த விசுவநாதன், ஒல்லியான உருவத்துடனும் மெல்லிய புன்னகையுடனும் காணப்பட்ட கலியாணசுந்தரனாரைப் பார்த்துவிட்டு இராமமூர்த்தியிடம் சென்று,



"இவனுக்கு சரியாக பாட்டெழுத வருமா? டியூனுக்கு ஏற்றபடி பல்லவி போடத் தெரியுமா? இந்த இளைஞரிடம் பாட்டுக்கான சரணம் சரணடையுமா என்பதெல்லாம் தெர்ரியவில்லை என்ரு ஐயம் எழுப்பி நையாண்டி புரிந்திருக்கிறார். அதன்பின் தயக்கத்துடனும் அரை மனதுடனும் பட்டுக்கோட்டையை அணுகியிருக்கிறார் மெல்லிசை மன்னர்.

கதையைக் கேட்டுவிட்டு, கதைக்கேற்ற பாட்டுடன் வந்திருந்த பட்டுக்கோட்டை கலியாணசுந்தரத்தின் கையில் இருந்த தாளை வாங்கிப் பார்த்த விசுவநாதன், அந்தப் பாடலுக்குரிய பல்லவியைக் கண்டு, சற்று அதிர்ந்து, மீண்டும் பட்டுக்கோட்டையாரை உற்றுநோக்கிவிட்டு, முதலில் கேட்டக் கேள்வி, உங்க வயது என்ன தம்பி? என்பதுதானாம்.

அத்தகைய பல்லவி இதுதான்.

"குட்டி ஆடு தப்பி வந்தால் குள்ளநரிக்கு சொந்தம்
குள்ளநரி மாட்டிக்கிட்டா குறவனுக்கு சொந்தம்
தட்டுப்பட்ட மனிதர் கண்ணில் பட்டதெல்லாம் சொந்தம்
சட்டப்படி பாக்கப்போனா எட்டடி தான் சொந்தம்".

1956-இல் வெளிவந்த பாசவலை என்னும் திரைப்படத்தில் இடம்பெற்ற "உனக்கெது சொந்தம் எனக்கெது சொந்தம்" என்று தொடங்கும் பாடலுக்கான பல்லவிதான் இது. ஐந்து பாடல்களை அந்தப் படத்திற்காக இயற்றினார் கவிஞர்.

பாடல் பரவலாக மக்கள் மனதில் இடம்பெற்ற நிலையில், ஏறக்குறைய 60 வயதை எட்டிய யாரோ ஒரு கவிஞர்தான் இந்தப் பாடலை இயற்றி இருக்க முடியும் என்று பலரும் கருத்து தெரிவித்த நிலையில், 26 வயதே ஆன பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் என்னும் இளங்கவிஞர்தான் இந்தப் பாட்டை எழுதியிருக்கிறார் என்பதை அறிந்த அனைவரும் வியந்தனராம்.

"உழைக்காமல் உண்ண எத்தனிப்பது ஏய்த்துப் பிழைப்பதற்கு சமம். உழைக்க வேண்டும். அதுவும் கூட்டாக உழைக்க வேண்டும். விளையும் நன்மையை எல்லோரும் பகிர்ந்து கொள்ள வேண்டும்" என்னும் பொதுவு-டைமை (கம்யூனிச)க் கொள்கையைக் கொண்ட பட்டுக்கோட்டையார். இந்த சிந்தனையை சிந்தாமல் சிதறாமல் 1958இல் வெளிவந்த அரசிளங்குமரி என்ற திரைப்படத்திற்காக எழுதிய பாடலில்..

ஏற்றமுன்னா ஏற்றம்
இதிலேயிருக்குது முன்னேற்றம்
எல்லோரும் பாடுபட்டா - இது
இன்பம் விளையும் தோட்டம்...

என்ற வரிகளை பாங்குற அமைத்தார். 29 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்த இந்த பாமகன், தமது 28-ஆவது வயதில் இயற்றிய முத்தான வரிகள்தான் இவை.

இவருடைய பாடல்கள் பாரம்பரிய கிராமியப் பண் முறையைத் தழு-வியவை. பாடல்களில் உருவத்தைக் காட்டாமல் உணர்ச்சிகளைக் கொட்டித் தீர்த்தார். குறையை சுட்டிக் காட்டிய அதேவேளை, அதற்கான தீர்வையும் தக்க முறையில் சுட்டிக்காட்டிய தீர்க்கதரிசியாக விளங்கினார் பட்டுக்கோட்டையார்.

அதேவேளை சமுதாயத்தின் அனைத்து மட்டத்திலும் நிலவிய நிறை-றவான தன்மையையும் சுட்டிக் காட்டத் தவறவில்லை. திரையுலகில் பாட்டாளி மக்களின் ஆசை, ஆவேசம் இரண்டையும் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்திய பட்டுக்கோட்டை கலியாண சுந்தரனார், 1955ஆம் ஆண்டு படித்த பெண் திரைப்படத்திற்காக முதல் பாடலை இயற்றியதன்வழி அந்தத் துறையில் அழுத்தமான முத்திரையைப் பதித்தார்.

திரைப்பட உலகிற்காக 180 பாடல்களைத்தான் இவர் எழுதினார் என்றாலும் அவற்றில் பெரும்பாலானவை காலத்தால் அழியாதவை. சமூக வி-தியில் இன்னமும் தாக்கத்தை ஏற்படுத்த வல்லன அவை. இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும் இந்நிலை தொடரும்.

திராவிட இயக்கத்திலும், பொதுவுடைமைக் கொள்கையிலும் ஈடுபாடு கொண்டிருந்த கலியாணசுந்தரனார், எளிய வாழ்வின் சின்னமான தோழர் ப.ஜீவானந்தத்துடன் நட்பு கொண்டிருந்தார். சென்னையில் ஒருமுறை அவருடன் பயணம் மேற்கொண்டிருந்த பொழுது சாலையில் குழி தோண்டப்பட்டு, அங்கு சீரமைப்புப் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதன் அடையா-ளமாகவும் பயணிகளை எச்சரிக்கும் விதமாகவும் அங்கு சிவப்பு கொடி பறக்கவிடப்பட்டதாம்.

இருவருமே பொதுவுடைமை சிந்தனையாளர்கள். இதைப் பார்த்த பட்டுக்கோட்டையார், ஜீவாவி-டம் சமுதாயத்தில் நி-லவும் ஏற்றத்தாழ்வை சுட்டிக்காட்டத்தான் பொதுவுடைமைக் கட்சியினர் சிவப்புக் கொ-டியைப் பறக்க விடுகின்றனர் என்றால், சாலையில் இருக்கும் மேடு பள்ளத்தைக் காட்டவும் சிவப்புக் கொடியைப் பறக்க விடுகின்றனர். மொத்தத்தில் எங்கெல்லாம் ஏற்றத்தாழ்வு நிலவுகிறதோ அங்கெல்லாம் சிவப்பு கொடி பறக்கும் போலும் என்று சொன்னதும் ஜீவானந்தம் இரசித்துச் சிரித்தாராம்.



பதிபக்தி என்னும் திரைப்படத்தில் இடம்பெற்ற

"அம்பிகையே முத்துமாரியம்மா - உன்னை
நம்பி வந்தோம் ஒருகாரியமா"

என்று தொடங்கும் அம்மன் பாடலில்கூட

"இன்பம் என்று சொல்லக் கேட்டதுண்டு - அது
எங்க வீட்டுப்பக்கம் வந்ததுண்டா"

என்று கேட்டு பொதுவுடைமை சிந்தனையைப் புகுத்தி இருக்கிறார்.

1959ஆம் ஆண்டு கோயம்புத்தூர் தொழிலாளர் சங்கம் அவருக்கு "மக்கள் கவிஞர்" என்று அளித்த பட்டம் மிகப் பொருத்தமாய் நிலைத்து விட்டது.

வாழ்க பட்டுக்கோட்டையார் புகழ்!

நக்கீரன் - Nakkeeran 013-244 36 24


Home Renovations
Coverall Group Inc.
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
Contact: Siva
416-706-8160



Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்
Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்
1.0% முதல் 1.5% வரை
அதிரடி சிறப்பு வட்டி வீதம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்
நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் -
உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களிள் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்
அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!
105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861

# மாதகல் மைந்தன் புகழ் வாழ்க!

தமிழீழம் - மாதகல் மண் பிறந்த கல்வியாளர் - ஆசிரியர் திரு. அருள் சுப்பிரமணியம் அவர்கள் 90களின் பிற்பகுதியில் மொன்றியல் நகரில் வாழ்ந்த போது “தமிழர் ஒளி“ நிறுவனம், “ஈழத்தமிழர் ஒன்றியம்“ “கியுபெக் சைவ மகாசபை“ ஆகிய அமைப்புகளின் வளர்ச்சிக்காகப் பெரும் தொண்டு ஆற்றியவர். மொன்றியல் அருள்மிகு திருமுருகன் கோயில் நிர்வாக சபையில் உறுப்பினராகவும்,, கலாச்சார செயலாளராகப் பணியாற்றிய வேளையில் இளைய தலைமுறை மாணவர்களிடையே தமிழ் மொழியையும் சைவ சமய நெறிகளையும் வளர்த்தெடுக்கப் பெரும் பங்கு வகித்தவர்.

அன்னாரின் மறைவு குறித்து கியூபப் சைவ மகா சபையினரால் வெளியிடப்பட்ட “புகழாஞ்சலி“

-----------



*மாதகல் மைந்தன் புகழ் வாழ்க!*

*மாதகல் மைந்தன் மாதவச் செல்வன்*
*ஆதவன் உதயம் போல் அழகுச் சிரிப்புடையான்,*
*வேதியன் போல் சைவநெறி போற்றிடுவான்,*
*ஆதிமொழி தமிழிடத்து தாயன்பு பற்றுடையான்*
*ஓதி உணர்ந்தவற்றை ஒளியாமல் சொல்லிடுவான்*
*காதல் வரும்போது கவிதைகள் எழுதிடுவான்,*
*சாதல் வருமென்றால் சமரிலே வரட்டுமெனத்,*
*தாய்மண்ணை மீட்பதற்குத் தமிழாலே போர் தொடுப்பான்*
*வாதில் தோன்றுங்கால் வளர்தமிழால் வென்றிடுவான்,*
*மாதொரு பாகனை மனதிலேயே கோயில் செய்து*
*வேதம் நான்கிலும் மெய் பொருளாவது*
*நாதன் நாமம் நமச்சிவாயவே! என்றே தான்,*
*நாதியற்ற தமிழர்க்கு நல்லருள் புரிய வந்த,*
*ஜோதி வடிவானவனாம் சுந்தரமுகமுடையான்*
*மந்திர ஒலி முழங்க மயில் மீது வலம் வந்த*
*மொன்றியல் குன்றத்து மாவீரன் முருகனிடம்*
*சென்றடைந்த அடியார்கள் தொண்டர்களுள்,*
*அன்றாடம் திருத் தொண்டு பலசெய்து*
*காரியங்கள் ஆற்றிக் கலாச்சார செயலாளர்*
*ஆகியவன் செந்தமிழ் கற்க வைத்தும்,*
*சந்தம் மிகு பாட்டுக்களால் பண்ணிசை இசைக்க வைத்தும்,*
*பாரதி போல் பாட்டிசைத்து பாடி விளையாடு பாப்பா*
*நீ ஓடி விளையாடு பாப்பா வென்றும்,*
*கூடி வருகின்ற சிறுவர் சிறுமியருக்கு*
*சொந்தமுள்ள தேனிசைத் தமிழ் மொழியை*
*காதுகளில் பாய்ச்சிய சிறுவர் இலக்கியப் புலவர்*
*மாதகல் மாண்புகளைப் பதிவு செய்த பாவலர்*
*அருள் சுப்பிரமணியம் அவர்கள் புகழ் வாழ்க!*

பக்தியுடன் மொன்றியல் அருள்மிகு திருமுருகன் தொண்டர்கள்.
கியூபெக் சைவ மகாசபை - அறங்காவல் குழுவினர். அமரர்க்கு அஞ்சலி பூக்களை காணிக்கையாக்குகிறோம்.

**ஆக்கம் - வீணை மைந்தன்**

## *(34ம் பக்கத் தொடர்ச்சி)* பொன்னியின் செல்வன்

பாத்திபேந்திரன் ‘நீ ஏன் இங்கே வந்தாய்?’ என்றான். வந்தியத்தேவன், ‘அழகிய இலங்கையை பார்க்க வைஷ்ணவரோடு புறப்பட்டேன்’ என்றான். ‘இந்த ஆள் யார்? நானும் எங்கேயோ பார்திருக்கிறேன்’ என்று பாத்திபேந்திரன் கூற, ‘ஆம் ஐயா நான் இளவரசர் ஆதித்தரிடம் வந்து, என் சகோதரியைப் பற்றி விசாரித்தேன்’ என்றான் ஆழ்வார்க்கடியான். ‘யார் உன் சகோதரி அந்த பழுவூர் ராணி நந்தினியா? அவளால் சோழ தேசத்திற்கு நடந்த தீங்குகளுக்கெல்லாம் உன்னை ஒரு நாள் கழுவில் ஏற்றிக் கொல்ல வேண்டும். சரி இளவரசர் அருள்மொழிவர்மனைப் பார்த்தீர்களா?’ என்றான் பாத்திபேந்திரன். அதற்கு, ‘இல்லை நாங்கள் காட்டு வழியில் வந்தோம்’ என்று பதில் கொடுத்ததுடன், பாத்திபேந்திரனுடன் நின்ற ஆட்களை நோக்கினான் ஆழ்வார்ககடியான். பின்பு பாத்திபேந்திரன் புறப்பட்டான்.

அப்போது ஆழ்வார்க்கடியான் வந்தியத்தேவனிடம், ‘இவனுடன் போகும் ஆட்கள் யார் தெரியுமா? இவர்கள் எப்படி இவனுடன் சேர்ந்து கொண்டாரகள்? பெரிய சபதம் செய்திருக்கிறார்கள். அது என்ன தெரியுமா? சோழ குலத்தை பூண்டோடு இந்த உலகத்தில் இல்லாமல் அழித்து விடுவதாக! இவர்களை நான் திருப்புறம்பயம் பள்ளிப் படையில் நள்ளிரவில் பார்த்தேன். இவர்கள் எபபடித் தான் இங்கு வந்து சேர்ந்தார்கள்?’ என்று கூறுகையில் வந்தியத்தேவனுக்கு பூங்குழலி சொன்னது ஞாபகம் வந்தது. இரண்டு பேரை என் தமையன் இலங்கைக்கு படகில் எற்றிச் சென்றான் என்று சொன்னாள் அல்லவா? இவ்வாறு பேசிக் கொண்டு இருவரும் தம்புள்ளையை அடைந்தனர். அந்த வழியில் ஏதோ சனக்கூட்டம். அங்கு ஒரு யானையில் சீன வியாபாரிகள் இருவர் பயணம் செய்தனர். இவர்கள் சிம்மகிரியில் இருந்து திரும்பிக் கொண்டிருந்தார்கள். கடல் கடந்து வந்துள்ளார்கள். ‘நீ யானைப் பாகனைப் பார்த்தாயா?’ எனக் கேட்டார் ஆழ்வார்க்கடியான். ‘பார்த்தேன் ஆனால் சீன யாத்திரிகள் விசித்திரமான உடை அணிந்திருந்தார்கள்! அதனால் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன்’ என்றான் வந்தியத்தேவன். ‘யானைப் பாகன் யார் என்றாவது தெரிகிறதா?’ என ஆழ்வார்க்கடியார் கேட்க, ‘இல்லவே இல்லை’ என்றான் வந்தியத்தேவன். ‘உன்னிடம் ஏன் இந்த முக்கிய பொறுப்பை ஒப்படைத்தாள் இந்த குந்தவை தேவியார்? யானைப் பாகன்தான் இளவரசர்’ என்று ஆழ்வார்க்கடியார் விளக்க வந்தியத்தேவன், ‘யானைப் பாகன் எப்படி இளவரசராக இருப்பான்! எதிரிகளின் எல்லைகளிற்கு தனியே சென்று வருகிறான். இந்த விளையாட்டுப் புத்தியுள்ளவரா மன்னராகப் போகிறார்? இந்த குடந்தைச் சோதிடர் சொன்ன சாத்திரம் பொய்’ என்று வந்தியத்தேவன் ஆழ்வாக்கடியானை நோக்கிச் சொன்னான். அப்போது ஒருவன் அங்கு இரு குதிரைகளுடன் வந்தான். ஆழ்வாக்கடியானுடன் பேசினான். பின்பு ஒரு குதிரையை அவனுக்குக் கொடுத்தான். பின்னர் ‘இங்கு இரு குதிரைகள் வரும். அதை நாம் தொடர்ந்து செல்ல வேண்டும்’ என்றான். அப்போது வந்ததியத்தேவனிற்கு கோபம் வந்தது. ‘எனக்கு குதிரை இல்லை இவனை இளவரசரிடம் அழைத்துப் போகிறார்கள்’ என்று கோபித்தான். அதற்கு ஆழ்வார்க்கடியான், ‘நீ பொறுமையாக இரு நான் இளவரசரிடம் சென்று செய்தி சொல்கிறேன்’ என்றான். அப்பொழுது குதிரைகள் நெருங்கி வந்து கடந்து சென்றன. ஆயத்தமாக நின்ற குதிரைகளும், அந்தக் குதிரையை தொடர எத்தனித்த வேளை, வந்தியத்தேவன் குதிரையில் இருந்த அந்த மனிதனின் காலை இழுத்து அவனை எத்து எத்தியபின் அந்தக் குதிரையில் ஏறிக்கொண்டு ஆழ்வார்க்கடியனைத் தொடர்ந்தான். அந்த நேரம் ஒரு கத்தி வந்தியத்தேவனை நோக்கி எறியப்பட்டது. அவன் குனிந்து அதிலிருந்து தப்பிக் கொண்டான். இருந்தும் மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தது. அத்துடன் கொடிய காட்டுக்குள் பயணம் செய்யவும் பயமாக இருந்தது. ‘இந்த அந்நிய நாட்டில் நான் நன்றாக மாட்டிக் கொண்டு விட்டேன்’ என்று எண்ணுகையில், முன்னால் போன குதிரைகள் சற்று நிற்க, ஒருவனுடைய குதிரை திடீர் என்று வந்தியத்தேவனின் அருகில் வந்தது. அதிலிருந்தவன் ஓங்கி ஒரு குத்து விட்டதால் வந்தியத்தேவன் தரையில் விழுந்தான். அந்த வீரன் சடார் என்று அவன் மேல் பாய்ந்தான். ஆத்திரம் கொண்ட வந்தியத்தேவன், குதித்து எழுந்து தன்னைத் தாக்கியவனிற்கு ஒரு குத்து விட்டான். இரு மலைகள் மோதுவது போல் இருவரும் மோதிக் கொண்டார்கள். பல வீரர்கள் தொடர்ந்து வந்து யுத்தத்தை சுற்றி நின்று பார்த்தார்கள். பெரிய கூட்டம் கூடிவிட்டது. வந்தியத்தேவனை கீழே தள்ளிவிட்டு அவனிடமிருந்த ஓலைச் சுருளை எடுத்துப் படித்தான் அந்த வீரன். ‘வைஷ்ணவரே நீ எனக்கு சினேகத் துரோகம் செய்யலாமா? அந்த ஓலைகளை பிடுங்கு’ என்றான் வந்தியத்தேவன். அதற்கு ஆழ்வார்க்கடியான், ‘என்னால் முடியாத காரியம்’ என்று கூறியபடி, அவன் அருகில் வந்து, ‘நீ ஓலையை யாரிடம் கொடுக்க வேண்டுமோ அங்கே தான் ஓலை சென்றுள்ளது’ என்றான். வந்தியத்தேவன் ஆச்சரியத்துடன் எழுந்து உட்கார்ந்து, ‘ஆகா இவர்தானா பொன்னியின் செல்வர் அருள்மொழிவர்மர்! இவர் கைகளுக்கு எத்தனை வலிமை! எத்தனை வேகம்! அழகும் கம்பீரமும் எத்ததை எத்தனை! என் உடல் வலியும் தீர்ந்துவிட்டதே! இளவரசர் அருகில் வந்து, வருக! வருக! அழகிய இலங்கைத் தீவிற்கு வருக!’ என்று புன்னகை பூத்தார். ‘என் தமக்கை இதை தன் கைகளால் எழுதி உம்மிடம் நேரில் கொடுத்தாரா?’ என்று கேட்டார். ‘ஆம் அரசே! அவரிடம் பெற்றது எங்கும் நிற்காமல், இரவு பகல் பாராது பயணம் செய்து வந்தேன்’ என்றான் வந்தியத்தேவன். இளவரசர் அவனைக் கட்டி அணைத்துக் கொண்டார். வந்தியத்தேவன் ஆனந்த வெள்ளத்தில் நீராடி எழுந்தான். அங்குள்ள வீரர்கள், இளவரசர், வந்தியத்தேவன், ஆழ்வார்க்கடியான் என்று எல்லோரும் ஒன்று கூடி மகிழ்ந்தனர். இளவரசரை மகிழ்விக்க கூத்தும் நடைபெற்றது. ஆழ்வார்க்கடியான், ‘இளவரசே தர்க்க நேரத்தில் தாங்கள் அங்கு வந்ததால் உங்களை நான் கண்டு கொண்டேன். உங்கள் தமையனாரின் பெயரில் பாத்திபேந்திரன் இங்கு வந்துள்ளான் உங்களை காஞ்சி அழைத்துப் போவதற்காகவே. நானும் உங்களுக்கு அநிருத்தரிடமிருந்து செய்தி கொண்டு வந்துள்ளேன்! அதாவது நீங்கள் இலங்கையிலேயே இன்னும் சிறு காலம் தங்கியிருக்குமாறு வேண்டுகிறார்’ என்றார் ஆழ்வார்க்கடியான். ‘இது என்ன மூன்று மூத்தவர்களும் மூன்று விதமாகச் சொன்னால் நான் என் செய்வேன்’ என்று தயக்கம் கொண்டார் இளவரசர். வந்தியத்தேவன், ‘நீங்கள் என்ன முடிவு எடுப்பீர்களோ தெரியவில்லை. ஆனால் தங்களை எப்படியாவது பழையாறை அழைத்து வருமாறு குந்தவை தேவியார் என்னைப் பணித்துள்ளார். அதை நான் கேட்டே தீர வேண்டும்’ என்றான். உடனே ‘எனக்கு ஒரு வீரத்தோழன் வேண்டுமென்று நினைத்தேன் என்ன தவம் செய்தேன்’ என்று மகிழ்ந்தார் இளவரசர்.

*(தொடரும்...)*

---

Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை**
**மாதினி நிமலன்**

# இயற்கைத் திங்களின் நினைவு கூரலும் நன்றிநவிலலும்

பிறந்தவர் இறப்பது இயற்கையே
இயல்பான உங்கள் இழப்பை
எங்களால் ஏற்க முடியவில்லையே
அன்பான உங்கள் முகத்தை
ஆண்டவன் தன்னோடு எடுத்துவிட
நாம் இங்கு துடியாய்த் துடிக்கின்றோம்
என்றும் உங்கள் நினைவுகள்
எங்களோடு நிலைத்திருக்கும்...

பிரபஞ்சத்திலிருந்து: 28 - 12 - 1948



பிரபஞ்சத்த்திற்குள்: 18 - 09 - 2021

அன்னார் இயற்கையும் இயல்புமாய் பிரபஞ்சத்திற்குள் சென்றமை பற்றிய தகவல்களை ஒலிபரப்பிய வானொலிகளுக்கும், பிரசுரம் செய்த பத்திரிகைகளுக்கும், பல வழிகளிலும் பங்குபற்றி எமக்கு ஆறுதல் கூறியும், மலர்வளையங்கள், மலர்ச்செண்டுகள் செய்திகள் அனுப்பியும் மாலைகள் அணிவித்தும், அவரைக் கௌரவித்த நல்லுள்ளங்கள் அனைவருக்கும் எமது மனம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அமரர் குருபாதம் அவர்கள் கூறியது போல
"வாழ்க்கை ஒரு கொண்டாட்டம், எல்லாம் அழகே"

## Hon. Dr. குருபாதம் செல்வதுரை

Multipotentialite, Paralegal, எழுத்தாளர், ஆய்வாளர், யாழ் ஈழநாடு பத்திரிகையின் உதவி ஆசிரியர், நூலகர்

தகவல்: குடும்பத்தினர்
<u>தொடர்புகளுக்கு:</u>
ஜெயா (மனைவி): (416) 398-7241
செல்வசோதி செல்வதுரை (சகோதரன்): (647) 297-8385
குணே பரம்சோதி (மைத்துனர்): (519) 748-9978
பிறேம் பரம்சோதி (மைத்துனர்): (416) 724-1632

# கண்ணீர்க் காணிக்கை

மண்ணில் 1944 - 02 - 17



விண்ணில் 2021 - 10 - 09

## அமரர் திரு சபாரட்ணம் அருள்சுப்பிரமணியம்

முன்னாள் மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய அதிபர்,
கொத்தணிப்பபாடசாலை அதிபர், கனடா தமிழ்ப்பூங்காப் பாடசாலை நிறுவுநர், ஆலோசகர், இன்றைய
தொல்காப்பிய மன்றத் தலைவர்

திரு. சபாரட்ணம் அருள்சுப்பிரமணியம் அவர்கள் கனடாவில் 09.10.2021 அன்று காலமானார். அன்னார் யோகசக்தி(யோகா)யின் அன்புக்கணவரும் அசோக், அருண், பாபுஜி ஆகியோரின் பாசமிகு தந்தையும் அகல்யா, பெயித் அருணா, நிவேதிதா ஆகியோரின் பரிவுமிக்க மாமனாரும் கோப் இசை, அரன், மைக்கா கீதன், ஆரதி, அமாயா நிலா, சோயி சகானா, மிக்கேலா நீரா, கேடன் நவீன் ஆகியோரின் நேசம் மிக்க பேரனுமாவார்.

அன்னார் மாதகலைச் சேர்ந்த திரு.திருமதி தங்கம் சபாரட்ணம் அவர்களின் பேரன்பு மிக்க மூத்த புதல்வனும், தனராஜின் இன்னுயிர் அண்ணாவும், காலம் சென்ற பொன்னாலையைச் சேர்ந்த வாமதேவா மங்கையர்க்கரசியின் வாஞ்சைமிக்க மருமகனும் ஆவார்.

அவர் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம் !
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தொடர்புகட்கு –
யோகா 647-706-6123
மகன் அசோக் 416-999-7193
மகன் அருண் 647-281-0306
மகன் பாபுஜி 416-931-5570

# In Loving Memory

1944 - 02 - 17



2021 - 10 - 9

## Mr. Sabaratnam Arulsubramaniam

Former principal of Mathagal Saint Joseph Mahavithyalayam, Former
Cluster Deputy Principal, Founder and advisor of Thamilpoonka school in Canada, current President of
Tholkaapiya Manram of Canada.

Mr. Sabaratnam Arulsubramaniam passed away peacefully in Markham, Canada on October 9, 2021. Loving husband of Yogasakthy (Yoga). Affectionate father of sons Asok, Arun and Babujie. Beloved Father-in-law of Akalya, Faith and Nivethitha. Adored grandfather of Hope, Aran, Micah, Aarathi, Amaya, Zoe, Mikayla and Kayden.

Mathagal's late Mr. and Mrs. Sabaratnam and Thangam's Precious eldest son, dearest Brother of Thanaraj, and son-in-law of late Mr. and Mrs. Vamadeva and Mangayakarasi from Ponnaalai.

He will be greatly missed and will forever be in our hearts.

May his soul rest forever in peace!
**Aum Shanthi! Aum Shanthi!! Aum Shanthi!!!**

**Contacts**
Yoga 647-706-6123
Son Asok 416-999-7193
Son Arun 647-281-0306
Son Babu 416-931-5570

**Place:** Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue Markham, ON
**Times:** Viewing on Saturday from 6pm - 9pm EST
Viewing on Sunday from 7am - 9:30am EST followed by the cremation ceremony
**Livestream:** http://livestream.com/siyanetexpress/events/9891049

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தின வாழ்த்துக்கள், உள்ளூர் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவையான மரக்கறி வகைகள் மற்றும் பலசரக்குகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

25 வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்

JRS AUTO TECH.CA INC
All Mechanical & Electrical Repairs
9 AM TO 9 PM – 7 DAYS A WEEK
ENGINE, TRANSMISSION, RUSTPROOFING, OILCHANGE, TYRES, AUTOGLASS & TINT
416-206-9489 | 416-628-4399
2655 Lawrence Ave, E, Unit 5 Scarborough, ON M1P 2S3

உதயம் 1332 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 15, 2021

# ஸ்காபுறோவிலும் மொன்றியாலிலும் ‘உதயன்’ வெள்ளி விழாவும் ‘நண்பன்’ விருது விழாவும்

## முறையே அதிபர் கனகசபாபதி அவர்கள், இசைக் கலைஞர் வர்ண ராமேஸ்வரன் ஆகியோரின் பெயர் கொண்ட அரங்குகளில் இடம்பெறுகின்றன




எதிர்வரும் ஒக்டோபர் 30ம் திகதி ஸ்காபுறோவிலும் நவம்பர் 13ம் திகதி மொன்றியாலிலும் ‘உதயன்’ வெள்ளி விழாவும் ‘நண்பன்’ விருது விழாவும் நடைபெறவுள்ளன.

மேற்படி இரண்டு விழாக்களும், முறையே அதிபர் கனகசபாபதி அவர்கள். இசைக் கலைஞர் வர்ண ராமேஸ்வரன் ஆகியோரின் பெயர் கொண்ட அரங்குகளில் இடம்பெறுகின்றன என்ற தகவலையும் விழா அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

மேலதிக பல்சுவை கலை நிகழ்ச்சிகளும் விருது வழங்கலும் இரு மேடைகளிலும் நடைபெறவுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்குத.





விபரங்களுக்கு 416 732 1608 அல்லுத 514 684 3604 ஆகிய இலக்கங்களை அழைக்கவும். (உள்ளே விளம்பரங்கள் காணப்படுகின்றன)

# More Delhi to Toronto flights by Air Canada

## இந்தியாவின் டெல்லியிலிருந்து கனடாவின் ரொறன்ரோ பியர்சன் வரையும் ஏயர் கனடாவின் விமானங்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டுள்ளது

இந்தியாவின் தலைநகரமான டெல்லியிலிருந்து கனடாவின் ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்திற்கு கனடாவின் ஏயர் கனடா விமான சேவையின் விமானங்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டுள்ளதாக ஏயர் கனடா தெரிவித்துள்ளது.

கனடா அரசாங்கத்தின் அனுமதியுடன் தான் இந்தியாவில் இருந்தும் ரொரன்ரோவிலிருந்தும் மற்றும் இந்தியாவுக்கு செல்லும் நேரடி விமான சேவையையும் கொரோனா இரண்டாவது அலைக்கு பிறகு மீண்டும் தொடங்கியுள்ளமை இங்கு குறிப்பிட்த்தக்கது. *(தொடர்ச்சி உள்ளே 16ம் பக்கத்தில்)*

Air Canada

# ஸ்காபுறோ ஜெய் ஶ்ரீ சீரடிசாயி பாபா சமஸ்த்தானத்தின் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற சீரடிசாயி பாபாவின் 103 வது மகா சமாதி தினம்





ஸ்காபுறோ நகரில் **2605 Eglinton Avenue East -UNIT -1** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள ஜெய் ஶ்ரீ ‘சீரடிசாயி பாபா சமஸ்த்தானத்தின் ஆலயத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற சீரடிசாயி பாபா அவர்களின் 103 வது மகா சமாதி தினம் பெருவிழாவில் நூற்றுக்கணக்கான பாபா அடியார்கள் கலந்து கொண்டார்கள். விசேட தீப ஆராதனை. சிறப்பு அபிசேகங்கள் மற்றும் கூட்டுப் பிரார்த்தனை ஆகியன சிறப்பாக இடம்பெற்றன.

மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்ற சீரடிசாயி பாபா அவர்களின் 103 வது மகா சமாதி தின வழிபாடுகளில் பல்லின மக்கள் சார்ந்த பக்தர்கள் கலந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# நோர்வே பாராளுமன்ற உறுப்பினர் கம்சி குணரட்ணத்தின் மனமாற்றம் குறித்து ஆய்வை மேற்கொள்கிறேன் என்கிறார் அனந்தி சசிதரன்

”அண்மையில் நோர்வே நாட்டின் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்தெடுக்கப்பட்ட கம்சி குணரட்ணம் என்னும் ஈழத்தை பிறப்பிடமாகக் கொண்ட இளம் பெண். தமிழ்த் தேசியப் போராட்ட அரசியலையும் விடுதலைப்புலிகளையும் விமர்சித்த வகையில் தற்போது உலகத் தமிழ் மக்களின் எதிர்ப்பைச் சந்தித்துள்ளார். இந்த பெண் அரசியல்வாதியின் தற்போதைய ஈழத்தமிழர் நிலைப்பாடு குறித்தும் மிகுந்த ஆர்வமெடுத்து கம்சியின் மனமாற்றம் கண்ட அரசியற் பின்னணி குறித்து நான் ஓர் ஆய்வை மேற் கொண்டுவருகிறேன். அதிலே கிடைக்கும் தரவுகளை அனைவருக்கும் பொது விளக்கத்திற்காக முன்வைக் கவும் தயாராக இருக்கிறேன்”

(தொடர்ச்சி உள்ளே 5ம் பக்கத்தில்)



தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H-Selvanayagam Broker